நற்றிணை விருந்து

CONNEMARA PUBLIC LIBRARY
30 MAR 1958
MADRAS
149
3-58

டாக்டர் மு. வரதராசன்

நற்றிணை விருந்து

டாக்டர் மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை – 1

ரூ. 2

முதல் பதிப்பு : ஏப்ரல் 1953

உரிமை ஆசிரியர்க்கு

ஆசிரியரின்

மற்ற நூல்கள் :

நெடுந்தொகை விருந்து
முல்லைத்திணை
இலக்கிய ஆராய்ச்சி
கண்ணகி
மாதவி
தமிழ் நெஞ்சம்
மணல் வீடு
ஓவச் செய்தி
திருக்குறள் தெளிவுரை
திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்
கள்ளோ? காவியமோ?
பெற்ற மனம்
பாவை
மலர்விழி
கி. பி. 2000
விடுதலையா?
அந்த நாள்
செந்தாமரை
அல்லி
அறிஞர் பெர்னார்ட் ஷா
காந்தி அண்ணல்
கவிஞர் தாகூர்
பச்சையப்பர்
இளங்கோ
மணச்சான்று
காதல் எங்கே?
மொழியின் கதை
எழுத்தின் கதை
சொல்லின் கதை
மொழி நூல்
அரசியல் அலைகள்
அறமும் அரசியலும்
அன்னைக்கு
தம்பிக்கு
தங்கைக்கு
யான் கண்ட இலங்கை

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14

முன்னுரை

பாட்டைப் பயில்வதற்குச் சொற்களின் பயிற்சியும் சொற்றொடர்களின் பயிற்சியும் வேண்டும். சங்கப் பாட்டுக்களோ, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த பழம் பாட்டுக்கள். ஆதலின் சொற்பொருளிலும் சொற்றொடரிலும் இடர்ப்பாடுகள் இருத்தல் இயல்பே. ஆயினும் பிறமொழிகள் விரைவில் மாறித் திரிபுற்றது போல் தமிழ்மொழி பெரிதும் திரிபடையவில்லை. ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் ஆல்ப்ரெட் அரசர் காலத்தில் வழங்கிய ஆங்கிலமொழி இன்று உள்ள ஆங்கிலேயர்க்கு விளங்காதது ; அதற்கெனத் தனிப் பயிற்சியும் முயற்சியும் இருந்தாலன்றி அந்தப் பழைய ஆங்கிலம் அவர்களுக்கு வேற்றுமொழியாகவே புலப்படுகின்றது என்கின்றார் அறிஞர் விட்னே (An interval of five hundred years brings to us the Anglo-Saxon of King Alfred, which is absolutely a strange tongue to us, not less unintelligible than the German of the present day, and nearly as hard to learn—W. D. Whitney, Language and the Study of Language). சங்கத்தமிழ் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழே ஆயினும் இவ்வளவு பெரிய வேறுபாடு இல்லை. ஓரளவு முயற்சி மேற்கொண்டு பழைய சொற்களில் சிறிது கருத்துச் செலுத்தினால் போதும் ; சங்ககாலப் புலவர்களின் வரம்பு கடவாத கற்பனைச் செல்வமும் வாழ்வுக்கு உரிய கலையுணர்ச்சியும் நமக்கு முன்வந்து உதவும்.

* * * *

அழகிய ஓவியம் ஒன்று தீட்டப்படுகின்றது. தீட்டியவர் சிறந்த கலைஞர். அவருடைய கலையுணர்ச்சி அந்த ஓவியத்தைக்

காண்பவரின் உள்ளத்தில் பாயவேண்டும். அதற்குத் துணையாக ஒரு சிறிய குறிப்பு ஓவியத்தின் அடியில் எழுதப்படுகின்றது.

ஓவியம் கலை ; அடிக்குறிப்பு அதை உணர்வதற்கு ஒரு சிறு துணை.

பாட்டு ஓவியம் போன்றது ; பாட்டைப் பற்றிய விளக்கம் எல்லாம் அந்த அடிக்குறிப்பைப் போன்ற சிறிய துணையே ஆகும்.

உண்மையாகக் கலைவிருந்து பெற விரும்புகிறவர் திரும்பத் திரும்பப் பார்க்கவேண்டுவது ஓவியமே. கவிதைவிருந்து பெற விரும்புகிறவரும் திரும்பத் திரும்பக் கற்க வேண்டுவது பாட்டே.

நற்றிணை போன்ற சங்கப்பாட்டுக்கள் அவ்வாறு பல முறை பயின்று உணரத்தக்க கலைவிருந்துகள் ஆகும். ஆதலின் ஒரு முறையோ இருமுறையோ இந்தப் பாட்டுக்களைக் கற்பதால் பயன் பெற முடியாது. பல முறை பயில்வதற்கு உரிய சிறிய உதவியே பாட்டின்முன் தரப்பட்டுள்ள சிறு விளக்கம்.

* * * *

சங்கப் பாட்டுக்கள் தமிழர் பலர் அறிந்த இலக்கியச் செல்வமாக விளங்கினால்தான் எதிர் காலத்தில் வாழ்தல் இயலும். அதனால் எளிதில் கற்பதற்கு உரிய வகையில் இப்பாட்டுக்களை அமைத்தல் வேண்டுவதாயிற்று.

அரியதொரு நூலை, எளிய முறையில், வேறு வடிவில், சுருக்கமான விளக்கத்துடன், தொடர்ந்த கதை போன்ற போக்கில் தர முயன்றபோது என் நெஞ்சம் உற்ற தயக்கம் பெரிது ; மிகப் பெரிது. தமிழகம் இந்தச் சிறிய முயற்சியையும் ஏற்றருளும் என நம்புகின்றேன்.

மு. வ.

பொருள்

		பாட்டுஎண்	பக்கஎண்
1.	நெஞ்சே ! வெறுக்காதே	... 140	9
2.	அன்று இருந்தன	... 160	10
3.	தழை வாடுமே	... 359	12
4.	மறுக்க வழி இல்லை	... 32	13
5.	காரணம் இதுதான்	... 128	15
6.	குதிரைகள் அடிபடுக	... 58	17
7.	நினைப்பவர் வேறு யார் ?	... 104	18
8.	மறைந்துகொள்வோம்	... 307	19
9.	உழவனே ! காக்க	... 60	21
10.	துயில் மறந்தது	... 287	22
11.	மீனும் உறங்குமே	... 319	25
12.	கடிந்து கூறுவோம்	... 365	26
13.	சொல்லாமல் தப்பினேன்	... 17	28
14.	ஆட்டி விடட்டுமா	... 222	30
15.	கண்ணும் உறங்குமோ ?	... 61	32
16.	என்ன மனிதன் !	... 94	33
17.	அன்னை சொல்லவில்லையே !	... 27	34
18.	சொன்னால் அனுப்புவாளோ ?	... 68	36
19.	கருத்து என்னவோ ?	... 53	38
20.	அஞ்சுகின்றேன்	... 72	39
21.	மலையும் அழுகின்றது	... 88	41
22.	வாராமை நன்று	... 154	42
23.	பொல்லாத வழி	... 158	44
24.	அன்னை அறிந்தாளோ ?	... 206	45
25.	அவர்மலைக் காற்று	... 236	46

			பாட்டுஎண்	பக்கஎண்
26.	இன்னும் அலர்!	...	116	48
27.	என் வருத்தம் நினைப்பாரோ	...	303	50
28.	சாதலும் இனிதே	...	327	51
29.	நஞ்சும் உண்பர்	...	355	53
30.	தீமையும் ஆனது	...	188	54
31.	தேர் தங்குக	...	159	56
32.	நின்றால் போதுமோ	...	300	57
33.	சந்தனக் கொள்ளி	...	55	58
34.	நட்பின் தன்மை	...	378	60
35.	நெஞ்சின் போர்	...	348	62
36.	உலையில் தெளித்த நீர்	...	133	64
37.	தெய்வம் பரவுவோம்	...	358	65
38.	அறியாய் முருக!	...	34	67
39.	அவள்கண்கள் கலுழ்ந்தன	...	12	68
40.	என்றும் கைவிடாதே	...	10	69
41.	வருந்தாமல் செல்க	...	9	70
42.	நீ சிறிது விளையாடுக	...	362	72
43.	அவள்மேல் குற்றம் இல்லை	...	143	74
44.	நெஞ்சம் வேகின்றதே!	...	184	76
45.	பொய்யை நம்பினாள்	...	179	77
46.	துன்பமும் இன்பமும்	...	294	79
47.	எது செல்வம்?	...	210	80
48.	எம்போல் ஆவரோ?	...	330	81
49.	யான் ஒழிய வேண்டும்	...	180	82
50.	நீங்கி நின்றாள்	...	250	84
51.	அன்று மகிழ்ந்தவள்	...	370	85

			பாட்டுஎண்	பக்கஎண்
52.	உன் பேச்சு வேண்டா	...	380	87
53.	விருந்து வருக	...	120	90
54.	பிறர் கொடியவரே !	...	216	92
55.	சொன்னதும் நடுங்கினான்	...	100	93
56.	முன்னோர் மறந்தனரோ ?	...	337	94
57.	வாடையும் வந்ததே !	...	229	96
58.	பிரிய முடியுமோ ?	...	71	98
59.	பிடியின் புலம்பல்	...	318	99
60.	கண்கள் பிணிக்கும்	...	269	101
61.	நின்ற சொல்லர்	...	1	102
62.	நன்று செய்தாய் !	...	24	104
63.	ஏன் பிரிவேன் ?	...	166	106
64.	நெஞ்சம் கரைந்தது	...	308	107
65.	எமதும் உண்டு ஒரு திங்கள்	...	62	109
66.	தேய்ந்த பழங்கயிறு	...	284	110
67.	நெஞ்சு வருந்தி அலையுமே ?	...	56	112
68.	பூ விற்பவள் கொடியவள்	...	97	113
69.	மேகம் அங்கே தவழ்கின்றது	...	197	115
70.	அவர் கேட்கவில்லையோ ?	...	214	116
71.	மிகப் பேரன்பினர்	...	115	118
72.	அருளின்றி அழிவதோ ?	...	289	119
73.	மறக்க நேருமோ ?	...	396	121
74.	வரினும் பயன் இல்லை	...	64	122
75.	மறக்க முடியாதது	...	42	124
76.	குழலும் கேட்கின்றதே !	...	371	126
77.	பெருந்தகு நிலை	...	21	127

1. நெஞ்சே! வெறுக்காதே

காதல் கொண்ட நெஞ்சம், ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றாதது; ஒன்றையே நினைந்து அதன் பொருட்டுத் தன்னை இழக்கத் துணியும் நெஞ்சம் அது. தலைவியைக் கண்டு காதல் கொண்ட தலைவன், பிறகு தோழியை அணுகி அவளுடைய உதவியை நாடினான். தோழி அவனுக்கு உதவ முன்வரவில்லை. உடைந்த நெஞ்சத்தோடு நேரே தலைவியையே நாடிச் சென்றான். அவள் தன் தோழியர் கூட்டத்தோடு வீட்டு முற்றத்தில் பந்து ஆடிச் செல்வதைக் கண்டு தொலைவில் நின்றான். தோழியும் அவளும் தன்னைப் புறக்கணிக்கும்போது, தான் அவர்களை விடாமல் நாடிப் பின் செல்லுதல் தன் பெருமைக்குக் குறைவு அன்றோ என்று நெஞ்சம் வருந்தியது; வெறுத்தது. ஆயினும் காதல் பெரியதாய், அவளைத் தவிரத் தனக்கு வாழ்வு இல்லை என்பதை உணர்த்தியது. அந்நிலையில் தலைவன் தன் நெஞ்சை நோக்கிப் பின்வருமாறு கூறினான்.

" பெரிய கண்களை உடைய தோழியர் கூட்டம் மகிழுமாறு, தன் தந்தையின் நெடிய தேர் வழங்கும் நிலவுபோன்ற மணல் பரந்த முற்றத்தில் பந்து விளையாடிச் செல்கின்றாள்.

நம்மிடம் பரிவு இல்லாதவளாக இருக்கின்றாள். அவள் நமக்கு அருள் புரிந்தாலும் புரியாவிட்டாலும், கலங்காதே, கலங்கி அழியாதே. நெஞ்சே! அவளை இரந்து பின்நிற்பதை வெறுக்காதே. நம் துயரத்தைத் தீர்க்கும் மருந்து அவளே. அவளைத் தவிர வேறு எதுவும் யான் உற்ற நோய்க்குச் சிறிதளவும் மருந்தாக இல்லையே."

தலைவன் :

பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவி லாட்டி
அருளி னும் அருளாள் ஆயி னும் பெரிதுஅழிந்து
பின்னிலை முனியன்மா நெஞ்சே ! என்னதூஉம்
அருந்துயர் அவலம் தீர்க்கும்
மருந்துபிறிது இல்லையான் உற்ற நோய்க்கே*

2. அன்று இருந்தன

தலைவன் தலைவியைக் கண்டு காதல் கொண்ட பிறகு, தனித்திருந்து வருந்தத் தொடங்கினான். முன்போல் தன் நண்பனோடு அடிக்கடி பழகுதலும் இல்லை. பழகும்போது, வழக்கம்போல் உள்ளம் கலந்து உரையாடுதலும் இல்லை.

*நற். 140. பூதங்கண்ணனார்.

ஆயம் - தோழியர் கூட்டம். பரிவிலாட்டி - பரிவு இல்லாதவள் - அன்பிலாதவள். பெரிது - மிக. பின்னிலை - தாழ்ந்து கேட்டுப் பின்நிற்றல். முனியல் - வெறுக்காதே. மா - முன்னிலை அசை. அவலம் - துயரம். பிறிது - வேறு. என்னதும் - எந்தச் சிறு அளவிற்கும்.

நண்பன் இதன் காரணம் தெரியாமல் கவலைப்பட்டான். முன்போல் கலந்து பழகாதது மட்டும் அல்லாமல், தலைவன் ஊக்கம் குறைந்து சோர்ந்து மெலிவதையும் கண்டான். என்ன காரணமோ என்று நண்பன் வருந்தினான். உண்மையான காரணத்தை மறைக்காமல் சொல்லுமாறு தலைவனைக் கேட்டான். தலைவன் தன் காதலியைப் பற்றி எடுத்துரைத்தான். அதைக் கேட்ட நண்பன், " ஒரு பெண்ணின் காரணமாக இவ்வாறு வருந்தலாமோ ? நாணம் முதலிய பண்புகள் மிக்க நீ இவ்வாறு வாடி வருந்துதல் தகுமோ ?" என்று கடிந்து கூறினான். அதற்கு மறுமொழியாகத் தலைவன் பின்வருமாறு கூறினான் :

" நீ போற்றுகின்ற நல்ல பண்புகள் எனக்கும் இருந்தன. நயம், நட்பு, நல்ல நாணம், பயன்படும் திறன், பொதுவான நற்பண்பு, பிறர்தன்மை அறிந்து நடத்தல் ஆகிய இவை எல்லாம் என்னிடமும் இருந்தன. அது ஒரு காலம். அந்த நிலைமை இப்போது மாறியது. இவளுடைய கண்களை யான் காண்பதற்குமுன்னே அந்தப் பண்புகள் எல்லாம் உடையவனாக இருந்தேன். "

தலைவன் :

நயனும் நண்பும் நாணு நன்கு உடைமையும்
பயனும் பண்பும் பாடுஅறிந்து ஒழுகலும்
நும்மினும் உடையேன் மன்னே ... இவள்
அரிமதர் மழைக்கண் காணா ஊங்கே.*

---

*நற். 160.

பாடு - தன்மை. மன் - அது போயிற்றே என்னும் கருத்தை உணர்த்தும் இடைச்சொல். அரி - செவ்வரி. மதர் - செழிப்பு. மழை - குளிர்ச்சி. காணாஊங்கே - காண்பதற்கு முன்னே.

3. தழை வாடுமே

தலைவன் தலைவியிடம் காதல் கொண்டான். அவளுடன் நெருங்கிப் பழகும் உயிர்த் தோழியைக் கண்டறிந்தான். அந்தத் தோழியின் உதவியை நாடினான். ஏற முடியாத உச்சியில் உள்ள சில மரங்களின் தழையைக் கொண்டுவந்து அதைத் தழையுடையாகத் தொடுத்தான். தன் ஆண்மையையும் காதலையும் ஒருங்கே தெரிவிக்கும் பொருளாக அதை எடுத்துச் சென்றான்; தோழியிடம் தந்து அதைத் தலைவியிடம் சேர்க்கு மாறு வேண்டினான். முதலில் பலவாறு மறுத்த தோழி, பிறகு அவனுடைய உண்மையான அன்பையும் உறுதியை யும் உணர்ந்து, அவனுடைய வேண்டுகோளுக்கு இசைந் தாள். அந்தத் தழையைத் தலைவியிடம் கொண்டு சென்றாள். அதைக் கண்டதும் தலைவியின் முகம் மறுப்பதுபோல் இருந் தது. அந்தக் குறிப்பைத் தோழி அறிந்தாள். அவளிடம் நேரடியாக அவனுடைய வேண்டுகோளையும் தன் கருத்தை யும் சொல்வதால் இனிப் பயன் இல்லை என உணர்ந்தாள். பற்றற்றவள்போல், தனக்கென ஒரு கருத்தும் நோக்கமும் இல்லாதவள்போல், அந்தத் தழை இனி வாடிவிடுமே என்று எடுத்துரைத்தாள். தலைவி என்ன எண்ணி அஞ்சுகிறாள், ஏன் தயங்குகிறாள் என்பன உய்த்துணர்ந்து, தானும் தாய்க்கு அஞ்சுவதாகக் கூறினாள். தழையை ஏற்காமல் மறுத்து விட்டால், தலைவனுடைய மனம் நோகுமே என்று தான் அஞ்சுவதாகவும் கூறினாள். இவ்வாறு அவளுடைய மன நிலையையே தன் மன நிலையாக எடுத்துரைத்தால் தலைவி மறுக்காமல் இசைவாள் என்று நம்பி நயமுறக் கூறினாள்.

"நீ உடுப்பதற்காகத் தலைவன் தழையுடை கொண்டு வந்து தந்தான். அவற்றை நாம் உடுத்துக்கொள்ளலாம் என்றால், தாய்க்காக அஞ்சவேண்டியுள்ளது. ஏற்றுக்

கொள்ளாமல் மறுத்துக் கொடுத்துவிடலாம் என்ருல், தலைவனுடைய துன்பத்துக்காக அஞ்சவேண்டியுள்ளது. இந்த இருநிலைக்கும் இடையே அவை வாடாமல் இருக்க முடியுமோ? தலைவனுடைய மலையில் போர் செய்யும் மலையாடும் பாய முடியாத உயரத்தில், தெய்வம் உள்ள மலைப்பக்கத்தில் கொய்வதற்கு அரியனவாய்க் கிடைத்த தழைகளாகிய இவை வாடாமல் இருக்க முடியுமோ?"

தோழி :

...... நாடன்
உடுக்கும் தழைதந் தனனே ; அவைதாம்
உடுப்பின் யாய்அஞ் சுதுமே ; கொடுப்பின்
கேளுடைக் கேடுஅஞ் சுதுமே ; ஆயிடை
வாடல கொல்லோ தாமே அகல்மலைப்
போருடை வருடையும் பாயா
சூருடை அடுக்கத்த கொயற்குஅருந் தழையே.*

4. மறுக்க வழி இல்லை

தலைவனுடைய அன்பை உணர்ந்து, அவன் உண்மையானவன் என்று தெளிந்தாள் தோழி. அவனுடைய வேண்டுகோளுக்கு இசைந்து, தலைவியிடம் கூறுவதாக வந்தாள். தலைவியிடம் கூறினுள். தலைவி அவனுடைய

*நற். 359. கபிலர்.

யாய் - தாய். கேள் - உறவு, நட்பு. கேடு - மனம் கலங்கி அழியும் துன்பம். போர் உடை - போர் செய்யும் தன்மை உடைய. வருடை - மலையாடு. சூர் - தெய்வம். அடுக்கம் - அடுக்கிய மலைத்தொடர். கொயற்கு அரு - கொய்வதற்கு அருமையான.

காதலைப் பற்றி ஒன்றும் அறியாதவள்போல் பேசி மறுத்தாள். அப்போது தோழி சிறிது வற்புறுத்திக் கூறும் முறையில் பின்வருமாறு எடுத்துரைத்தாள்.

" அந்த மலைக்கு உரியவனான தலைவன் நம்மை விரும்பி எப்போதும் வருந்தினான் என்று யான் சொன்னால், என் வாய்மொழியை நீ நம்பவில்லை. யான் சொல்வதைத் தெளியா விட்டால் போகட்டும். நீயாகவே எண்ணிப்பார்; உனக்கு வேண்டியவர்களான தோழியரோடு கலந்து எண்ணிப்பார். அறிவால் ஆராய்ந்து அறிந்து பிறகுதான் அளவளாவுதல் வேண்டும். அவனுடைய வேண்டுகோள்கள் மறுப்பதற்கு அரியவை. தோழி! பெரியோர் எப்போதும் ஆராய்ந்தபின் நட்புக் கொள்வார்களே அல்லாமல், நட்புக் கொண்டபின் ஆராயமாட்டார்கள். அன்பு கொண்டு பழகியவரிடத்து அவ்வாறுதான் நடப்பார்கள். ஆதலின் நீயும் அவ்வாறு செய்தலே நல்லது."

தோழி :

அம்மலை கிழவோன் நம்நயந்து என்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய் ;
நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும் ; மறுதரற்கு
அரிய வாழி தோழி ; பெரியோர்
நாடி நட்பின் அல்லது
*நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே.**

---

*நற். 32. கபிலர்.

நயந்து - விரும்பி. தேறாய் - தெளியமாட்டாய். நுமர் - உன்னைச் சார்ந்தவர். அளவல் - பழகல். மறுதரற்கு - மறுப்பதற்கு. நட்டு - நட்புக்கொண்ட பிறகு.

5. காரணம் இதுதான்

தலைவி தினைப்புனத்தில் தலைவனைக் கண்டு காதல் கொண்டு பழகிய நாள்முதல், அவளுடைய வாழ்வில் பெரிய மாறுதல் நேர்ந்தது. தோழியிடமும் சொல்லாமல் பல நாள் மறைத்துவந்தாள். தலைவியின் மேனி வாடியதையும், நெற்றி ஒளி மங்கியதையும் கண்டு தோழி ஐயுற்றாள். தலைவி தன்னிடம் மறைக்காமல் சொல்வாள் என எதிர்பார்த்தாள். ஆனால் அவள் ஒன்றும் கூறாமல், தன் உள்ளத்துள் எல்லாம் ஒளித்து வாடி மெலிந்தாள். இவ்வாறு பலநாள் கழிந்தன. அந்நிலையில் ஒருநாள் அயலார் திருமணமுயற்சி செய்வதைப் பற்றித் தலைவி அறிந்தாள். தன் பெற்றோர் அதற்கு இசைந்து திருமண ஏற்பாடு செய்துவிடுவார்களோ என்று அவளுடைய உள்ளம் நடுங்கி வருந்தியது. அப்போது வேறு வழி இல்லை என்று தோழியின் உதவியையே நாடினாள். தோழியிடம் உண்மையை மறைக்காமல் சொன்னால், அவள் பெற்றோரிடம் தெரிவித்து, அயலாரின் திருமண முயற்சிக்கு இடம் இல்லாமல் செய்வாள் என எண்ணியே அவளுடைய உதவியை நாடினாள் ; பின்வருமாறு எடுத்துரைத்தாள்.

" 'பகலில் எரியும் விளக்கு ஒளி மழுங்கித் தோன்றுவது போல் உன் மேனி வாடுகிறதே ! கிரகணம் ஊர்ந்த திங்கள் போல் நெற்றி ஒளி மறைகிறதே ! அவ்வாறு இருந்தும் எனக்குக் காரணம் சொல்லவில்லையே ' என்று நீ என்மேல் வருந்தினாய். 'உனக்கு யான் ஓர் உயிரை இரண்டு உடம்பில் பகுத்து வைத்தாற் போன்ற நட்புச் சிறப்பு உடையேன் ஆகையால், யான் அதை அறிவேன் ' என்று கூறி மிக வருந்தினாய். வருந்தாதே, தோழி ! செழித்த கதிர்களை உடைய தினைப்புனத்தில் காவல் புரிந்தபோது இடையே ஒருவன்

கண்ணி அணிந்தவனாய், கழல் அணிந்தவனாய், தார் சூடிய வனாய் வந்தான். வந்து உடலும் உள்ளமும் குளிருமாறு என் முதுகை அணைத்தான். அதுமுதல்கொண்டு, அதனையே நினைந்த நெஞ்சத்தோடு வருந்துகிறேன். யான் உற்ற நோய் இப்படிப்பட்டது ஆயிற்று.''

தலைவி :

பகல்எரி சுடரின் மேனி சாயவும்
பாம்புஊர் மதியின் நுதல்ஒளி கரப்பவும்
எனக்குநீ உரையாய் ஆயினை ; நினக்குயான்
உயிர்பகுத் தன்ன மாண்பினேன் ஆகலின்
அதுகண் டிசினால் யானே என்றுநனி
அழுதல் ஆன்றிசின் ஆயிழை ! ஒலிகுரல்
ஏனல் காவலின் இடையுற்று ஒருவன்
கண்ணியன் கழலன் தாரன் தண்ணெனச்
சிறுபுறம் கவையின னாக அதற்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃதுஆ கின்றுயான் உற்ற நோயே.*

---

*நற். 128. நற்சேந்தனார்.

சுடரின் - விளக்குப் போல். பாம்பு - ராகு, கிரகணம். மதியின் - சந்திரன் போல். நுதல் - நெற்றி. கண்டிசின் - கண்டேன், அறிவேன். ஆன்றிசின் - விடுக. ஆயிழை - அழகிய அணிகலன் அணிந்த மாது. ஒலி - செழித்த, தழைத்த. குரல் - கதிர். ஏனல் - தினை. கண்ணி - தலைமாலை. சிறுபுறம் - கழுத்தை அடுத்த முதுகுப் பக்கம். கவையினன் ஆக - தழுவினன் ஆக. ஆகின்று - ஆயிற்று.

6. குதிரைகள் அடிபடுக

பகலில் வந்து தலைவியைக் கண்டு திரும்பிச் செல்லத் தொடங்கினான் தலைவன். இவன் இவ்வாறே பலநாளும் வந்து வந்து திரும்பினால், பிறகு கடமையை மறந்து களவொழுக்கத்திலேயே பலநாள் கழிப்பான் என்று தோழி அஞ்சினாள். ஆதலின், • அவனுடைய போக்கைச் சிறிது மாற்றிச் சில இடையூறுகளை ஏற்படுத்தினால்தான், திருமணம் செய்துகொள்ளும் கடமையில் முனைவான் என எண்ணினாள். அதனால் பகலில் வந்து திரும்பத் தொடங்கிய அவனை நோக்கி, "இன்று இரவு இங்கே தங்கிச் செல்லுக" என்றாள். அவன் அதற்கு மறுக்கவே, தோழி அவனுடைய தேரில் பூட்டிய குதிரைகளைப் பழிப்பவள்போல் பின்வருமாறு கூறித் தன் கருத்தைக் குறிப்பால் புலப்படுத்தினாள்.

"முதிர்ந்த செல்வம் பெற்றவர்களுடைய பொன்நகை அணிந்த புதல்வரின் சிறுதோள்களில் மாட்டப் பெற்ற சிறு பறையின் கண்ணில் எழுதப்பட்ட குருவி ஓயாமல் அடிக்கப் படுவதுபோல், இந்தக் குதிரைகள் கோல்கொண்டு அடிக்கப் படுவனவாக. பிரிவுத் துன்பத்தால் செயலற்றுச் சோரும் படியாக வந்த மாலைப் பொழுதில் உடல் சோர்ந்து துன்பம் நிறைந்த நெஞ்சத்தோடு யாம் திரும்பிச் செல்லுமாறு நேர்கின்றது. அதற்குக் காரணமாகத் தலைவனுடைய தேரின் நுண்ணிய நுகத்தில் பூட்டப்பட்டு ஓட அமைந்துள்ள குதிரைகள் அடிபடுவனவாக."

தோழி :

பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத்து எழுதிய குரீஇப் போலக்

கோல்கொண்டு அலைப்பப் படீஇயர் மாதோ !...
கையற வந்த பொழுதொடு மெய்சோர்ந்து
அவல நெஞ்சினம் பெயர...
ஓடுதேர் நுண்நுகம் நுழைந்த மாவே. *

7. நினைப்பவர் வேறு யார்?

தலைவன் இரவில் வந்து தலைவியைக் கண்டு மகிழ்ந்து திரும்புதலை வழக்கமாகக் கொண்டான். இரவில் மலைவழியில் வரும்போதெல்லாம் அவனுக்கு என்ன இடையூறு நேருமோ என்று தலைவி எண்ணி அஞ்சி அஞ்சி வருந்தினாள். தலைவனோ அவ்வாறு வராமல் நிற்பவனாகத் தோன்றவில்லை. அவனை எவ்வாறேனும் தடுத்து இரவில் வராமல் செய்ய வேண்டும் என்று எண்ணினாள். திருமணம் செய்து இல்லறம் நடத்துதலே இத்தகைய கவலையையும் அச்சத்தையும் போக்கும் வழி என்று உணர்ந்தாள். தோழியிடம் கூறினால், அவள் தலைவனுக்கு அறிவுறுத்துவாள் என்று தோழியை நோக்கிக் கூறினாள்.

" ஒலி மிக்க மலைநாட்டுத் தலைவனுடைய மார்பை விரும்பி வாழும் யான் ஒருத்தி தவிர, வேறு யாரேனும் உள்ளனரோ? நள்ளிரவில், பாம்புகள் வாழும் பிளப்புக்களை உடைய உயர்ந்த மலை புரண்டு சிதறுமாறு இடி சினம்கொண்டு

**நற். 58. முதுகூற்றனார்.*

தோட்கோத்த - தோளில் கோக்கப்பட்ட. செவ்வரி - சிவந்த வரிகளை உடைய. கண்ணகத்து - கண்ணில் (பக்கத்தில்). குரீஇ - குருவி. படீஇயர் - படுக. கையற - சோர்வுற. அவலம் - துன்பம். பெயர - திரும்பிச் செல்லுமாறு. மா - குதிரைகள்.

இடித்து எறிகின்ற இராப்பொழுதையும், பெரிய வெள்ளத்திற்கு வழி இல்லாமல் குறுக்கிட்ட மலைச்சாரலில் உற்றுப் பார்க்க முடியாத சிறுவழியையும் நினைந்து வருந்துவோர் வேறு யாரேனும் உள்ளனரோ ?"

தலைவி :

ஆர்கலி வெற்பன் மார்புநயந்து உறையும்
யானே அன்றியும் உளர்கொல் ? பானாள்
பாம்புடை விடர ஓங்குமலை மிளிர
உருமுச்சிவந்து எறியும் பொழுதொடு பெருநீர்
போக்குஅற விலங்கிய சாரல்
நோக்கருஞ் சிறுநெறி நினையு மோரே.

8. மறைந்துகொள்வோம்

இரவில் குறித்த இடத்தில் தலைவன் வந்து தலைவியைக் கண்டு சென்ற நாட்களில், அவனுடைய வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தனர் தலைவியும் தோழியும். அப்போது அவனுக்கும் அவளுக்கும் இடையே நிலையான அன்பை வளர்ப்பதும், ஒருவர் செலுத்தும் அன்பை மற்றொருவர் உணர்ந்துகொள்ளுமாறு செய்வதுமே தோழியின் கடமைகளாக இருந்தன. அதனால் ஒருநாள் தலைவன் வரும் ஒலி

---

*நற். 104. பேரிசாத்தனார்.

ஆர்கலி - ஒலி. வெற்பன் - மலைநாட்டுத் தலைவன். நயந்து - விரும்பி. பானாள் - நள்ளிரவில். விடர் - பிளப்பு. மிளிர - புரண்டு விழ. உருமு - இடி. சிவந்து - சினங்கொண்டு. விலங்கிய - குறுக்கிட்ட. நினையுமோர் - நினைப்போர்.

கேட்டதும் ஒரு புன்னைமரத்தின் புறமாக ஒளிந்துகொள்ள வேண்டும் என்றும், தலைவன் வந்து தம்மைக் காணாமல் துன்புறுவதை அங்கே மறைந்திருந்து காணவேண்டும் என்றும் கூறினாள். அவ்வாறு அவன் துன்புறுவதைக் கண்டு தலைவி அவனுடைய அன்பை உணர்ந்து மகிழவேண்டும் என்பதே தோழியின் நோக்கம்.

" குதிரை பூட்டிய பெரிய தேரின் மணியும் ஒலிக்கின்றது. பெயர்ந்து நடந்துவரும் ஏவலாளரும் ஆரவாரம் செய்கின்றனர். தலைவன் வருகின்றான் தோழி! வீட்டின் அருகே வளைந்துள்ள புன்னைமரத்தின் பெரிய அடிமரத்தின் பின்னே மறைந்துகொள்வோம், வா. இந்த நள்ளிரவில் பூக்கள் மலர்ந்த சோலையில் கூடும் இடத்தில் வந்து நம்மைக் காணாமல் அவன் படும் பெரிய துன்பத்தைச் சிறிது காண்போம்."

தோழி :

கவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும் ;
பெயர்பட இயங்கிய இளையரும் ஒலிப்பர் ;...
வருமே தோழி வார்மணல் சேர்ப்பன் ;
இற்பட வாங்கிய முழவுமுதல் புன்னை
மாஅரை மறைகம் வம்மதி ; பானாள்
பூவிரி கானல் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழில் காணாது அவன்
அல்லல் அரும்படர் காண்கம்நாம் சிறிதே.

---

*நற். 307. அம்மூவனார்.

கவர்பரி - செல்வதில் விருப்பம் உள்ள குதிரைகள். இளையர்- ஏவலாளர். சேர்ப்பன் - கடற்கரைப் பகுதித் தலைவன். வாங்கிய - வளைந்த. முதல் - அடிமரம். பா - பெரிய. அரை - அடிமரம். வம்மதி - வா ; மதி - முன்னிலை அசை. பானாள் - நள்ளிரவு. படர் - துன்பம்.

9. உழவனே ! காக்க

களவொழுக்கத்தைப் பற்றி எவ்வாறோ ஐயுற்றாள் தாய். வீட்டை விட்டு வெளியே செல்லாமல் தலைவியைத் தடுத்துக் காத்தாள். தலைவன் வேலிப்புறமாக வந்து நின்றான். அவனைக் கண்ட தோழி அவனுக்கு இந்த நிலைமையைத் தெரிவிக்கவேண்டும் என முயன்றாள். நேரில் சென்று தலைவனைக் கண்டு கூறும்போது தாய் பார்த்தால் என்ன செய்வது என்று அஞ்சி, வேறு வழியாகத் தெரிவிக்க எண்ணினாள். அவ்வழியாக உழவன் ஒருவன் செல்வதைக் கண்டு, உழவனுக்கு ஒரு செய்தி சொல்வதுபோல் கூறினாள். அதைத் தலைவன் கேட்டு நிலையை உணர்ந்திடுமாறு செய்தாள்.

" மலை கண்டாற் போன்ற நிலைபொருந்திய உயரம் உள்ள பெரிய நெல்கூடுகள் பல உடைய உழவனே ! எருமை கொண்டு உழும் உழவனே ! நீர் பொருந்திய வயலில் நாற்று முடிச்சுகளை நடுவதற்காக உன் ஆட்களோடு நீ அங்கே போகின்றாயா ? அப்படியானால், வளமான கோரையையும் நெய்தலையும் களை என்று களைந்து அப்பால் எறிந்து விடாதே ; அவற்றைக் காப்பாற்று. எம் வீட்டில் உள்ள இந்த மடந்தை (தலைவி) அழகிய வளையாகப் பூட்டிக்கொள்வனவும் தழையாக அணிந்துகொள்வனவும் அந்தக் கோரையும் நெய்தலுமே."

தோழி :

மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பின்
பெருநெல் பல்கூட்டு எருமை உழவ !...
நீர்உறு செறுவில் நாறுமுடி அழுத்தநின்
நடுந ரோடுநீ சேறி ஆயின்வண்
சாயும் நெய்தலும் ஓம்புமதி எம்இல்

மாயிருங் கூந்தல் மடந்தை
ஆய்வளைக் கூட்டும் அணியுமா ரவையே.*

அவைகளை விரும்பி அணிந்துகொள்கின்ற தலைவி இப்போது இல்லில் காக்கப்படுதலால் வயலுக்கு வர முடியவில்லை என்பதையும், இப்போது அவற்றை அழிக்காமல் விட்டு வைத்தால் பின் ஒரு காலத்தில் வந்து பறித்துக்கொள்வாள் என்பதையும் குறிப்பிட்டு, தலைவி வீட்டினுள் தடுக்கப்பட்டுக் கிடக்கும் செய்தியைத் தலைவன் தானே எண்ணி உணருமாறு செய்தாள்.

10. துயில் மறந்தது

களவொழுக்கத்தைப் பற்றி ஐயுற்று அறிந்தாள் தாய்; அறிந்தபின், வீட்டைவிட்டு வெளியே செல்லாதவாறு தலைவியைத் தடுத்தாள். வீட்டினுள் அடைபட்டுத் தலைவனைக் காணவும் முடியாமல் வருந்தினாள் தலைவி. நாளுக்கு நாள் அவளுடைய துயரம் பெருகிற்று. இரவிலாவது தலைவன் வரக்கூடும் என்று இரவெல்லாம் கண்விழித்து வருந்தலானாள். உடல் கெடாதவாறு உறங்கவேண்டும் என்று முயன்றாலும் அவளால் முடியவில்லை. நள்ளிரவில் ஏதேனும் ஒரு மரத்தில் பறவைக் கூட்டம் கலந்து எழுந்து ஒலி

*நற். 60. தூங்கலோரியார்.

நிவப்பு – உயரம். செறு – வயல். நாறு – நாற்று. சேறி – செல்லுதி – செல்லுவாய். சாய் – கோரை. ஓம்பு – காக்க. மதி – முன்னிலை அசை. அணியுமாரவையே – அணியும் அவையே; ஆர் – அசை.

செய்தலைக் கேட்டாலும், தலைவனுடைய தேரின் மணி ஒலியோ என்று அவளுடைய நெஞ்சம் ஏங்கி நின்றது. இவ்வாறு உறக்கம் இழந்து விழித்திருந்து வருந்தும் நிலைமை தொடர்ந்து நீட்டித்தது. வீட்டினுள் அடைபட்டு இவ்வாறு வருந்தும் நிலைமை அவளுடைய உள்ளத்தில் வேறொரு நிகழ்ச்சியை நினைவூட்டியது. அவள் வீரர்களின் மரபில் வந்தவள். தமிழகமும் அக்காலத்தில் அடிக்கடி போர்களையும் மதில்முற்றுகைகளையும் கண்டுவந்தது. ஆதலின் பலநாளாக உறங்காமல் கண்விழித்துக் காவல் புரியும் வீரன் ஒருவனுடைய நிலைமை அவளுடைய நினைவுக்கு வந்தது.

மதிலை முற்றுகை இட்டு யானைப்படையுடன் பகை வேந்தன் வந்து தங்கியுள்ளான். அந்த நல்ல மதிலுக்குள் இருப்பவர்கள் பெருமை கொள்ளத்தக்க வீரன் ஒருவன் உள்ளேயிருந்து அவர்கள் அஞ்சாதவாறு காவல்புரிகின்றான். அவர்களையும் மதிலையும் காக்கும் பொறுப்பு ஏற்ற அந்த வீரன் ஒரு சிறிதேனும் கண் அயர்ந்து உறங்க முடியுமா? வெளியே சென்று களம் குறித்துப் போர் செய்வதற்கு வீரன் தயங்கமாட்டான். ஆனால் மதிலுக்குள் அடைபட்டு உறங்காமல் கிடந்து காவல் புரிவது அவனுக்குப் பெருந் துன்பமே ஆகும். அதுபோல் தான் வீட்டினுள் கிடந்து கண்விழித்துப் பலநாள் வருந்த வேண்டியுள்ளதே எனத் தலைவி வருந்தினாள்.

"வானம் போல் உயர்ந்த மதில் கெடும்படியாக முற்றுகையிட்டு யானைப்படை உடைய பகைவேந்தன் அதன்புறத்தே வந்து தங்கியிருக்க, அந்த நல்ல மதிலை உடையவர்கள், 'யாம் தக்க காவல் உடையேம்' என்று போற்றத்தக்க பெருந்தகைமை உள்ள வீரன் தன் உறக்கத்தை மறந்து காவல் புரிந்து மதிலுக்குள் இருத்தல்போல்

ஆயிற்று என் நிலைமை. அஞ்சத்தக்க முதலையாகிய பகைக்கும் அஞ்சாமல் காதல்மிகுதியால் இராக்காலத்தில் தலைவன் வந்த அந்த நாட்களில் என் நெஞ்சம் கெட்டழியாத அஞ்சாமை உடையதாக இருந்தது. அத்தகைய என் நெஞ்சம், இப்போது நள்ளிரவில் பறவைகளின் ஒலியைக் கேட்கும்போதெல்லாம் தலைவனுடைய தேர்மணியின் தெளிந்த ஒலியோ என்று ஏங்குகின்றதே! ஊரெல்லாம் உறங்கும் இராக்காலத்திலும் இவ்வாறு உறக்கத்தை மறந்து ஏங்குகின்றதே!"

தலைவி :

விசும்புஉறழ் புரிசை வெம்ப முற்றிப்
பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்த
நல்எயில் உடையோர் உடையம் என்னும்
பெருந்தகை மறவன் போல...சேர்ப்பன்
நாம முதலை நடுங்குபகை அஞ்சான்
காமம் பெருமையின் வந்த ஞான்றை
அருகா தாகிய வன்கண் நெஞ்சம்
நள்ளென் கங்குல் புள்ஒலி கேட்டொறும்
தேர்மணித் தெள்ளிசை கொல்என
*ஊர்மடி கங்குலும் துயில்மறந் ததுவே**

---

*நற். 287. உலோச்சனர்.

உறழ் - போன்ற. புரிசை - மதில். வெம்ப - வாட. பைங்கண் - பசிய கண்களை உடைய (யானை). இறுத்த - தங்கிய. எயில் - மதில். மறவன் - வீரன். சேர்ப்பன் - நெய்தல் நிலத் (கடற்பகுதித்) தலைவன். நாமம் - அச்சம். ஞான்றை - ஞான்று - பொழுது. அருகாது - அழியாது. வன்கண் - அஞ்சாமை உடைய. மடி - சோர்ந்து உறங்குகின்ற.

11. மீனும் உறங்குமே

களவொழுக்கத்தைப் பற்றி ஐயுற்று அறிந்த தாய் மகளை வெளியே செல்லாதவாறு தடுத்து வீட்டினுள் நிறுத்திக் காத்தாள். ஆதலால் தலைவன் பல முறை வந்தும் அவளைக் காணமுடியாமல் வருந்தினான். அதனால் அவன் நள்ளிரவிலும் உறங்காமல் வருந்தும் நிலை உற்றான். அப்போது வருந்திப் பின்வருமாறு தனக்குள் கூறிக்கொண்டான். அவன் வாழும் இடம் கடற்கரையில் அமைந்த சிற்றூர். நள்ளிரவில் கடலின் ஒலியும் அடங்குவது போல் தோன்றும்போது தன் உள்ளத்துயரை நன்கு உணர முடிந்தது. அதனால் வருத்தம் மிகுந்தது. கடலில் உள்ள மீன்கள் அங்கும் இங்கும் பிறழாமல் ஒலி செய்யாமல் அமைதியாய் உறங்குகின்றனவோ என எண்ணினான். மீன்களுக்கு உள்ள அமைதியான உறக்கமும் தனக்கு இல்லையே என வருந்தினான்.

"ஒலி அடங்காத கடலும் ஒலி அடங்கிவிட்டது. ஓயாமல் வீசும் காற்றும் பூந்துகள் கிளரும் கடற்கரைச் சோலையில் அமைதியுற்றது. மணல் மிக்க இந்தப் பழைய ஊரில் அகன்ற நெடுந்தெருவில் ஆண்கூகை பெண்கூகையோடு சென்று அரிய பெரிய சதுக்கத்தில் அஞ்சும்படியாக ஒலிக்கின்றது. பேய்கள் வெளியே கிளம்பும் நேரமாகிய மயங்கிய இருளை உடைய இந்த நள்ளிரவில், பாவை போன்ற அழகும் பருத்த மெல்லிய தோள்களும் உடைய இளமை மிக்க காதலியின் தேமல் படர்ந்த அழகிய மார்பைத் தழுவ எண்ணி, மீன்கள் உறங்கும் நேரத்திலும், யான் கண் உறங்காமல் கிடக்கின்றேன். என் நிலை என்ன ஆகுமோ?"

தலைவன் :

ஓதமும் ஒலிஓ வின்றே ; ஊதையும்
தாதுஉளர் கானல் தெளவென் றன்றே ;
மணல்மலி மூதூர் அகல்நெடுந் தெருவில்
கூகைச் சேவல் குராலோடு ஏறி
ஆரிருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும் ;
அணங்குகால் கிளரும் மயங்குஇருள் நடுநாள்
பாவை அன்ன பலர்ஆய் வனப்பின்
தடமென் பணைத்தோள் மடமிகு குறுமகள்
சுணங்குஅணி வனமுலை முயங்கல் உள்ளி
மீன்கண் துஞ்சும் பொழுதும்
*யான்கண் துஞ்சேன் யாதுகொல் நிலையே.**

12. கடிந்து கூறுவோம்

தலைவன் வேலிப்புறமாக வந்து நின்றபோது, அவனைத் திருமண முயற்சியில் விரைவு படுத்த எண்ணிய தோழி, அவனைக் காணாதவள்போல் நடித்துப் பேசினாள். தலைவியிடம் அவனைக் கடிந்து கூறினாள். பெண்மைக்கு உரிய நாணத்தை விட்டும் அன்னையின் காவலைக் கடந்தும் தலைவனுடைய

*நற். 319. வினைத்தொழிற் சோகிரனார்.

ஓதம் - கடல். ஒலின்று - ஓய்ந்தது. ஊதை - காற்று. தாது - பூந்துகள், மகரந்தம். தெள என்றன்று - தெள என்றது, அமைதியுற்றது. கூகை - கோட்டான். ஆர் - அரிய. இரு - பெரிய. சதுக்கம் - நாற்சந்தி. அணங்கு - பேய். பலர் ஆய் - பலராலும் ஆய்ந்து செய்யப்பட்ட. வனப்பு - அழகு. தட - பெரிய. சுணங்கு - தேமல்.

ஊருக்கே சென்று நேரில் கண்டு பழித்துக் கூறிவிட்டு வருவோமா என்று தலைவியிடம் கூறினாள். அவன் ஊர் எங்கே உள்ளது என்று தெரியாத நிலையில் அவனை நம்பி வாழ்வதையும் அத்தகைய நம்பிக்கைக்கு உரிய வகையில் சான்றோனாக அவன் நடந்துகொள்ளவில்லை என்பதையும் அவன் உள்ளத்தில் பதியுமாறு மறைமுகமாக எடுத்துரைத்தாள்.

"அரிய காவல் புரியும் அன்னையின் காவலையும் கடந்து, வீட்டின் பெரிய வாயிலையும் கடந்து, ஊர்மன்றத்திற்குச் சென்று, பகற்பொழுதிலே பலரும் காணுமாறு வாய்திறந்து, அவனுடைய ஊர் எங்கே என்று கேட்டறிந்து போய் வருவோமா? தோழி! 'நீ சான்றோய் அல்லை (உனக்குப் பெருந்தன்மை இல்லை)' என்று தலைவனை நேரில் கடிந்து கூறிவிட்டு வருவதற்காகப் போவோமா?"

தோழி :

அருங்கடி அன்னை காவல் நீவிப்
பெருங்கடை இறந்து மன்றம் போகிப்
பகலே பலரும் காண வாய்விட்டு
அகல்வயல் படப்பை அவன் ஊர் வினவிச்
சென்மோ வாழி தோழி... நாடனைச்
சான்றோய் அல்லை என்றனம் வரற்கே.*

---

*நற். 365. கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சோகோவனார்.

கடி - காவல். நீவி - நீங்கி. கடை - வாயில். இறந்து - கடந்து. மன்றம் - ஊரின் பொது இடம். போகி - போய். அகல்வயல் படப்பை - அகன்ற வயல் சூழ்ந்த தோட்டங்களை உடைய (அவன் ஊர்). சென்மோ - செல்வோமோ. என்றனம் வரற்கு - என்று கூறிவருவதற்கு.

13. சொல்லாமல் தப்பினேன்

களவொழுக்கத்தில் தலைவன் பகலில் வந்து செல்லும் காலத்தில், அவன் அவ்வாறு பல நாளும் வருவதைத் தடுத்துத் திருமணம் செய்துகொள்ளுமாறு தூண்டவேண்டும் என்று எண்ணினர் தலைவியும் தோழியும். அதற்கு ஏற்ற வாறு, அவன்நெஞ்சில் திருமண முயற்சி தோன்றும்வகையில் ஒரு நடிப்பு மேற்கொண்டனர். ஒரு நாள் அவன் வந்து மறைவான இடத்தில் நின்றான். அவன் வந்ததைக் காணாதவர்கள் போல் தோழியும் தலைவியும் நடித்து, களவொழுக்கத்தால் துன்பமே உறுவதாகப் பேசிக்கொண்டனர். தலைவி தோழியிடம் தன் துயரத்தை எடுத்துரைத்தாள். ஒருநாள் அவள் அழும்போது தாய் பார்த்துவிட்டதாகவும், அன்போடு காரணம் கேட்ட தாய்க்குத் தான் வாய் தவறி உண்மையை உரைக்க இருந்ததாகவும், நல்ல காலமாகச் சொல்லாமல் மறைத்துத் தப்பித்துக்கொண்டதாகவும் கூறினாள்.

"விடியற் காலத்தில் மழை பெய்து, நல்ல நெடிய மலையிலிருந்து கடலின் அலைபோல் அருவி விழுந்து ஓடி வந்தது. அகன்ற பெரிய காடு உள்ள இடம் அது. அந்த அருவி விழும் அழகை நோக்கியபடியே நின்றுகொண் டிருந்தேன். யான் முதல்முதலில் அவரைக் கண்ட இடம் அதுதான். ஆகையால், அழகை நோக்கி நின்றிருந்த எனக்கு அவருடைய நினைவு வரவே, கண்கள் கலங்கி அழுதேன். அழுகையை அடக்கிக்கொள்ள முயன்றேன். அடக்கியும் நிற்காமல் கண்கள் அழுதலைக் கண்ட தாய், "என்ன செய்தாய்! அழாதே!" என்று முத்தம் இட நெருங்கி மெல்லிய இனிய சொற்களைக் கூறினாள். அவற்றைக் கேட்ட யான், உயிரைவிடச் சிறந்த நாணத்தை மறந்துவிட்டு வாய்தவறி

உண்மையைச் சொல்லிவிட இருந்தேன். தலைவனுடைய மார்புதான் என் வருத்தத்திற்குக் காரணம் என்று சொல்லி விட இருந்தேன். எப்படியோ அவ்வாறு சொல்லாமல் தப்பித்துக்கொண்டேன்.''

தலைவி :

நாள்மழை தலைஇய நல்நெடுங் குன்றத்து
மால்கடல் திரையின் இழிதரும் அருவி
அகல்இருங் கானத்து அல்குஅணி நோக்கித்
தாங்கவும் தகைவரை நில்லா நீர்சுழல்பு
ஏந்துஎழில் மழைக்கண் கலுழ்தலின் அன்னை
'எவன்செய் தனையோநின் இலங்குஎயிறு உண்கு' என
மெல்லிய இனிய கூறலின் வல்விரைந்து
உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்து
உரைக்கல்உய்ந் தனனே தோழி !...
*வான்தோய் வெற்பன் மார்புஅணங்கு எனவே.**

தான் மறைந்திருக்கும்போது இவ்வாறு தலைவி கூறுதலைக் கேட்கும் தலைவன், உண்மை என உணர்ந்து உருகுவான்; தன்னால் அவளுக்கு நேர்ந்துள்ள துயரத்தை எண்ணி வருந்தி அதைத் தீர்க்க முயல்வான்; திருமண முயற்சியில் விரைந்து ஈடுபடுவான் என எண்ணியே தலைவி இவ்வாறு கூறினாள்.

---

*நற். 17. நொச்சி நியமங்கிழார்.

நாள்மழை - காலைமழை. தலைஇய - பெய்த. மால் - பெரிய. திரையின் - அலைபோல். இரு - பெரிய. அல்கு அணி - தங்கும் அழகு. தகைவரை - தடுக்குமளவு. ஏந்து எழில் - மிக்க அழகு. மழைக்கண் - குளிர்ந்த கண். கலுழ்தலின் - அழுதலால். எயிறு உண்கு - முத்தம் கொள்வேன். வல் - விரைவு. உய்ந்தனன் - தப்பினேன். வான் தோய் வெற்பன் - வான் அளாவிய மலை நாட்டுத் தலைவன். அணங்கு - வருத்தம்.

14. ஆட்டி விடட்டுமா?

ஒருநாள் பகலில் வேங்கைமரத்தின் கீழே தலைவியும் தோழியும் ஊசலில் ஆடிக்கொண் டிருந்தனர். அப்போது தலைவன் வந்து ஒருபுறம் ஒதுங்கி நின்றான். அவன் களவொழுக்கத்தைக் கைவிட்டுத் திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தவேண்டும் என்பது தோழியின் ஆவல். அதை வற்புறுத்த எண்ணிய தோழி, அவனைக் காணாதவள் போல் நடித்துத் தன் கருத்தை உணர்த்த முயன்றாள். அவனை அடிக்கடி காணாமையால் தலைவி மிக வருந்துவதாகவும், தான் அதற்கு ஒரு மருந்து கூறுவதாகவும், அவனைக் காணா விடினும் அவனுடைய மலையைக் காணின் துயரம் குறையும் என்பதாகவும், அவ்வாறு மலையைக் காணும் பொருட்டு அவளை ஊசலில் வைத்து வேகமாக உயரச் செல்லுமாறு ஆட்டிவிடுவதாகவும் கூறினாள்.

"கரிய அடிமரத்தை உடைய வேங்கையின் வளைந்த கிளையிலே (வடு ஏற்படுமாறு கட்டிய) கயிற்றால் ஆகிய சிறிய ஊசலை இழுத்து, வானத்தில் மெல்ல ஆடுகின்ற அழகிய மயில்போல் நீ தோன்றுமாறு, நான் இப்பொழுது உன்னைப் பிடித்து ஊக்கி, ஊசல் உயரச் செல்லுமாறு ஆட்டிவிடட்டுமா? தோழி! உறங்கும் பெண்யானையின் பக்கத்தில் மேகம் தோன்றி மறைக்க, அதைக் காணாமல் பெரிய ஆண்யானை பிளிறுகின்ற சோலை அமைந்த அவருடைய மலையை நீ காண்பதற்காக, கண்டு துயரம் தணிவதற்காக, அவ்வாறு ஆட்டி விடட்டுமா?"

தோழி :

கருங்கால் வேங்கைச் சிறுவீ வாங்குசினை
வடுக்கொளப் பிணித்த விடுமுரி முரற்சிக்

கைபுனை சிறுநெறி வாங்கிப் பையென
விசும்புஆடு ஆய்மயில் கடுப்ப யான்இன்று
பசுங்காழ் அல்குல் பற்றுவனன் ஊக்கிச்
செலஉடன் விடுகோ தோழி...
துஞ்சுபிடி மருங்கில் மஞ்சுபடக் காணாது
பெருங்களிறு பிளிறும் சோலைஅவர்
*சேண்நெடுங் குன்றம் காணிய நீயே.**

பெண்யானை மேகத்தால் மறைக்கப்பட்டதற்கே, அதைக் காணாமல் ஆண்யானை திகைத்து வருந்திப் பிளிறுகின்றது (ஒலிக்கின்றது) என்றால், விலங்குகளைவிட உயர்ந்த மக்களுள் ஆண்களுக்கு இத்தகைய அன்புணர்வு இல்லையா என்று குறிப்பாக உணர்த்துகிறாள். மேகம் தோன்றி மறைக்கும் நேரம் மிகச் சிறு நேரமே ; அதற்கே பிரிவுத் துன்பம் தாங்க முடியாமல் ஆண்யானை வருந்துகின்றதே ; காதலர் என்று கூறப்படும் அவர் சிலநாள் பிரிந்து தொலைவில் வேறு ஊரில் வாழும் கல்மனம் உடையவராக இருக்கின்றாரே ; பிரியாமல் உடன்வாழும் வகையில் திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தவேண்டும் என்று அவர் எண்ணவில்லையே என்று இத்தனைக் குறிப்புக்களையும் உணர்த்துகிறாள்.

---

*நற். 222. கபிலர்.

செவ்வீ - செந்நிற மலர்கள் உள்ள. முரி - முரிந்த பிரி. முரற்சி - கயிறு. கைபுனை சிறுநெறி - கையால் செய்யப்பட்ட சிறிய நெறிப்பு - கயிற்று ஊசல். பையென - மெல்ல. ஆய் - அழகிய. கடுப்ப - போல. பசுங்காழ் - பசும்பொன்னாலாகிய வடம் அணிந்த. அல்குல் - அரை, இடையை அடுத்த பகுதி. பற்றுவனன் - பற்றுவேனாகி - பற்றி. மஞ்சு - மேகம். பிளிறும் - ஒலிக்கும். காணிய - காண்பதற்காக.

15. கண்ணும் உறங்குமோ ?

தலைவன் வருவான் என்று எதிர்பார்த்துத் தலைவியும் தோழியும் இரவெல்லாம் உறங்காமல் கண்விழித்து வருந்தினர். அதை அவனுக்கு உணர்த்தவேண்டும் என்று விரும்பினாள் தோழி. அவனிடம் நேரில் சொல்வதால் அவ்வளவு பயன் விளையாது எனக் கருதி, அவன் வந்து வேலிப்புறமாக நின்று கேட்கும்போது, தலைவியும் தானும் பேசிக்கொள்வது போல் நடித்துத் தலைவியிடம் கூறினாள்.

"இதைக் கேள், அடி தோழி! நேற்று இரவில் வேட்கை மிக்க அவா வருத்த வெப்பமான மூச்சு விட்டு, அம்பு பட்ட பெண்மான்போல் வருந்திக்கொண்டிருந்தேன். அப்போது துயரத்தின் காரணத்தை அறிந்தவள் போல், அன்னை 'மகளே! நீ இன்னும் தூங்கவில்லையா?' என்றாள். என்றதும், யான் சொல் வெளிப்படாமல் என் நெஞ்சிற்குள்ளே 'தலைவன்வருகையை எண்ணியிருப்பவர்க்குக் கண்ணும் உறங்குமோ?' என்று சொல்லிக்கொண்டேன்."

தோழி :

கேளாய் எல்ல தோழி ! அல்கல்
வேணவா நலிய வெய்ய உயிரா
ஏமான் பிணையின் வருந்தினேன் ஆகத்
துயர்மருங்கு அறிந்தனள் போல அன்னை
' துஞ்சா யோ ?என் குறுமகள் !' என் றலின்
சொல்வெளிப் படாமை மெல்லஎன் நெஞ்சில்...
கான்கெழு நாடற் படர்ந்தோர்க்குக்
கண் ணும் படுமோ என் றிசின் யானே.*

---

*நற். 61. சிறுமோலிகனார்.

அல்கல் - நேற்றிரவு. வேணவா - வேட்கை மிக்க அவா. நலிய - வருத்த. வெய்ய - வெப்பமான மூச்சு. உயிரா - மூச்சு

16. என்ன மனிதன் !

வேலிப்புறமாக வந்து நின்ற தலைவன் கேட்டு உணரு மாறு தோழிக்கு உரைப்பவள்போல் தலைவி தன் துன்பத்தை எடுத்துரைத்தாள். தன் பெண்மையால் வேட்கையைத் தாங்கிக்கொண்டு வெளியே சொல்லாமல் வருந்துவதாகவும், அந்த நிலைமை தலைவனால் வந்ததாகவும், ஆயினும் அவன் கவலையின்றி யிருப்பதாகவும் கூறி அவனைப் பழித்தாள். திருமணம் செய்துகொள்ளாமையால்தான் இந்த நிலைமை உள்ளது என்று உணர்ந்து விரைந்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்யத் தலைவனைத் தூண்டும்வகையில் எடுத்துரைத் தாள்.

“காம நோயால் அலைக்கப்பட்டுக் கலங்கி வலிமை அழியும்போது தன் வேட்கையை வாய்விட்டுச் சொல்லுதல் ஆண்மகனுக்குப் பொருந்தும். ஆனால், யான் என் பெண்மை தடுப்பதன் காரணமாக நுட்பமாய்த் தாங்கி வருந்துகிறேன். தலைவன் என்ன மனிதனோ ! தன்னிடம் ஆர்வம் உடையவ ராய்த் தன் மார்பால் வருத்தமுற்று வருந்துவோரைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கின்றான் !”

தலைவி :

நோயலைக் கலங்கிய மதன்அழி பொழுதில்
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும் ;
யான்என், பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கி...

விட்டு. ஏ - அம்பு (பட்ட). குறுமகள் - இளமகளே. கான் - காடு. காடற்படர்ந்தோர்க்கு - காடனை நினைந்தவர்களுக்கு. என்றிசின் - என்றேன்.

என்ன மகன்கொல் தோழி ! தன்வயின்
ஆர்வம் உடையர் ஆகி
மார்புஅணங்கு உறுநரை அறியா தோனே.*

17. அன்னை சொல்லவில்லையே !

தலைவன் திருமண முயற்சியில் முனைய வேண்டும் என்ற நோக்கத்தோடு தோழி மறைமுகமாக அவனுக்கு அறிவுறுத்தித் தூண்ட விரும்பினாள். தலைவன் ஒருநாள் வரக் கண்டபோது, காணாதவள்போல் தலைவியோடு பேசத் தொடங்கினாள். பேச்சைக் கேட்டவாறே தலைவன் வேலிப் பக்கமாக நின்றான். தலைவியும் தானும் வீட்டை விட்டு வெளியே செல்லாதவாறு அன்னை தடுத்துள்ளதாகவும், தாம் ஒரு தவறும் செய்யாதிருக்க அன்னை சினம் கொண்டதாக வும் கூறி, வருந்துவதுபோல் நடித்தாள். அதைக் கேட்ட தலைவன் தன்னால் அவர்கள் துன்புறுவதாகவும், களவொழுக் கத்தை அன்னை எவ்வாறோ அறிந்து கடுமையாக நடத்துவ தாகவும் உணர்வான் என்றும், உணர்ந்து திருமணம் செய்து கொள்வதே வழி என்று தெளிவான் என்றும் நம்பியே தோழி இவ்வாறு பேசினாள்.

" நீயும் நானும் நேற்று மலர்களில் நுண்ணிய தாது களில் படியும் வண்டுகளை அகற்றி, கரையிலிருந்து நீங்கும் அலைகள் அழகுபடுத்திய வெண்மணல் நிறைந்த கரையில்

*நற். 94. இளந்திரையனார்.

மதன் - வலிமை. தட்ப - தடுக்க. அணங்கு - வருத்தம். உறுநர் - உறுவோர்.

உப்பங்கழி சூழ்ந்த சோலையில் விளையாடினோமே தவிர, மற்றவர்க்குத் தெரியாமல் மறைத்து நாம் ஒன்றும் செய்ய வில்லை. ஒருகால் ஏதேனும் இருப்பினும், அது வெளிப் பட்டுப் பிறர் அறிந்ததும் இல்லை. அன்னை என்ன கருதி யிருக்கிறாளோ ? தெரியவில்லை. பொய்கைதோறும் சிறிய பசிய இலைகளை உடைய நெய்தல்மலர்கள் பல கண்போல் பூத்திருத்தலைப் பார்த்தும், போய்ப் பறித்துச் சூடிக்கொள் ளுங்கள் என்று அன்னை சொல்லவில்லையே. வழக்கத்திற்கு மாறாகச் சொல்லாமல் இருப்பது என்ன காரணமோ ?"

தோழி :

நீயும் யானும் நெருநல் பூவின்
நுண்தாது உறைக்கும் வண்டினம் ஒப்பி
ஒழிதிரை வரித்த வெண்மணல் அடைகரைக்
கழிசூழ் கானல் ஆடியது அன்றிக்
கரந்துயாம் செய்ததொன்று இல்லை ; உண்டெனின்
பரந்துபிறர் அறிந்தன்றும் இலரே ; நன்றும்
எவன்குறித் தனள்கொல் அன்னை ? கயந்தோறு...
கண்போல் பூத்தமை கண்டும் நுண்பல
சிறுபா சடைய நெய்தல்
குறுமோ சென்றெனக் கூறா தோளே.*

அன்னை இற்செறித்தாள் (வீட்டை விட்டுச் செல்லாத வாறு தடுத்துக் காத்தாள்) என்ற செய்தியைத் தோழி

*நற். 27. குடவாயிற் கீரத்தனார்.

நெருநல் - நேற்று. வரித்த - அழகுபடுத்திய. கானல் - கடற் கரைச் சோலை. கரந்து - மறைத்து, ஒளித்து. அறிந்தன்றும் இலர் - அறிந்ததும் இலர். நன்றும் - மிகவும். எவன் - என்ன. கயந்தோறு - பொய்கைதோறும். பாசடைய - பசிய இலைகளை உடைய. குறுமோ - பறியுங்கள்.

குறிப்பாகப் புலப்படுத்தினாள். மலர் பறித்துச் சூடிக் கொள்ளுங்கள் என்று வழக்கமாகக் கூறுகின்றவள், அவ்வாறு இன்று கூறாமையாலேயே தானும் தலைவியும் மிக வருந்துவதாகத் தலைவன் உணருமாறு செய்தாள். அன்னை எவ்வாறோ களவொழுக்கத்தை அறிந்துகொண்டதே இதற்குக் காரணம் என்றும், இனி வெளியே செல்லும் உரிமை தராமல் துன்புறுத்துவாள் என்றும் தலைவனே உய்த்துணருமாறு விட்டாள். "மலர் பறிக்குமாறு கூறாமல் அமைதியாக இருந்ததே இவர்களை இவ்வளவு வருத்துமானால், இவர்கள் உள்ளத்தின் மென்மை எத்தகையது! இத்தகைய உள்ளங்கள் மேலும் வருந்துமாறு செய்தல் கூடாது" என்று தலைவன் உணர்ந்து வருந்தும் வகையில் தோழி எடுத்துரைத்தாள்.

18. சொன்னால் அனுப்புவாளோ?

தலைவன் வேலிப்புறமாக வந்து நின்றது கண்ட தோழி, அவன் கேட்டு உணருமாறு தலைவியிடம் சில சொற்கள் கூறினாள். வீட்டை விட்டு வெளியே செல்லாதவாறு தலைவியைத் தடுத்துள்ள நிலைமையை உணர்த்தினாள். மழை பெய்து மலையிலிருந்து வரும் புதுநீரில் குளித்தால் தலைவியின் துன்பம் தீரும்; ஆயின் அவ்வாறு வெளியே சென்று நீராடுக என அனுப்புமாறு அன்னைக்கு யார் சொல்லப் போகின்றார்கள் என்று ஏங்கினாள். தலைவன் அதைக் கேட்டால், தன்னால் தலைவிக்கு நேர்ந்த துன்பத்தை உணர்ந்து அது தீரும் வழி எண்ணித் திருமணம் செய்துகொள்வான் என்பதே அவள் நம்பிக்கை.

" விளையாடும் தோழியர் கூட்டத்தோடு வெளியே சென்று விளையாடாமல், இளம் பெண்கள் வீட்டினுள் அடங்கியிருத்தல் அறமும் ஆகாது ; மேம்பாடும் குன்றும். சிறுசிறு நுரைகளைச் சுமந்து மணம் உள்ள மலர்களை அடித்துக்கொண்டு பொங்கிவரும் புதிய நீரில் மனம் மகிழ ஆடினல் நன்மையாகும். விரைந்து சென்று யாரேனும் அன்னையை வணங்கிச் சொன்னல், அவ்வாறே செல்லட்டும் என்று அனுப்புவாளோ ? ஒளியைப் பரப்பி வலிய இடி முழங்கும் இருள் மிக்க நள்ளிரவில் கொடி நுடங்கி விளங்குவனபோல் மின்னி அவருடைய மலையில் மழை நின்று பெய்தது ; நீராடுவதற்குப் புதுநீர் வருதல் திண்ணம். "

தோழி :

விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது
இளையோர் இல்லிடத்து இற்செறிந்து இருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுஉண ஆடுகம் ;
வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே
செல்கஎன விடுநள் மன்கொலோ எல்உமிழ்ந்து
உரவுரும் உரறும் அரைஇருள் நடுநாள்
கொடிநுடங்கு இலங்கின மின்னி
*ஆடுமழை இறுத்தன்றுஅவர் கோடுஉயர் குன்றே.**

---

*நற். 68. பிரான்சாத்தனர்.

ஓரை - பாவை வைத்து ஆடும் ஒருவகை விளையாட்டு. தேய்ம்மென - தேயும் என்று. வல்லிதின் - விரைந்து. எல் - ஒளி. உரவுரும் - வலிமையான இடி. உரறு - முழங்கும். இறுத்தன்று - தங்கிப் பெய்தது. கோடு - மலைச்சிகரம்.

19. கருத்து என்னவோ !

திருமண முயற்சி இல்லாமலே களவொழுக்கத்தில் பல நாள் கழிக்கும் தலைவனைத் திருத்த முயன்றாள் தோழி. தலைவியும் தானும் தாயின் ஐயுறவுக்கு ஆளாகி வருந்துவதாகச் சொல்லி, தம் துயரம் தீரவேண்டுமானால் விரைந்து திருமணம் செய்துகொள்வதே கடமை என்று தலைவனுக்கு அறிவுறுத்த விரும்பினாள். இதை நேரில் அவனிடம் கூறுவதால் விளையும் பயனைவிட, மறைமுகமாக உணர்த்துவதே விரைந்து பயன் தரும் என எண்ணினாள். அவன் ஒருநாள் வேலிப்புறமாக வந்து நின்றபோது, அவனைக் காணாதவள் போல் தலைவியோடு பின்வருமாறு பேசத் தொடங்கினாள்.

" தலைவனால் யாம் படும் துன்பத்தை யார்க்கும் புலப்படுத்தாமல் யான் அஞ்சி மறைத்துவந்திருந்தும், அன்னை அதனை அறிந்துகொண்டாளோ ? அல்லது, அதைப் பற்றி ஒன்றும் அறியாமலே தான் கொண்ட அருளினால் அவ்வாறு சொன்னாளோ ? அன்னை கருதியது என்னவோ, தெரியவில்லை. வான் அளாவ உயர்ந்த பெரிய மலைப்பக்கத்தில், முழக்கம் பொருந்திய மேகம் பொழியத் தொடங்கி நள்ளிரவில் மிக்க மழை பெய்தமையால், காட்டில் கல் மிக்க ஆற்றில் காய்ந்த சருகுகளோடும் கழித்த பூங்கொத்துக்களோடும் வரும் புதிய இனிய நீர் இவளுடைய நோய்க்கு மருந்தும் ஆகும் ; குளிர உண்டு, கண்ணாரக் கண்டு, வெறுப்பு இல்லாமல் நீராடப் பெற்றால் இவள் நோய் தீர்ந்து விளங்குவாள் ? ஆகையால் இவளை அழைத்துச் செல்க என்றாள். அவள் கருதியது என்னவோ ?"

தோழி :

யான்அஃது அஞ்சினென் கரப்பவும் தான்அஃது
அறிந்தனள் கொல்லோ ? அருளினள் கொல்லோ ?

எவன்கொல் தோழி அன்னை கண்ணியது ?
வான்உற நிவந்த பெருமலைக் கவாஅன்
ஆர்கலி வானம் தலைஇ நடுநாள்
கனைபெயல் பொழிந்தெனக் கானக் கல்யாற்று
முளி இலை கழித்தன முகிழ்இணர் ரொடுவரு
விருந்தின் தீநீர் மருந்தும் ஆகும் ;
தண்ணென உண்டு கண்ணின் நோக்கி
முனியாது ஆடப் பெறின் இவள்
பனியும் தீர்குவள் செல்கஎன் றோளே.*

20. அஞ்சுகின்றேன்

தலைவன் வேலிப்புறமாக வந்து நின்றபோது அவனைக் காணாதவள் போல் தலைவியிடம் பேசினாள் தோழி. அவனுடைய காதல் வரவரக் குறைந்துவிட்டதாகவும், இனி முற்றிலும் இல்லையாய்ப் போகும் நிலைமை வருமோ எனத் தான் அஞ்சுவதாகவும் எடுத்துரைத்தாள். அதை விளக்கும் சான்றாக, ஒன்று கூறினாள் : முன்பு அன்னை அறிவாள் என்பதற்கும் அஞ்சாமல் வந்து சென்ற தலைவன் இப்போது தோழியர் கூட்டம் அறிவதைப் பற்றி மிகக் கவலையுற்றுத் தயங்குவதாகக் கூறினாள்.

---

*நற். 53. நல்வேட்டனார்.

அஞ்சினென் - அஞ்சி. கரப்ப - மறைக்க. எவன்கொல் - என்னவோ. கண்ணியது - கருதியது. நிவந்த - உயர்ந்த. கவாஅன் - பக்கமலை. ஆர்கலி - ஓசை. வானம் - மேகம். தலைஇ - தொடங்கி. நடுநாள் - நள்ளிரவு. கனைபெயல் - மிக்க மழை. முளி - காய்ந்த. முகிழ் - அரும்பு. விருந்தின் - புதுமையான. முனியாது - வெறுக்காது. பனி - நடுங்கும் நோய்.

"பெரியோர் எல்லாவற்றையும் விரும்பிப் போற்றுவிட்டாலும், விரும்பத்தக்கவற்றையும் விரும்பிப் போற்ற மாட்டார்கள் என்பது ஆராய்ந்து நோக்கும்போது நாணத்தக்கதாக உள்ளது. ஓர் உயிர் போல் இயைந்த குற்றம் அற்ற நட்பை உடைய உனக்கு யான் மறைப்பது எப்படி முடியும்? மிகப் பெரிதும் வருந்தத்தக்கதாக உள்ளது. முன்பு, யான் தாய்க்கு அஞ்சுகின்றேன் என்று கூறியபோதெல்லாம் காதலன் பிரிய எண்ணவில்லை. இப்போதோ, கடற்கரைச் சோலையில் விளையாடும் தோழியர் கூட்டம் அறிந்தாலும், களவு வெளிப்பட்டுவிடுமோ என்று அஞ்சிக் கலங்குகின்றான். அதனால் அவனுடைய உறவு இல்லையாகிவிடுமோ என்று யான் உள்ளத்தே அஞ்சுகின்றேன்."

தோழி :

பேணுப பேணார் பெரியோர் என்பது
நாணுத்தக் கன்றுஅது காணுங் காலை ;
உயிரோ ரன்ன செயிர்தீர் நட்பின்
நினக்குயான் மறைத்தல் யாவது ? மிகப்பெரிது
அழிதக் கன்றால் தானே, கொண்கன்
யான்யாய் அஞ்சுவல் எனினும் தானே
பிரிதல் சூழான் மன்னே ; இனியே
கானல் ஆயம் அறியினும் ஆனாது
அலர்வ தன்றுகொல் என்னும் ; அதனால்
புலர்வது கொல்அவன் நட்புஎனா
*அஞ்சுவல் தோழிஎன் நெஞ்சத் தானே.**

---

*நற். 72. இளம்போதியார்.

பேணுப - விரும்பத்தக்கவை. தக்கன்று - தக்கது. செயிர் - குற்றம். கொண்கன் - கணவன் - காதலன். யாய் - தாய். அஞ்சுவல் - அஞ்சுவேன். சூழான் - எண்ணான். மன் - இடைச்சொல், அந்த நிலைமை போயிற்று என்னும் கருத்து. ஆயம் - விளையாட்டுக் கூட்டம். ஆனாது - அமையாமல், அடங்காமல்.

21. மலையும் அழுகின்றது

வேலிப்புறமாக வந்து நின்ற தலைவனுக்கு மறைமுகமாகக் கடமையை அறிவுறுத்த முனைந்தாள் தோழி ; தலைவியிடம் பேசுவது போல் நடித்தாள். துன்புறுவது தம் பழவினையின் பயன் என்முள் ; காதலரிடத்திலே சென்று துன்பத்தை எடுத்துரைப்போம் என்று தலைவியை வருமாறு அழைத்தாள் ; அவர்நாட்டு மலையும் அவர் விளைத்த துன்பத்தை உணர்ந்து அழுகின்றது என்முள்.

"நாம் செய்த பழவினைக்காக நீ ஏன் மயங்கி வருந்துகிருய் ? வருந்தாதே. நாம் நேரில் அவரிடமே போய் உரைத்து வருவோம், புறப்படு. கடலில் விளையும் உப்பு மழைநீரை ஏற்றுக் கரைந்து அழிதல் போல், நீ கரைந்து உருகிக் கெடுகின்ருய் ; யான் அஞ்சி வருந்துகிறேன். அதோ, பார். தன் தலைவனுடைய கொடுமையை - நமக்கு அவர் செய்த கொடுமையை - நினைந்து, அந்த மலை அழுகின்றது. நல்ல பண்பு உடைய மலையாக இருப்பதால், அவர் செய்த கொடுமையை எண்ணி அழுகின்றது. தாங்க முடியாமல், தன் கண்ணீர் அருவியாகப் பெருகுமாறு அவருடைய மலை அழுகின்றது, பார்."

தோழி :

யாம்செய் தொல்வினைக்கு எவன்பே துற்றனை ?
வருந்தல் வாழி தோழி ! யாம்சென்று
உரைத்தனம் வருகம் ; எழுமதி ; புணர்திரைக்
கடல்விளை அமுதம் பெயற்கேற் ருஅங்கு
உருகி உகுதல் அஞ்சுவல் ; உதுக்காண் ;
தம்மோன் கொடுமை நம்வயின் எற்றி
நயம்பெரிது உடைமையின் தாங்கல் செல்லாது

கண்ணீர் அருவி யாக
அழுமே தோழிஅவர் பழமுதிர் குன்றே.*

22. வாராமை நன்று

தலைவன் நள்ளிரவில் தலைவியை நாடி வந்து நிற்பதைக் கண்ட தோழி, அவன் வந்ததை அறியாதவள்போல் நடித்து, திருமண முயற்சியை வலியுறுத்த விரும்பினாள். தலைவி தூங்குவது போலவும், தான் தலைவன்வரவை எதிர்பார்த்து விழித்திருப்பது போலவும், மலைவழியின் கொடுமையை நினைந்து மிக மிக வருந்துவது போலவும் அவன் உணருமாறு பேசத் தொடங்கினாள். தலைவன் இன்னும் வரவில்லை, வராமலே நின்றுவிட்டால் நன்றாக இருக்கும், இந்தக் கொடிய வழியில் வந்து அவன் துன்பப்படலாகாது என்ற கருத்துக்களை எடுத்துக் கூறினாள். மறைவில் நின்று இவற்றைக் கேட்கும் தலைவன் தன்னையே நொந்துகொண்டு மனம் திருந்துமாறு, தலைவியோடு பின்வருமாறு சொன்னாள்.

" காடு கம்மென்ற ஒலியோடு அடங்கியுள்ளது. வானம், மலைக்குகை போன்ற கருநிற இருளைப் பரப்பியுள்ளது. மேகம் விடாமல் முழங்கி இடிக்கின்றது. குறுங்

*நற். 88. நல்லந்துவனார்.

எவன் - என். பேதுற்றனை - மயங்கினாய். மதி - முன்னிலை அசை. திரை - அலை. புணர் - பொருந்திய. கடல்விளை அமுதம் - உப்பு. பெயற்கு - மழைக்கு. உகுதல் - கெட்டழிதல். தம்மோன் - தம் தலைவன். நம்வயின் - நம்மிடத்து. எற்றி - நினைந்து. நயம் - நன்மை. உடைமையின் - கொண்டிருப்பதால். தாங்கல் செல்லாது - பொறுத்துத் தாங்க முடியாமல். பழமுதிர் - பழங்கள் பழுத்து முதிர்ந்துள்ள.

காட்டில் யானையை வலப்பக்கத்தே வீழ்த்திக் கொன்ற கொடுஞ்சினம் உடைய புலி கேட்டோர் அஞ்சும்படி முழங்குகிறது. இந்த ஓசைகளை எல்லாம் கேளாமல் உறங்குகின்றாயோ, தோழி! பெரிய துன்பம் தாக்கிய நெஞ்சம் நீர் உற்ற நெருப்புப்போல் தணியும்படியாக இன்று அவர் வராமல் இருந்தால் நல்லது. இந்த மலைச்சாரலிலே உள்ள வழியை நினைக்குந்தோறும், என் நிறை இல்லாத நெஞ்சம் அந்த மலைநிலத்தில் பரந்து சென்று அலைகின்றது."

தோழி :

கானமும் கம்மென் றன்றே ; வானமும்
வரைகிழிப் பன்ன மையிருள் பரப்பிப்
பல்குரல் எழிலி பாடுஓ வாதே ;
மஞ்சு தவழ் இறும்பில் களிறுவலம் படுத்த
வெஞ்சின உழுவைப் பேழ்வாய் ஏற்றை
அஞ்சுதக உரறும் ஓசை கேளாது
துஞ்சுதி யோ? இல தூவி லாட்டி !
பேரஞர் பொருத புகர்படு நெஞ்சம்
நீர்அடு நெருப்பின் தணிய இன்றுஅவர்
வாரா ராயினோ நன்றே ; சாரல்
விலங்குமலை ஆரா று உள்ளுதொறும்
*நிலம்பரந்து ஒழுகும்என் நிறைஇல் நெஞ்சே.**

---

*நற். 154. நல்லாவூர்கிழார்.

கம்மென்றன்று - கம்மென்றது. வரைகிழிப்பு - மலைப்பிளப்பு. மை - கருநிறம். எழிலி - மேகம். பாடு - ஒலி. ஓவாது - ஓயாது. மஞ்சு - மேகம். இறும்பு - சிறுகாடு. உழுவை - புலி. பேழ்வாய் - அகன்ற வாய். ஏற்றை - ஆண்(புலி). உரறும் - முழங்கும். இல - ஏடி. தூவிலாட்டி - வலிமை இல்லாதவள், துன்பத்தால் மெலிந்தவள். அஞர் - துன்பம். பொருத - தாக்கிய. புகர் - குற்றம். நெருப்பின் - நெருப்புப்போல். விலங்கு - குறுக்கிட்ட. ஆர்ஆறு - அரிய வழி. நிறை - நிறுத்தி அடக்கும் வன்மை.

23. பொல்லாத வழி

தலைவன் வேலிப்புறமாக வந்து நிற்கும்போது அவன் மனம் திருந்தித் திருமண முயற்சியில் முனையும்படியாகத் தோழி தலைவியிடம் பேசத்தொடங்கினாள். தலைவன் வரும் மலைவழி பொல்லாதது என்று அதைக் குறித்து நினைந்து நினைந்து தானும் தலைவியும் வருந்தித் துன்புறுவதாகக் கூறினாள். தன்னால் அவர்கள் இருவரும் துன்புறுவதை அறிந்து தலைவன் நோகும்வகையில் எடுத்துரைத்தாள்.

" கல் நிறைந்த வழிகள் நடப்பவரின் காலைச் சிதைக்கும். மிக்க இருளோ பார்ப்பவரின் கண்ணைக் கெடுக்கும். மலைப்பிளப்பாலாகிய குகையிலே பதுங்கிய கொடிய சினம் கொண்ட புலி, யானையை வருந்தும்படியாகத் தாக்கி, அதன் இரத்தத்தைப் பருகும். பருகியபின், கொழுமையான கன்னத்தை உடைய தன் பெரிய வாயை வேங்கையின் அடிமரத்தில் துடைக்கும். ஓங்கிய மலைநாடனாகிய தலைவன் வரும்வழி இவ்வளவு கொடியதாக உள்ளதே."

தோழி :

கல்அதர் மன்னும் கால்கொல் லும்மே ;
கனையிருள் மன்னும் கண்கொல் லும்மே ;
விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி
புகர்முக வேழம் புலம்பத் தாக்கிக்
குருதி பருகிய கொழுங்கவுள் கயவாய்
வேங்கை முதலொடு துடைக்கும்
ஓங்குமலை நாடன் வரூஉம் ஆறே.*

---

*நற். 153. வெள்ளைக்குடி நாகனார்.

அதர் - வழி. கொல்லும் - அழிக்கும். கனை - மிக்க. விடர் - மலைப்பிளப்பு. முகை - குகை. இரும்புலி - பெரிய புலி. புகர் - புள்ளி. கய - பெரிய. முதல் - அடிமரம்.

24. அன்னை அறிந்தாளோ?

தலைவன் வேலிப்புறமாக வந்து நிற்கும்போது அவனைக் காணாதவள்போல் நடித்துத் தலைவியிடம் பேசினாள் தோழி. தினைப்புனத்தில் கதிர்கள் முற்றினமையால் அங்குப் போய்க் காவல் காக்குமாறு தந்தை கூறியதாகவும், தாய் உள்ளத்தில் ஏதோ ஒரு குறிப்பு வைத்துக்கொண்டு வேங்கை மலர்வதாக என்று கூறியதாகவும் எடுத்துரைத்தாள். தாய்க்குக் களவொழுக்கம் பற்றி ஏதேனும் தெரிந்திருக்கக்கூடும் என்று ஐயுறுவதுபோல் கூறினாள். வேங்கை மலருங் காலமே தினை கொய்யும் பருவம் ஆதலின், 'நெடுநாள் தினைப்புனக் காவலுக்கு விடமாட்டேன்' என்று தாய் சினத்தோடு கூறியதாகத் தலைவன் உணருமாறு சொன்னாள். அன்றியும், வேங்கை மலரும் காலமே திருமணம் செய்வதற்கு உரிய காலமும் ஆகையால், திருமணம் செய்யுமாறு தலைவனை வற்புறுத்தும் குறிப்பும் அவளுடைய சொற்களில் அமைந்தது.

"பஞ்சுநுனி போன்ற தலை உடைய இளங்கதிர்கள் பால் நிறைந்து சாய்ந்துள்ளன; மேலே உள்ள தோடுகள் அசைந்து ஆடுகின்றன. இவ்வாறு தினை விளைந்துள்ளமையால் இப்போது பாறைகளின்மேல் கூடிக் கிளிகள் கவர்ந்து செல்லக் கூடும். ஆகையால் அங்கே சென்று தட்டையைத் தட்டியும் கவண்கல் தொடுத்தும் காவல் புரிக என்று தந்தை வந்து சொன்னார். அதைக் கேட்ட அன்னை, 'நல்ல நாளில் மலர்வதாகிய வேங்கையும் இனி மலர்க' என்று கூறி என் முகத்தை நோக்கினாள். என்னவோ, தெரியவில்லை, தோழி! தினைப்புனத்திற்குச் செல்லட்டும் என்றோ, அல்லது செல்லாதவாறு வீட்டில் தடுக்கலாம் என்று கருதியோ, அவ்வாறு கூறினாள். மலைநாடனாகிய தலைவனிடம் உள்ள

நட்பை உணர்ந்துகொண்டாளோ? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.''

தோழி :

துய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார்பு இறைஞ்சித்
தோடுஅலைக் கொண்டன ஏனல் என்று
துறுகல் மீமிசைக் குறுவன குழீஇச்
செவ்வாய்ப் பாசினம் கவரும்என்று அவ்வாய்த்
தட்டையும் புடைத்தனை கவணையும் தொடுக்கென
எந்தைவந்து உரைத்தனன் ஆக, அன்னையும்
நன்னுள் வேங்கையும் மலர்கமா இனிஎன
என்முகம் நோக்கினள்; எவன்கொல்? தோழி!
செல்வாள் என்றுகொல்? செறிப்பல் என்றுகொல்?
கல்கெழு நாடன் கேண்மை
அறிந்தனள் கொல்அஃது அறிகலேன் யானே.*

25. அவர்மலைக் காற்று

தலைவன் திருமண முயற்சி செய்யாமலே சிலநாள் விட்டுவிட்டு வந்து போய்க்கொண்டிருந்தமையால், தலைவி மிக வருந்தினாள். பிரிவாற்றாமல் வருந்தி வருந்தி, இறுதியில்

*நற். 206. ஐயூர் முடவனார்.

துய் - பஞ்சுமுனை. புனிற்று - அண்மையில் ஈன்ற. குரல் - தினைக்கதிர். இறைஞ்சி - சாய்ந்து. ஏனல் - தினை. மீமிசை - மேல். செவ்வாய்ப் பாசினம் - சிவந்த வாயும் பச்சை நிறமும் உள்ள கிளிகளின் கூட்டம். அவ்வாய் - அங்கே. தட்டை - கிளி ஓட்டும் கருவி. தொடுக்கென - தொடுக்க என்று. மா - முன்னிலை அசை. எவன் - என்ன. செறிப்பல் - இற்செறிப்பேன், வீட்டில் தடுத்து நிறுத்துவேன்.

எவ்வாறேனும் தன் துன்பத்தைத் தலைவனுக்கு அறிவுறுத்த வேண்டும் எனத் துணிந்தாள். சிலநாள் வராமல் நின்ற தலைவன், ஒருநாள் வேலிப்புறமாக வந்து நின்றபோது அவனைப் பார்க்காதவள்போல் இருந்து தோழியோடு பேசத் தொடங்கினாள். பிரிவாற்றாமையால் துன்புற்று வருந்தி உடம்பு கெட்டது என்றும், வீட்டைவிட்டு வெளியே செல்லாதவாறு அன்னை தடுத்துக் காப்பதால் நோய் மிகுந்தது என்றும், தலைவனுடைய மலையிலிருந்து வரும் காற்று உடம்பில் பட்டால் நோய் தீரும் என்றும், அதனால் அன்னையிடம் சொல்லி அவளுடைய இசைவு பெற்று வெளியே செல்லவேண்டும் என்றும் தோழியிடம் கூறினாள். அவ்வாறு கூறுவதன் வாயிலாகத் தலைவனுக்குத் தான்படும் துன்பத்தை உணர்த்தி அவனுடைய முயற்சியைத் தூண்ட முயன்றாள்.

"நோயும் அளவுகடந்து மிகுந்துவிட்டது. உடம்பும் தீ உமிழும் அனல்போல் வெப்பமுள்ளதாயிற்று. விரைந்து சென்று சிறிது அங்கே மூச்சுவிட்டு வருவதற்காக, 'மெல்ல முற்றத்துக்கு இவளைக் கொண்டு சென்றால் இவள் மிகவும் நலம் பெறுவாள்' என்று கொடிய நெஞ்சம் உடைய அன்னைக்கு இப்போது போய்ச் சொல்; தோழி! குற்றம் இல்லாத வளையல்களை நெகிழச் செய்த தலைவனுடைய மலையில் பொருந்தியிருந்து அகன்ற பாறைகளில் குளிர்ச்சியாக வீசிய காற்று என் பசலைநோய் உற்ற உடம்பில் சிறிது படவேண்டும். அதற்காகச் சொல்."

தலைவி :

> ***நோயும் கைம்மிகப் பெரிதே ; மெய்யும்***
> ***தீ உமிழ் தெறலின் வெய்துஆ கின்றே ;***
> ***ஒய்யெனச் சிறிதுஆங்கு உயிரிய பையென***

முன்றில் கொளினே நந்துவள் பெரிதுஎன
நிரைய நெஞ்சத்து அன்னைக்கு உய்த்துஆண்டு
உரைஇனி வாழி தோழி ! புரைஇல்
நுண்ணேர் எல்வளை நெகிழ்த்தோன் குன்றத்து
அண்ணல் நெடுவரை ஆடித் தண்ணென
வியல்அறை மூழ்கிய வளிஎன்
பசலை ஆகம் தீண்டிய சிறிதே.*

26. இன்னும் அலர் !

திருமண முயற்சி இல்லாமலே தலைவன் பல நாட்களாகப் பிரிந்திருந்தபோது, தலைவி ஆற்றாமை மிகுந்து வருந்தினாள். அவளைத் தேற்றுவதற்காகத் தோழி பலவாறு கூறினாள். அதற்கு மறுமொழி கூறிய தலைவி, தலைவனுடைய உறவு இனி நம்பிக்கைக்கு இடமில்லாமல் பயனற்றுப் போனதுதான் என்றும், அவ்வாறு இருந்தும் ஊர்ப்பெண்கள் தன்னைப் பற்றி ஓயாமல் அலர் தூற்றிவருகின்றார்களே என்றும் கூறித் துயரப்பட்டாள். தான் அவர்களுக்கு

*நற். 236. நம்பி குட்டுவனார்.

கைம்மிக - அளவு கடந்திட. வெய்து - வெப்பமானது. ஆகின்று - ஆயிற்று. ஒய்யென - விரைவாக. உயிரிய - மூச்சு விட. பையென - மெல்ல. நந்துவள் - நலம்பெறுவாள். பெரிது - மிக. நிரையம் - நரகம். நிரைய - நரகம்போல் கொடிய. புரை இல்- குற்றம் இல்லாத. நுண் ஏர் - நுண்ணிய அழகு உடைய. எல் - ஒளி. நெகிழ்த்தோன் - நெகிழுமாறு துயரத்தால் மெலியச் செய்தவன். அண்ணல் - தலைமை. வியல் - அகன்ற. அறை - பாறை. வளி - காற்று. தீண்டிய - படுமாறு.

ஒரு தீமையும் செய்யாதபோதும் தன்னைப் பற்றி அவர்கள் இவ்வாறு அலர்தூற்றி வருத்துவது ஏனோ என்றாள்.

"தீமை செய்வதைக் கண்ணால் கண்டபோதும், பெரியோர்கள் அவர்களைக் கடிந்து கூறாமல் தாமே அறிந்து உணர்ந்துகொள்ளட்டும் என்று பொறுக்கின்றார்களே! தலைவனுடைய உறவு, கிளையிலிருந்து நீங்கிய பெரிய பலாப் பழம் மலைப்பிளப்பில் வீழ்ந்து பயனற்று அழிந்தாற்போல், எனக்கு ஒரு தொடர்பும் இல்லாமல் பல நாட்களுக்கு முன்னமே நீங்கிப் போயிற்று. இது தெரியாமல் இந்த ஊரில் உள்ள பெண்கள் என்னைப் பற்றி அலர் தூற்றுவதை இன்னும் விடவில்லையே. ஒரு தீமையும் என்னிடம் காணாதிருந்தும் பெரியோர்கள்போல் இவர்கள் பொறுமை காட்டவில்லையே."

தலைவி :

தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாம்அறிந்து உணர்க என்ப மாதோ ;......
மலைகெழு நாடன் கேண்மை பலவின்
மாச்சினை துறந்த கோள்முதிர் பெரும்பழம்
விடர்அளை வீழ்ந்துஉக் காங்குத் தொடர்புஅறச்
சேணும் சென்றுஉக் கன்றே ; அறியாது......
குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர்
இன்னும் ஓவார் என்திறத்து அலரே.*

---

*நற். 116. கந்தரத்தனார்.

மாதோ - அசை. மா - பெரிய. சினை - கிளை. கோள் - காய். விடர்அளை - மலைப்பிளப்பாகிய குகை. உக்காங்கு - அழிந்தாற் போல. சேணும் - தொலைவில், முன்னமே. ஓவார் - ஓயார். என் திறத்து - என்னைப் பற்றி.

27. என் வருத்தம் நினைப்பாரோ?

தலைவன் சிலநாள் பிரிந்து வராமல் நின்றான். அந்த நாட்களில் பிரிவாற்றாமல் வருந்தினாள் தலைவி. கடற்கரையில் அமைந்த ஊர் அது. ஊர்மன்றத்தில் பனைமரம் ஒன்று இருந்தது. நள்ளிரவில் ஊர் முழுதும் அடங்கி ஒலியற்று அமைதி நிலவியது. ஆனால் பனைமரத்தில் துணையோடு அன்றில் கூவும் குரல் மட்டும் கேட்டது. உறக்கம் இழந்து தலைவனை நினைந்து வருந்தும் தலைவி, நள்ளிரவில் இந்த அன்றிலின் குரலைக் கேட்டதும் மிக்க துயரம் உற்றாள். அன்றில் பறவைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் துணையோடு வாழும் இயல்பு உடையவை; காதல்வாழ்வுக்கு எடுத்துக்காட்டானவை. ஆகவே, அமைதியான நேரத்தில் அவற்றின் குரலைக் கேட்டதும் தலைவிக்குத் தன் தனித்த வாழ்க்கை நினைவுக்கு வந்து துயரம் பெருகியது. துயரம் தாங்க முடியாமல் தோழியிடம் பின்வருமாறு கூறினாள்.

“ஒலியெல்லாம் நின்று அடங்கி நள்ளிரவு ஆயிற்று. செருக்கு மிக்க கடற்கரைப் பகுதியான ஊர் உறக்கத்தில் ஆழ்ந்துள்ளது. ஊர்மன்றத்தில் பனைமரத்தின் வளைந்த மடலில் உள்ள கூட்டில் துணையோடு வாழும் அன்றிலின் துன்பம் செய்யும் குரலைக் கேட்குந்தோறும், துயருற்று உறங்காத கண்களோடு கிடக்கின்றேன். இத்தகைய துயரத்தால் மெலிந்து நம்மை நினைந்து துணைவி வருந்துவாளே என்ற எண்ணம் தலைவனுடைய நெஞ்சில் உண்டோ, தோழி!”

தலைவி :

ஒலிஅவிந்து அடங்கி யாமம் நள்ளெனக்
கலிகெழு பாக்கம் துயில்மடிந் தன்றே ;
......மன்றப் பெண்ணை வாங்குமடல் குடம்பைத்
துணைபுணர் அன்றில் உயவுக்குரல் கேட்டொறும்

துஞ்சாக் கண்ணள் துயர்அடச் சாஅய்
நம்வயின் வருந்தும் நன்னுதல் என்பது
உண்டுகொல் வாழி தோழி......
*நெடுநீர்ச் சேர்ப்பன்தன் நெஞ்சத் தானே.**

28. சாதலும் இனிதே

திருமண முயற்சி இல்லாமலே தலைவன் காலம் நீட்டித்துவந்தமையால் தலைவி மிக வருந்தினாள். ஊரார் அலர் தூற்றல், வீட்டார் ஐயுறுதல், வெளியே செல்லாதவாறு தடுத்தல், தலைவன் சிலநாள் வராமல் நிற்றல், அவன் பிரிவால் துன்புறுதல் ஆகியவற்றால் தலைவியின் துயரம் வளர்ந்தது. தோழி என்னென்னவோ எடுத்துச்சொல்லி அவளுடைய துயரத்தைத் தணிக்க முயன்றாள். தோழியின் சொற்களால், தலைவி ஆறுதல் பெறமுடியவில்லை. இவ்வாறு துன்புறுத்தும் தலைவனை விரும்பி ஏங்குதல் தகாது, அது வீண்பழியாக முடியும் என்று உரைத்தாள் தோழி. அந்தச் சொல்லைக் கேட்டதும் தலைவியால் வாளா இருக்க முடியவில்லை. காதலரை விரும்பி வாழ்வதால் பழி ஏற்படும் என்றால், அந்தப் பழியை ஏற்று அழுது அழுது சாவதே நல்லது என்று காதலின் பெருமை

---

*நற். 303. மதுரை ஆருலவியநாட்டு ஆலம்பேரிச்சாத்தனார்.

கலி - செருக்கு, கள்ளால் வரும் மகிழ்ச்சி. பாக்கம் - கடற்கரையில் உள்ள ஊர். பெண்ணை - பனை. வாங்கு - வளைந்த. குடம்பை - கூடு. உயவு - வருத்தம் விளைக்கின்ற. அட - வருத்த. சாஅய் - மெலிந்து. நம்வயின் - நம் காரணமாக. நெடுநீர் - கடல். சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன். நெஞ்சத்தான் - நெஞ்சத்தில்.

தோன்றக் கூறினாள். ஆயின், அவ்வாறு அவர் கைவிடுவார் என்று தான் நம்பிக்கை இழந்துவிட்டதாகக் கூறவில்லை. ஒருகால் அந்த நிலை நேர்ந்தாலும் அதை வரவேற்றுச் சாவதாகக் கூறினாள். சான்றோர் கடமையை மறக்கமாட்டார்கள் என்று உலகமெல்லாம் கூறும் உண்மையை எடுத்துக் காட்டி, தலைவனும் சான்றாண்மை உடையவனாக இருந்தால் தன் கடமையைச் செய்து நிலையான இல்வாழ்க்கையை அளிக்கக்கூடும் என்றாள். தலைவனிடத்தில் இன்னும் நம்பிக்கை இருப்பதாகக் கூறினாள்.

"நம்மை நாடி வந்த சான்றோரை விரும்புவது பழி என்றால், உறக்கம் இல்லாமல் அழுகின்ற கண்களோடு வருந்தி மெலிந்து சாவதும் இனியதே; அன்புள்ள தோழி! அந்நிலை அல்லாமற் போயினும், சான்றோர் கடமையைச் செய்யும் நிலையிலிருந்து தவறமாட்டார்கள் என்று ஒருசேர உலகம் கூறும் மொழி உண்மையாகுமாறு, தலைவனுடைய மார்பு நிலையான உரிமையாக வாய்ப்பதும் கூடும்."

தலைவி :

நாடல் சான்றோர் நம்புதல் பழிஎனின்
பாடுஇல கலுழும் கண்ணொடு சாஅய்ச்
சாதலும் இனிதே ; காதலந் தோழி !
அந்நிலை அல்ல ஆயினும் சான்றோர்
கடன்நிலை குன்றலும் இலர்என்று உடன்அமர்ந்து
உலகம் கூறுவது உண்டுஎன நிலைஇய
தாயம் ஆகலும் உரித்தே......
*தண்ணந் துறைவன் சாயல் மார்பே.**

*நற். 327. அம்மூவனார்.

சான்றோர் நம்புதல் - சான்றோரை விரும்புதல். பாடுஇல - உறக்கம் இல்லாதனவாக. கலுழும் - கலங்கி அழும். சாஅய் -

29. நஞ்சும் உண்பர்

களவொழுக்கத்தின் தொடக்கத்தில் தலைவன் நாள் தோறும் வந்து சென்றான். பிறகு ஊரில் உள்ள கடமைகள் காரணமாகவோ, வேறு சில காரணமாகவோ, முன்போல் வரமுடியாமல் இடையிடையே சிலநாள் விட்டு வந்தான். இவ்வாறே சென்றால், தலைவன் தலைவியிடம் கொண்ட அன்பு குறையவும் கூடும் என்று தோழி ஐயுற்றாள். பழக்கத்தின் காரணமாகவும் பழமையின் காரணமாகவும் உள்ளத்து உணர்ச்சி குறையக்கூடியது; மாறவும்கூடியது. ஆகவே, தூய உயர்ந்த காதல் இதற்கு இரையாகக் கூடாது, காதலரின் வாழ்க்கை கெடக்கூடாது என்று எண்ணிய தோழி, தலைவனுடைய உள்ளத்தில் உயர்ந்த உண்மையைப் பதியச்செய்து, காலத்தின் போக்கால் கெடாத நிலையான நல்லன்பு வளரச்செய்தாள். அவளிடம் அவன் கொண்டுள்ள அன்பு மாறினும், தலைவியிடம் அவன் மனமார இன்ப முறாவிடினும், அவளைக் காத்து அருள்செய்யும் கடமையை மறத்தல் கூடாது என வற்புறுத்தினாள். தலைவியிடம் அன்பு இல்லாமற்போயினும், தன்னிடம் கொண்டுள்ள நட்பின் காரணமாகவாவது அவளைக் கைவிடாமல் காத்தல் வேண்டும் என வற்புறுத்தினாள். நண்பன் தீயது ஒன்றைத் தரினும் நட்புரிமை பற்றி அதை மகிழ்ச்சியோடு ஏற்பது போல், தன்னால் உறவு உண்டாக்கப்பெற்ற தலைவி இன்பம் விளைக்கத் தவறித் துன்பமே விளைத்தாலும், தனக்காக அதைப் பொறுத்து அன்பு செலுத்தவேண்டும் என எடுத்துரைத்தாள் :

மெலிந்து. தாயம் – உரிமை. தண்ணந் துறைவன் – குளிர்ந்த கடல்துறைத் தலைவன். சாயல் – மென்மை.

"எதிரே இருந்து நண்பர் கொடுப்பாரானால், நஞ்சையும் உண்பார் மிக்க நாகரிகம் உடையவர். என் தோழியின் உறவை உன் நெஞ்சில் இன்பமாகக் கொள்ளாவிட்டாலும், நீ என்னிடம் கண்ணோட்டம் செய்தாவது அதை நீ வெறுக்காமல் அருள்செய்ய வேண்டும். உன்னைத் தவிர இவளுக்கு வேறு கதி இல்லை."

தோழி :

.................நாட
முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் ;
அஞ்சில் ஓதிஎன் தோழி தோள்துயில்
நெஞ்சில் இன்புறாய் ஆயினும் அதுநீ
என்கண் ணோடி அளிமதி ;
நின்கண் அல்லது பிறிதுயாதும் இலளே.*

30. தீமையும் ஆனது

இன்றைய களவொழுக்கம் நாளைய இல்வாழ்க்கைக்கு அடிப்படையாக அமையவேண்டும். அவ்வாறு அமைவதால்தான் களவின் காதல் போற்றப்படுகிறது. அமையாவிட்டால், அது வாழ்க்கையைக் கெடுக்கவே துணையாகும். தலைவனும் தலைவியும் களவில் காதல்கொள்வதற்குத் துணையாக இருந்தவள் தோழி ; அந்தக் களவு கற்பொழுக்கமாய்

*நற். 355.

நனி - மிக. அம்சில் ஓதி - அழகிய சில பகுதிகளை உடைய கூந்தல். தோள் துயில் - தோளில் உறங்குதல் - கூடுதல். மதி - முன்னிலை அசை.

இல்லறமாய் நிலைபெறுமாறு அவளே முயன்றாள் ; திருமணம் செய்துகொள்ளுமாறு தலைவனைப் பல வகையிலும் தூண்டித் திருத்தினாள்.

தலைவன் திருமண முயற்சி இல்லாமல் வந்து வந்து பிரிந்து செல்லும் காலத்தில், தலைவி அவனைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியைவிட, பிரிந்து வருந்திய வருத்தமே பெரிதாயிற்று. இதைத் தலைவனுக்கு உணர்த்தினாள் தோழி. உணர்த்தியபோது, அவன் தன் தவறு உணர்ந்து திருந்துமாறு கூறினாள். அவன்மேல் குற்றம் சுமத்தினால், குற்றம் அற்ற அவனுடைய மனத்தைப் புண்படுத்த நேரும்; அதனால் அவனைத் திருத்த முடியாமல் போயினும் போகும் ; ஆகவே, குற்றத்தைத் தலைவியின்மேலே சுமத்தி, அவன் தானே உணர்ந்து திருந்தும்வகையாக நயமுறக் கூறினாள்.

"தலைவ! நன்மையாய் விளையும் ஒரு செயலும் தீமையோடு கலந்து வரும் என்னும் உண்மையை அன்று (காதல் தொடக்க நாளில்) தலைவி அறியாமற் போனாள். அதை நன்கு அறிந்திருந்தால், இன்று மூங்கில் போன்ற பருத்த தோள்கள் மெலியுமாறு வருந்தியிருக்கமாட்டாள்! இனி நினைத்துப் பயன் என்ன ?"

தோழி :

...........வெற்ப !
நன்றி விளைவும் தீதொடு வரும்என
அன்று நன்கு அறிந்தனள் ஆயின்......
வேய்மருள் பணைத்தோள் அழியலள் மன்னே.*

*நற். 188.

வெற்ப - மலைநாட்டுத் தலைவ! நன்றி - நன்மை. வேய் - மூங்கில். மருள் - போன்ற. பணை - பருத்த. மன் - அசை ; நிலைமை போயிற்றே என்னும் இரக்கப்பொருள்.

31. தேர் தங்குக

தலைவன் களவொழுக்கத்திலேயே பலநாள் கழித்தால் திருமண முயற்சி குறையும் என அஞ்சினாள் தோழி. ஒரு நாள் அவன் பகலில் வந்தபோது தோழி அவனுக்கு நயமான முறையில் அறிவுறுத்தினாள். தலைவியும் அவனை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் தயங்குகிறாள் என்பதையும், பிரிந்து சென்றிடுமாறு தலைவனுக்குக் கூறத் தமக்கு மனம் வரவில்லை என்பதையும் கூறினாள். தலைவியும் தலைவனும் பிரியாமல் வாழ்வதற்கு வழி ஒன்றே; அவன் வந்த தேரோடு தம் ஊர்க்குள் புகுந்து தங்குவதே வழி; ஆனால் அவ்வாறு செய்தால் ஊரார் ஒரே ஆரவாரமாகி அலர் தூற்றுவார்களே என்று தான் அஞ்சுவதாகவும் கூறினாள். இவற்றை எல்லாம் கேட்ட தலைவன், இத்தனை இடரையும் தவிர்க்கும் வகையில் திருமணம் செய்துகொண்டு பிரியா வாழ்க்கை நடத்த முயல்வான் என்று நம்பி இவ்வாறு எடுத்துரைத்தாள்.

"வளமான வீட்டுக்குத் திரும்பிச் செல்வதற்காக எழுந்து வருக என்றால் அவளும் இசையவில்லை; உன்னை நோக்கி, 'நீங்கிச் செல்க' என்று கூற எம்மாலும் முடியவில்லை. வேறு வழி இல்லை ஆகையால், நள்ளிரவில் சில குடிகளை உடைய எம் ஊர் ஆரவாரம் செய்து அலர் தூற்றுமாறு, நீ விரும்பி ஊர்ந்துவரும் தேர் எம் ஊரில் தங்குவதாக."

தோழி :

......செழுநகர்ச் செலீஇய
எழுஎனின் அவளும் ஒல்லாள் ; யாமும்
ஒழிஎன வல்லாம் ஆயினம் ; யாமத்து......

சில்குடிப் பாக்கம் கல்லெனை
அல்குவ தாகநீ அமர்ந்த தேரே.*

32. நின்றால் போதுமோ?

தலைவன் திருமணமுயற்சி இல்லாமல் பலநாள் வந்து போவதைத் தோழி கடிந்து கூறினாள். அயலான் ஒருவன் தலைவியை மணந்துகொள்ள விரும்பி அவளுக்குப் பரிச மாகப் பெரிய தேரைக் கொண்டுவந்து வீட்டின்முன் நிறுத் திப் போயிருப்பதாகக் கூறினாள்; தலைவன் அத்தகைய ஒரு முயற்சியும் செய்யாமல் இரவில் வந்து சமையலறைக் கூரை யின் ஓலையைத் தொட்டபடி ஒதுங்கி நின்றுவிட்டுப் போவ தால் பயனில்லை என்று கடிந்துரைத்தாள்.

" மருத நிலத்தான் ஒருவன் உன் காதலியின் சிறிய வளையலின் விலை என்று (திருமணப் பரிசமாகப்) பெரிய தேரை அலங்கரித்து எங்கள் வீட்டின் வாயிலின் முன்னே நிறுத்திச் சென்றிருக்கிறான். நீயும் அவ்வாறு தேரோடு வந்து பெண் கேட்டுப் போகவேண்டும். அவ்வாறு செய்ய முடியாமல், பிச்சைக்கு ஊரைச் சுற்றிவரும் யானை வீட்டின் ஒரு புறத்தில் ஒதுங்கி நிற்பதுபோல, எங்கள் சமையலறை யின் கூரையின் ஓலையைத் தொட்டவாறு, ஒதுங்கி நிற்கின் றாயே; நில். வேறு என்ன செய்யப் போகிறாயோ?"

---

*நற். 159. கண்ணம்புல்லனார்.

நகர் - பெரிய வீடு. செலீய - செல்ல. ஒல்லாள் - இசையாள். பாக்கம் - கடற்கரையில் உள்ள ஊர். அல்குவதாக - தங்குவதாக. அமர்ந்த - விரும்பிய.

தோழி :

......தண் துறை ஊரன்
சிறுவளை விலைஎனப் பெருந்தேர் பண்ணிஎம்
முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே ;
நீயும், தேரொடு வந்து போதல்செல் லாது......
பிச்சைசூழ் பெருங்களிறு போலஎம்
*அட்டில் ஓலை தொட்டனை நின்மே.**

33. சந்தனக் கொள்ளி

திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி வாழுமாறு தலைவனைத் தூண்ட எண்ணிய தோழி, தலைவனிடம் தக்க முறையில் ஒரு பொய் கூறலானாள். நிகழாத ஒன்றை நிகழ்ந்ததாகப் படைத்துக் கூறி, களவொழுக்கம் தமக்குத் துன்பமே தருவதாகக் கூறினாள். அத்தகைய துன்பம் தீருமாறு திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைக்காமல், அவனே உய்த்துணர்ந்துகொள்ளுமாறு விட்டாள்.

" மலைநாடனே ! திருமணம் செய்துகொள்வதாக நீ சொல்லிவரும் மெய்ம் மொழிகள் போதும் ; போகட்டும். மூங்கில்கள் ஒன்றோடொன்று பிணைந்த கல்வழியாகிய சிறு

*நற். 300. பரணர்.

வளை விலை - திருமணத்திற்காகப் பெண்வீட்டார்க்குக் கொடுக்கும் பொருள், பரிசம் அல்லது பரியம் எனப்படுவது. பண்ணி - அலங்கரித்து. முன்கடை - முன்வாயில். நிறீஇ - நிறுத்தி. சென்றிசினோன் - சென்றான். போதல் செல்லாது - போக முடியாமல். அட்டில் - சமையலறை. நின்மே - நில்.

நெறியில் புலி முதலிய பொல்லாத பகைகளைப் பொருட் படுத்தாமல் இரவில் வருகின்றாய். வந்து இவளுடைய மார்பைத் தழுவுதலால், உன் மாலையில் உள்ள வண்டுகள் இவளுடைய தோளைச் சேர்ந்து அளவில்லாமல் மொய்க்கின் றன. அன்னை அவற்றைத் தன் கண்களால் கொல்லுதல் போல் பார்த்து, 'நீ முன்பும் இப்படித்தான் இருந்தாயோ?' எனக் கேட்டாள். அதற்கு எதிராகத் தலைவி ஒன்றும் சொல்லாமல் வருந்தி என் முகத்தை நோக்கினாள். அந்தோ, இவள் எப்படி உணர்ந்து கூறித் தப்பப் போகிறாள் என்று யான் வருந்தி, அடுப்பில் வைத்த சந்தன விறகின் கொள்ளி யைக் காட்டி, இதனால்தான் வண்டுகள் வந்து சேரலாயின என்றேன்:"

தோழி:

ஓங்குமலை நாட! ஒழிகநின் வாய்மை;
காம்புதலை மணந்த கல்அதர்ச் சிறுநெறி
உறுபகை பேணாது இரவின் வந்துஇவள்
பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்பு
அறுகால் பறவை அளவில மொய்த்தலின்
கண்கோ ளாக நோக்கிப் பண்டும்
இனையை யோஎன வினவினள் யாயே;
அதன்எதிர் சொல்லாள் ஆகி அல்லாந்து
என்முகம் நோக்கி யோளே; அன்னாய்
யாங்குஉணர்ந்து உய்குவள் கொல்என மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்குஆ யினவால் என்றிசின் யானே.*

---

*நற். 55. பெருவழுதி.

காம்பு - மூங்கில். பொறி - தேமல் புள்ளிகள். ஆகம் - மார்பு. புல்ல - தழுவ. சேர்பு - சேர்ந்து. பறவை - வண்டு. கோளாக -

34. நட்பின் தன்மை

ஒரு கடமையை முன்னிட்டு வெளியூர்க்குச் சென்று சிலநாள் தங்க வேண்டியிருப்பதாகவும், திரும்பிவரும் வரையில் துயரப்படாமல் பொறுத்திருக்கவேண்டும் என்பதாகவும் தலைவன் கூறிவிட்டுப் பிரிந்தான். அவன் பிரிந்தபிறகு தலைவி துயருற்றாள்; உறக்கம் இழந்து வாடினாள். அவளுடைய துயரம் அயலார்க்குத் தெரியாதிருக்கவேண்டும் என்று கவலையுற்ற தோழி, வருந்தலாகாது என்று தலைவிக்கு வற்புறுத்திக் கூறினாள். தலைவியோ மிகக் கலங்கினாள். உறக்கம் இல்லாமையாலும் கவலையாலும் இராப்பொழுது மிக நீண்டு தோன்றுவதாக உணர்ந்தாள். கண்ணுறங்காமல், ஆறாத புண்ணால் வருந்துபவர்போல் பெருமூச்சுவிட்டுத் துயரத்தை அடக்கிக்கொண்டு, படுக்கையில் புரண்டாள். கடலின் அலைகளும் தன்னைப் போல் மெல்ல ஒலித்துப் புரண்டு புரண்டு துன்புறுதல்போல் அவளுக்குத் தோன்றின. பொழுது எப்போது விடியும் என்று இரவெல்லாம் ஏங்கினாள். பொழுது விடியப் போவதாகத் தோன்றவில்லை; இரவே நீட்டிப்பதாக உணர்ந்தாள். அயலார் அலர் தூற்றுமாறு தன் மேனி வாடிப் பசலை யுற்றதைக் கண்டு வருந்தினாள். தலைவனைக் கண்டு காதல் கொள்வதற்குமுன், தான் கவலையில்லாமல் உறங்கியதையும் மகிழ்ச்சியோடு நாட்களைக் கழித்ததையும் எண்ணினாள். தலைவன் கடற்கரைமணலில் தான் விளையாடிய இடத்திற்கு வந்து சிற்றிலை அழித்துவிட்டுப் பிறகு அன்பும் பணிவுமான சொற்களைச் சொல்லிச் சென்ற அந்த

கொலையாக. இனையையோ - இப்படி இருந்தாயோ. அல்லாந்து - வருந்தி. மடுத்த - சேர்த்த. ஞெகிழி - கொள்ளி. ஈங்கு - இவ்வாறு (சந்தன மரத்திலிருந்து). என்றிசின் - என்றேன்.

னாளை நினைத்தாள். அப்போது ஆராய்ந்து பார்க்காமல் அவனிடம் கொண்ட காதலே இவ்வளவு துன்பத்திற்கும் காரணம் என்று உருகி, தோழியிடம் கூறினாள்.

" நள்ளிரவுகள் நெடுநேரம் உடையனவாய்க் கழிகின்றன. காதலும் என்னைக் கண்ணுறங்கவிடாமல் மிகுகின்றது. தெளிந்த கடலில் முழங்கும் அலைகள் முழவின் ஒலி போல் மெல்ல மெல்ல ஒலித்து, பல நாட்களாக ஆறாத பழம் புண்ணால் வருந்துகின்றவர்களைப் போல் புரண்டு புரண்டு அசைகின்றன. அவை எல்லாம் வருத்தவும், இரவு கழிந்து முடியவில்லை. பொழுது விடியவில்லை. அலர் கூறும் வாயையுடைய அயல் வீட்டுப் பெண்கள் என் பசலை நிறத்தைப் பற்றித் தூற்றும்படி இவ்வாறு ஆயிற்று. தோழி! ஓங்கிய மணலில் புனைந்த சிற்றிலைச் சிதைத்து என்னிடம் வந்து தலைவன் அன்புடன் கூறிய பணிவான மொழியை விரும்பி, அவனுடன் ஆராயாமல் நட்புக்கொண்டேன். அந்த நட்பின் தன்மை இவ்வாறு ஆயிற்று!"

தலைவி :

யாமமும் நெடிய கழியும்; காமமும்
கண்படல் ஈயாது பெருகும்; தெண்கடல்
முழங்குதிரை முழவின் பாணியின் பைபயப்
பழம்புண் உறுநரின் பரவையின் ஆலும்;
ஆங்குஅவை நலியவும் நீங்கி யாங்கும்
இரவுஇறந்து எல்லை தோன்றலது; அலர்வாய்
அயல்இல் பெண்டிர் பசலை பாட
ஈங்குஆ கின்றால் தோழி! ஓங்குமணல்
வரிஆர் சிறுமனை சிதைஇ வந்து

பரிவுதரத் தொட்ட பணிமொழி நம்பிப்
பாடுஇமிழ் பனிநீர்ச் சேர்ப்பனொடு
*நாடாது இயைந்த நண்பினது அளவே.**

35. நெஞ்சின் போர்

தலைவன் சிலநாள் வரமுடியாமல் தன் ஊரில் நின்று விட்டபோது, அவனைக் காணாத தலைவி துயருற்றாள். அது நிலாக்காலம். நிலவு பால்போல் பரந்து பலர்க்கும் மகிழ்ச்சி ஊட்டியது. ஆனால் அதுவே தலைவியின் துயரத்தை வளர்த்தது. ஊரார் எல்லோரும் கூடித் தெருக்களில் திருவிழாக் கொண்டாடிக் களித்தனர் ; தனித்துத் துன்புற்ற தலைவிக்கு அதுவும் துயரம் பெருகச் செய்தது. சோலைகளில் மலர்கள் நிறைந்து வண்டுகள் துணையோடு தேன் நுகர்ந்து மகிழ்ந்தன ; அதுவும் தலைவிக்கு அவளுடைய தனிமையை நினைவூட்டித் துயரத்தை மிகுத்தது. இரவெல்லாம் உறங்காமல் கண்விழித்து வருந்தும் நிலைமை உற்றாள். அந்நிலையில் உலகம் ஒரு புறமும் தான் மற்றொரு புறமுமாக நின்று ஏதோ போர் நடப்பதுபோல் உணர்ந்தாள்.

---

*நற். 378. வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்.

நெடிய - நெடும்பொழுது உடையனவாய். பாணியின் - ஒலி போல. பையப - மெல்ல மெல்ல. உறுநரின் - உற்றவர்போல். பரவையின் - கடலில். ஆலும் - அசையும். எல்லை - பகல், சூரியன். ஆகின்று - ஆயிற்று. வரிஆர் - புனைதல் பொருந்திய. சிதைஇ - சிதைத்து. பரிவு - அன்பு. நம்பி - விரும்பி. பாடு - ஒலி. இமிழ் - ஒலிக்கின்ற. பனிநீர் - கடல். சேர்ப்பன் - நெய்தல்நிலத் தலைவன். நாடாது - ஆராயாமல். இயைந்த - பொருந்திய.

"நிலவு, நீலநிற வானத்தில் வெண்ணிறக் கதிர்கள் பல பரப்பிப் பால் நிறைந்த கடல்போல் பரந்து விளங்குகிறது. ஊர்முழுதும் மிக்க பேரொலியோடு மக்கள் நிறையச் சேர்ந்து திரண்டு ஆரவாரமான தெருக்களில் திருவிழாக் கொண்டாடுகின்றனர். காடோ, அழகிய மலர்கள் நிறைந்த பொழில்கள்தோறும் வண்டுகள் தாம் விரும்பிய துணையோடு ஒலித்து மகிழுமாறு விளங்குகிறது. யானோ, அணிகலன் நெகிழுமாறு செய்த தனிமைத் துயரத்தோடு மிக நீண்ட இராப்பொழுது முழுதும் கண் உறங்காமல் வருந்துகிறேன். அதனால், இந்த உலகம் என்னைத் தாக்கிப் போர் நிகழ்த்துமோ? அல்லது, உலகத்தோடு என் துயருற்ற நெஞ்சம் போர் நிகழ்த்துமோ?"

தலைவி :

நிலவே, நீனிற விசும்பில் பல்கதிர் பரப்பிப்
பால்மலி கடலின் பரந்துபட் டன்றே ;
ஊரே, ஒலிவரும் சும்மையொடு மலிதொகுபு ஈண்டிக்
கலிகெழு மறுகின் விழவுஅய ரும்மே ;
கானே, பூமலர் கஞலிய பொழிலகந் தோறும்
தாம்அமர் துணையொடு வண்டுஇமி ரும்மே ;
யானே, புனையிழை ஞெகிழ்த்த புலம்புகொள் அவல [மொடு
கனையிருங் கங்குலும் கண்படை இலனே ;
அதனால், என்னொடு பொருங்கொல்இவ் வுலகம்;
உலகமொடு பொருங்கொல்என் அவலமுறு நெஞ்சே.*

*நற். 348. வெள்ளிவீதியார்.

நீனிற - நீலநிறமான. பட்டன்று - பட்டது. சும்மை - ஒலி. மலி - நிறைய. தொகுபு - சேர்ந்து. ஈண்டி - சேர்ந்து. கலி - ஆரவாரம். மறுகு - தெரு. கான் - காடு. கஞலிய - நிறைந்த. பூமலர் - பூத்தமலர், அழகிய மலர். அமர் - விரும்பிய. ஞெகிழ்த்த - நெகிழச்செய்த. அவலம் - துயரம்.

36. உலையில் தெளித்த நீர்

திருமணத்திற்குப் பொருள் தேடி வருவதற்காகத் தலைவன் பிரிந்து பல நாள் ஆகியும் வரவில்லை. தலைவி பிரிவாற்றாமல் வாடினாள், வருந்தினாள். ஊர்ப்பெண்கள் சிலர் முன்னமே ஐயுற்றிருந்தவர்கள் இப்போது தலைவியின் மெலிவையும் துயரையும் கண்டு அலர் தூற்றினார்கள். அதை அறிந்த தலைவியின் துயர் மேலும் பெருகியது. அப்போது அவளைத் தேற்ற வந்த தோழி, இப்படித் துன்பம் செய்ய மாட்டார் தலைவர் என்றும், அவர் வாராமைக்கு ஏதேனும் காரணம் இருக்கலாம் என்றும், இனி விரைவில் வந்து விடுவார் கைவிடமாட்டார் என்றும் பலவாறு கூறினாள். அந்தச் சொற்களைக் கேட்ட தலைவி ஒரு சிறிது ஆறுதல் பெற்றுப் பின்வருமாறு கூறினாள்.

"கொடிய வாய் உள்ள பெண்கள் அலர் தூற்றும் படியாக நாம் இப்போது உறுகின்ற துயரத்தை அவர் செய்யமாட்டார் என்று சொல்லும் தோழி! நீ கூறும் அன்பான சொல், இரும்புத் தொழில் செய்யும் கொல்லன் வெப்பமான உலையிலே தெளிக்கும் (பனைமடல் தோய்த்த) சிறிது நீர் உலைநெருப்பைச் சிறிதளவு தணிப்பது போல், துன்பம் மிக்க என் நெஞ்சிற்குச் சிறிது நன்மை யாகும்."

தலைவி :

வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்ற
நாம்உறு துயரம் செய்யலர் என்னும்
காமுறு தோழி! காதலங் கிளவி
இரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த

தோய்மடல் சின்னீர் போல
நோய்மலி நெஞ்சிற்கு ஏமமாம் சிறிதே.*

37. தெய்வம் பரவுவோம்

திருமணத்திற்காகப் பொருள்தேடி வருவேன் என்று தலைவன் கூறிப் பிரிந்தான். பிரிந்து சென்று பலநாள் ஆகியும் வராமையால் தலைவி வருந்தி மெலிந்தாள். தோள் நெகிழ, அழகிய தேமல் வாட, மென்மையான மார்பு பசலையுற வருந்தினள். களவின் தொடக்கத்தில் 'உன்னை விட்டுப் பிரியேன்' என்று தெய்வத்தின் முன்னிலையில் தலைவன் கூறிய உறுதிமொழியை அடிக்கடி நினைந்து வருந்தினள். இதனை உணர்ந்த தோழி அவளை ஆற்றுவிக்கப் பலவாறு முயன்றாள். முயன்றும் பயன் இல்லை. இறுதியில் ஒருவழி எண்ணினள். தலைவன் தெய்வத்தின் முன்னிலையில் உரைத்த உறுதிமொழிப்படி அவன் நடக்காமையால் தெய்வம் அவனை வருத்தக்கூடும் என்று கூறத் துணிந்தாள். அவ்வாறு கூறினல், தலைவன் துன்புறலாகாதே என்ற ஏக்கம் தலைவிக்குத் தோன்றி, உள்ள துயரை மாற்றும் என நம்பினள். தெய்வம் வருத்தாதவாறு அதை வழிபடுவோம் வா என அழைத்து அவளுடைய துயரை மாற்றினள்.

*நற். 133. நற்றமனர்.

கௌவை - அலர். காமுறு - விருப்பமான. கிளவி - சொல். வெவ்வுலை - வெப்பம் மிக்க உலை. சில்நீர் - சிறிது நீர். ஏமம் - காவல், இன்பம்.

" 'பெரிய தோள் நெகிழ, அழகிய தேமல் வாட, சிறிய மெல்லிய மார்பில் பெரிய பசலை பரவ, இவ்வாறு துன்புற்ற என் துயரத்தைக் கண்டு, அன்று அவர் கூறிய உறுதிமொழி தவறியதனால் ஏற்பட்டது என்று அவரை வருத்தாதே, தெய்வமே! உன் முன்னிலையில் அவர் அவ்வாறு கூறி என்னைத் தெளிவித்த போதிலும், அதற்காக அவரை வருத்தாதே' என்று தெய்வத்திற்கு உயர்ந்த பலி இட்டு வழிபட்டுவருவோம், வா, தோழி! பெறுதற்கரிய சிறந்த அழகு தொலையுமாறு விட்டுப் பிரிந்து தம் ஊரில் அமைதியாகத் தங்கியிருக்க வல்லவராகிய அவரை வருத்த வேண்டா என்று வழிபட்டு வருவோம்."

தோழி :

பெருந்தோள் நெகிழ அவ்வரி வாடச்
சிறுமெல் ஆகம் பெரும்பசப்பு ஊர
இன்னேம் ஆக எற்கண்டு நாணி
நின்னொடு தெளித்தனர் ஆயினும் என்னதூஉம்
அணங்கல் ஓம்புமதி வாழிய நீஎனக்
கணம்கெழு கடவுட்கு உயர்பலி தூஉய்ப்
பரவினம் வருகம் சென்மோ தோழி......
அரும்பெறல் ஆய்கவின் தொலையப்
பிரிந்துஆண்டு உறைதல் வல்லி யோரே.*

*நற். 358. நக்கீரர்.

அவ்வரி - அழகிய வரிகள். பசப்பு - பசலை. இன்னேம் - இத்தன்மையேம். எற்கண்டு - என்னைக் கண்டு. தெளித்தனர் - நம்புமாறு உறுதிமொழி கூறினர். என்னதூஉம் - சிறிதும். அணங்கல் - வருத்துதலை. ஓம்பு - விடு, தவிர். மதி - முன்னிலை அசை. கணம்கெழு - கூட்டம் பொருந்திய. பரவினம் வருகம் - பரவி வருவோம். சென்மோ - செல். கவின் - அழகு. ஆண்டு - தம் ஊரில். வல்லியோர் - வல்லவர்.

38. அறியாய் முருக!

காதலன்பிரிவால் தலைவி வாடி மெலிந்து வருந்துவதை உணராத தாய், தெய்வத்தால் வந்த நோய் என எண்ணி வேலனை (முருகனை வழிபடும் பூசாரியை) அழைத்து வெறி யாடுவதற்கு (தெய்வம் வருவித்து ஆடுவதற்கு) ஏற்பாடு செய்தாள். அதன்படியே வேலன் வந்து வழிபாட்டுக்கு உரியவை செய்தான். அங்குத் தலைவி வந்திருந்து முருகனை வழிபட வேண்டும். காதலன் ஒருவனுக்குத் தன் உள்ளத் தைப் பறிகொடுத்த பெண் ஆகையால், கணவன் இல்லாமல் தெய்வம் தொழுவது கற்புக்கு இழுக்கு என்று தலைவி வருந்தி நடுங்கினாள். அவளுடைய இடர்ப்பாடான நிலைமை யைக் கண்ட தோழி தாயிடம் சென்று 'உன் மகள் ஒன் றும் தெரியாத பெண் அல்லள்; ஒருவனைக் காதலனாகக் கொண்ட கற்புடை நங்கை. ஆதலின் அவள் வெறியாட லுக்கு இசைந்து வந்து முருகனை வழிபடுதல் தகுமோ என்று அறிவுறுத்தித் தடுக்க எண்ணினாள். ஆயின், அவ் வாறு நேரில் கூறி உண்மையை விளக்க முடியாமல், முருக னைப் பார்த்தே விளிப்பவள் போல் விளித்துத் தன் கருத் தைத் தெளிவித்தாள்.

" காதலனுடைய மார்பு தந்த நோய் இது. முருகனே! உன்னால் வந்த துன்பம் அன்று. இதை அறிந்திருந்தும், நீ தலைநிமிர்ந்து கார்காலத்து நறுமணம் கமழும் கடப்ப மாலை யைச் சூடிக்கொண்டு வெறியாடும் இந்த மனைக்கு வந்திருக் கிறாய். நோய் இன்னது என்று அறியாத வேலன் (பூசாரி) வேண்டி அழைத்தது கேட்டு வந்தாய். நீ தெய்வமாக இருப்பினும் இருக்கலாம்; ஆயினும் உறுதியாகச் சொல் வேன். நீ உண்மை நிலை அறியாய்."

தோழி :

...........நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின் அணங்கு அன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய் !
கடவுள் ஆயினும் ஆக ;
மடவை மன்ற வாழிய முருகே.*

39. அவள்கண்கள் கலுழ்ந்தன

தலைவனுடன் தலைவியை வெளியூர்க்கு அனுப்பிவிடுதற்கு இசைந்து ஏற்பாடு செய்திருந்த தோழி, வைகறையில் அவன் வந்து நின்றபோது அனுப்புவதற்குத் தயங்கினாள். தலைவன் மனம் வருந்தாதவாறு ஒரு காரணமும் புனைந்து கூறினாள். உடன் போவதற்கு முதலில் இசைந்த தலைவி, இப்போது கலங்கி வருந்திக் கண்ணீர் விடுவதாகவும், தோழியர் கூட்டத்தைப் பிரிந்து வெளியூர் வர மனம் இன்றி வருந்துவதாகவும் கூறினாள். அதனால் பயணம் தடைப்பட்டது.

" இருள் தீரப் புலர்கின்ற விடியற்காலத்தில் யார்க்கும் தெரியாமல் மறைந்து தன் காலின் சிலம்புகளைக் கழற்றி அவற்றைத் தான் விளையாடும் பந்துடன் வீட்டின் ஒரு

*நற். 34. பிரமசாரி.

படர் - நினைந்து வருந்தும் துன்பம். மலி - மிக்க. அணங்கு - வருத்தம். கண்ணி - தலைமாலை. மடவை - அறியாமை உடையாய். மன்ற - திண்ணமாக.

புறத்தில் வைப்பதற்காகச் சென்றாள் தலைவி. சென்றவள், 'நான் பிரிந்துவிட்ட பிறகு இவற்றைக் காணும்போதெல்லாம் என் ஆயத்தார் வருந்துவார்களே! அந்தோ!' என்று கண் கலங்கி அழுதாள். அவள் உன்னோடு வெளியூர்க்கு வரும் கடமையை மேற்கொண்டிருந்தும், அவளுடைய கண்கள் அவள்வயமாக நிற்காமல் அழுதன."

தோழி :

வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரி அமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்
'இவைகாண் தோறும் நோவர் மாதோ
அளியரோ அளியர்என் ஆயத் தோர்' என
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத் தன்றியும் கலுழ்ந்தன கண்ணே.*

40. என்றும் கைவிடாதே

தலைவனும் தலைவியும் பெற்றோர் அறியாமல் வீட்டை விட்டு வெளியூர்க்குச் செல்ல ஏற்பாடு ஆயிற்று. தோழி நள்ளிரவில் தலைவன் இருக்கும் இடத்தில் தலைவியைக் கொண்டுவந்து சேர்த்தாள். தலைவியை இன்று போலவே என்றும் கைவிடாமல் காத்தல்வேண்டும் என்று கூறித் தலைவனிடம் ஒப்படைத்தாள்.

---

*நற். 12. கயமனார்.

அரி அமை - உள்ளே பரல் அமைந்த. கழீஇ - நீக்கி. பல் மாண் - பலவாறு மாட்சி உற்ற. வைஇய - வைக்க. மாதோ - அசை. அளியர் - இரங்கத்தக்கார். வரைத்து - அளவினது.

"அண்ணாந்து நிமிர்ந்துள்ள இவளுடைய மார்பு தளர்ந்த காலத்திலும், பொன் போன்ற அழகிய மேனியில் இன்று கருமணிபோல் தொங்கும் நல்ல நெடிய கூந்தலில் நரை தோன்றி முடிக்கும் முதுமை வந்தபோதும் இவளைக் கைவிடாதே. தொடக்கத்தில் நீ கூறிய பிழையாகாத நல்ல சொற்களை உண்மை என்று நம்பித் தெளிந்து உன்னிடம் காதல் கொண்டவள் இவள். இவளை என்றும் கைவிடா திருக்கவேண்டும்."

தோழி :

அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த
நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர !
............நின்
*பிழையா நன்மொழி தேறிய இவட்கே.**

41. வருந்தாமல் செல்க

வீட்டாரின் காவலும் ஊராரின் பழியும் தாங்க முடியாமல் தலைவி தலைவனோடு புறப்பட்டு வெளியூர்க்குச் செல்லத் துணிந்தாள். பெற்றோர் அறியாமல் நள்ளிரவில் வீட்டிலிருந்து புறப்பட்டுத் தலைவனோடு சென்றாள். அவள்

---

*நற். 10.

வனம் - அழகு. மணியின் - கருமணிபோல். நீத்தல் - கைவிடுதலை. ஓம்பு - செய்யாதே. மதி - முன்னிலை அசை. இவட்கு - இவளை.

வருந்தாமல் வருமாறு இன்சொல் கூறியும் பாராட்டியும் தலைவன் அழைத்துச் சென்றான்.

" அழிவற்ற நற்செயல்களில் ஈடுபட்டு முயற்சி செய்யும் ஆர்வம் உடைய மக்கள் தாம் வழிபடும் தெய்வத்தைக் கண்கூடாகக் கண்டது போல், மனம் கலங்கி வருந்திய வருத்தம் தீருமாறு யான் நின் அழகிய தோள்களை அடைந்தேன். அதனால் நீ வருந்தாமல் செல்க. இதோ இந்தப் பொரி போன்ற மலர்களை உடைய புன்கமரத்தின் அழகிய ஒளியுள்ள தளிரைத் தேமல் அமைந்த மார்பில் அழகுற அப்புக. நிழல் காணும்போதெல்லாம் நெடுநேரம் தங்குக. மணல் காணும்போதெல்லாம் சிற்றில் இழைத்து விளையாடுக. மாமரத்தில் அரும்புகளைக் கோதி மகிழ்கின்ற குயில்கள் கூவும் பொழில்கள் வழியில் உள்ளன. வழியெல்லாம் சிறு சிறு ஊர்கள் பல உள்ளன. ஆகையால் ஒரு கவலையும் இல்லாமல் வருந்தாமல் செல்க."

தலைவன் :

அழிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண் டாஅங்கு
அலமரல் வருத்தம் தீர யாழநின்
நலமென் பணைத்தோள் எய்தினம் ஆகலின்
பொரிப்பூம் புன்கின் எழில்நகை ஒண்முறி
சுணங்குஅணி வனமுலை அணங்குகொளத் திமிரி
நிழல்காண் தோறும் நெடிய வைகி
மணல்காண் தோறும் வண்டல் தைஇ
வருந்தாது ஏகுமதி வால்எயிற் றோயே !
மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும்

நறுந்தண் பொழில கானம்
குறும்பல் ஊரயாம் செல்லும் ஆறே.*

42. நீ சிறிது விளையாடுக

தலைவன் தலைவியை அழைத்துக்கொண்டு, யாரும் அறியாமல் வெளியூர்க்குப் போய்க்கொண் டிருந்தான். தலைவி வீட்டில் இல்லாததை உணர்ந்ததும், அவளுடைய பெற்றோரும் உற்றாரும் இங்கும் அங்கும் தேடத் தொடங்கினர். தலைவன் தலைவியுடன் சென்றவழியிலும் சிலர் தேடிச் சென்றனர். அவ்வழியில் முன்னே போய்க்கொண்டிருந்த தலைவனும் தலைவியும் ஒருமுறை திரும்பிப் பார்த்தபோது, யாரோ சிலர் விரைந்து வருதலைக் கண்டனர். கண்டதும் தலைவியின் நெஞ்சம் கலங்கி வருந்தியது. தன் வீட்டார் வந்து என்ன செய்வரோ என்றும், தன்னால் தன் காதலனுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்றும் கலங்கினாள். அவளுடைய உள்ளத்தின் வருத்தத்தை முகக் குறிப்பால் உணர்ந்த தலைவன், உடனே அவளைத் தேற்றுவதற்கு வழி கண்டான். அங்கே ஓடிய தம்பலப்பூச்சிகளைச் சுட்டிக் காட்டி, அவற்றோடு விளையாடுமாறு கூறி, தான் ஒரு பெரிய வேங்கைமரத்தின் பக்கத்தில் ஒதுங்கி யிருப்பதாகவும்

நற். 9. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

அழிவில - நிலையான நற்செயல்கள். அலமரல்-மனம் சுழலல். முறி - தளிர். திமிரி - அப்பி. வண்டல் - சிறுமியர் விளையாட்டு. வால் எயிற்றோய் - வெண்ணிறப் பற்களை உடையாய். நனை - அரும்பு. யாழ - முன்னிலை அசை.

வருபவர்கள் கள்வராக இருந்தால் போர் செய்து ஒழிப்ப தாகவும், அவர்கள் தலைவியின் வீட்டாராக இருந்தால் ஒருவகை இடையூறும் ஏற்படுத்தாமல் தான் ஒளிந்துகொள்வ தாகவும் கூறினான்.

" வேலைப்பாடு அமைந்த அழகிய பாவைபோல் இயங்கி உன் தந்தையின் வீட்டின் எல்லையைக் கடந்து வந்துவிட்ட தற்காக வருந்தாதே. அழகு மிகுந்த காட்டின் அகன்ற இடங்களில் பரவி விரைவாகச் செல்லும் தம்பலப் பூச்சி களைப் பார்த்தும் பிடித்தும் நீ சிறிது இங்கே விளையாடுக. யான், பருத்த அடியை உடைய வேங்கைமரத்தின் பெரிய பின்புறத்தில் மணல் பரந்த பக்கத்தில் ஒதுங்கியிருந்து, ஆறலைகள்வர் முதலானவர்கள் போர் செய்ய வரின் அஞ் சாமல் தாக்கி அவர்களை ஓடுமாறு செய்வேன்; அல்லது உன் வீட்டார் வரின் மறைந்துகொள்வேன்."

தலைவன் :

வினைஅமை பாவையின் இயலி நுந்தை
மனைவரை இறந்து வந்தனை ஆயின்......
அணிமிகு கானத்து அகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டும் கொண்டும்
நீவிளை யாடுக சிறிதே; யானே
மழகளிறு உரிஞ்சிய பராரை வேங்கை
மணல்இடு மருங்கின் இரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்;
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே.

---

*நற். 362. மதுரை மருதனிளநாகனார்.

பாவையின் - பாவைபோல். இயலி - நடந்து. வரை - எல்லை. இறந்து - கடந்து. கடு - வேகம் உள்ள. செம்மூதாய் - தம்பலப் பூச்சி. மழ - இளமையான. பராரை - பருத்த அரை.

43. அவள்மேல் குற்றம் இல்லை

தலைவியின் களவொழுக்கம் பற்றி மெல்ல மெல்ல ஊர்ப் பெண்கள் சிலர் ஐயுற்று அறிந்தனர்; அலர் தூற்றினர். தலைவியின் தாயிடமும் சிலர் வந்து கூறினர். தாயின் மனம் இத்தனைக்கும் மாறவில்லை. தன் மகள் ஒன்றும் அறியாத இளம்பெண் என்றே அந்தத் தாய்மனம் நம்பியது. ஆயினும், தாய் அதைப் பற்றி மகளிடம் ஒன்றும் கேட்காமலும் இருக்கவில்லை. ஒன்றும் தெரியாதவள் போல் வாளா இருந்துவிட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஒருநாள் மகளிடம் வேறுவகையாகக் கேட்டாள். "உன் கூந்தலில் புதுமணம் கமழ்கின்றதே, முன்போல் இல்லையே" என்று கேட்டாள். தாய் தன் களவொழுக்கத்தை எவ்வாறோ அறிந்துகொண்டாள் என்று தலைவி மிக வருந்தினாள். சில நாட்கள் எண்ணி எண்ணித் துணிந்தாள். ஒருநாள் இரவில் தலைவனோடு வெளியூர்க்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டாள். தலைவியை வீட்டில் காணாத தாய், காரணம் உணர்ந்து தன் தவறு நினைந்து தன்னையே நொந்துகொண்டு பின்வருமாறு வருந்தினாள்.

"யான் வருந்தி மெலிவேனாக. மணல் கொண்டுவந்து பரப்பிய அழகிய வீட்டின் முற்றத்தில் ஓரை விளையாடுகின்ற தோழியர்கூட்டத்தையும் விளையாடும் இடத்தில் உள்ள நொச்சிவேலியையும் காணும்போதெல்லாம் விரைந்து நீர் சொரியும் கண்ணோடு அழுகின்றேன். என்னைவிட மிக வருந்தி, அவள் வளர்த்த கிளியும் உறவுபோல் அவளை விளித்துக் கூவுகின்றது. என் இளமகள் குற்றம் இல்லாதவள்.

இரும்புறம் - பெரிய பின்பக்கம். பெயர்க்குவென் - திரும்பி ஓடச் செய்வேன். நுமர் - நும்மவர், உன் வீட்டார். மாஅயோளே - மா(மை) நிறம் உள்ளவளே.

அம்பல் மிகுந்த இந்தப் பழைய ஊரில் அலர் தூற்றும் வாய் உடைய பெண்கள் கூடிச் சொல்லிய கொடிய சொற்களைக் கேட்டபின் சிலநாள் வரையில் ஒன்றும் தெரியாதவள் போல் இருந்திருக்கவேண்டும்; அவ்வாறு இருக்கத் தவறினேன். உன் கூந்தல் புதிய மணம் கமழ்கின்றதே. என்று மகளைக் கேட்டுவிட்டேனே!"

ஐதே கம்ம யானே ஒய்யெனத்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
ஓரை ஆயமும் நொச்சியும் காண்தொறும்
நீர்வார் கண்ணேன் கலுழும் என்னினும்
கிள்ளையும் கிளையெனக் கூவும்; இளையோள்
வழுவிலள் அம்ம தானே; குழீஇ
அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்
இன்னா இன்னுரை கேட்ட சின்னாள்
அறியேன் போல உயிரேன்
நறிய நாறும்நின் கதுப்புஎன் றேனே.

மகளைப் பற்றிப் பழிதூற்றும் சொல்ஆகையால், 'இன்னா உரை' என்ற போதிலும், மகள் காதலன் ஒருவனை நாடியுள்ளாள் என்ற செய்தி இனிய உரை ஆகையால் 'இன்னா இன்னுரை' என்றாள்.

---

*நற். 143. கண்ணகாரன் கொற்றனார்.

ஒய்யென - விரைவில். தரு - கொண்டுவரப்பட்ட. ஞெமிரிய - பரப்பிய. ஓரை - பாவை வைத்து விளையாடும் ஒருவகை விளையாட்டு. கிளை - உறவு. குழீஇ - கூடி. அம்பல் - வாய்விட்டுக் கூறாமல் சிலர்மட்டும் அறிய மெல்லப் பழி தூற்றல். அலர் - பலரும் அறியப் பழிதூற்றல். சின்னாள் - சிலநாள் வரையிலாவது. உயிரேன் - மூச்சு விடுதலோடு இருக்காமல். கதுப்பு - கூந்தல்.

44. நெஞ்சம் வேகின்றதே !

தலைவி தலைவனுடன் வைகறையில் புறப்பட்டு வெளியூர்க்குச் சென்றுவிட்டபின், தேடிக்காணுமல் தாய் வருந்தினுள். பக்கத்து வீட்டுப் பெண்கள் எவ்வளவோ உண்மைகளையும் சான்றுகளையும் எடுத்துக்கூறித் தேற்ற முயன்றனர். "இது இயற்கை; காதல்துணையைத் தேடிச் சென்ருள் என்பதற்காக வருந்தலாமோ? வருந்தவேண்டா" என்று கூறினர். அவர்கள் கூறியதைக் கேட்ட தாய்க்குத் துயரம் மிகுந்ததே தவிர, குறையவில்லை. அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினுள்.

"யான் ஒரு மகள் உடையவள். அந்த ஒரு மகளும் கூரிய வேல் ஏந்திய காளை ஒருவனேடு பெரிய மலையில் உள்ள அரிய வழியில் நேற்றுச் சென்றுவிட்டாள். இப்போதோ, உன் துயரத்தைப் பொறுத்துத் தாங்கிக்கொள் என்று எனக்குச் சொல்கின்றீர்கள். அது எவ்வாறு முடியும்? எல்லாம் அறிந்தவர்கள் நீங்கள். என் நிலைமையை எண்ணிப் பாருங்கள். நினைத்தால் நெஞ்சம் வேகின்றதே! என் கண்ணின் மணியில் வாழும் பாவையே வெளியே வந்து நடை கற்றுற்போன்ற அழகிய தன்மை உடைய என் இளமகள் அவள். அப்படிப்பட்டவள் விளையாடிய நொச்சியையும் திண்ணையையும் கண்டு அவளை நினைந்தால் நெஞ்சம் வேகின்றதே."

தாய் :

ஒருமகள் உடையேன் மன்னே; அவளும்
செருமிகு மொய்ம்பின் கூர்வேல் காளையொடு
பெருமலை அருஞ்சுரம் நெருநல் சென்றனள்;
இனியே, தாங்குநின் அவலம் என்றிர்; அதுமற்று
யாங்ஙனம் ஒல்லுமோ? அறிவுடை யீரே!

உள்ளின் உள்ளம் வேமே உண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னஎன்
அணிஇயல் குறுமகள் ஆடிய
மணிஏர் நொச்சியும் தெற்றியும் கண்டே.*

45. பொய்யை நம்பினள்

பெற்ற தாய் அவளைத் தேடிக்காணமல் வருந்தலானள். தன் மகள் காதலன் ஒருவனைக் கைப்பிடித்து வாழத்தொடங்குவது இயற்கை என்பதை நன்கு அறிந்திருந்தும், அவள் மனம் அமைதியுறவில்லை. அவள் இளம்பெண், மிக அஞ்சுபவள், வேளைவேளைக்கு வேண்டி உண்ணச் செய்தாலும் உண்ணுதவள்: இத்தகையவள் ஒருவன்பேச்சை நம்பிக் கொடிய பாலைவழியில் சென்ருளே என்று வருந்திருள். சொல்லவும் சொல்லாமல் தன்னைப் பிரிந்து சென்று விட்டாளே என்பதை ஒரு சிறிதும் நினைக்கவில்லை அந்தத் தாயின் உள்ளம். கொடிய வழியில் தன் இளம்பெண் அஞ்சுவாளே என்றும், ஒன்றும் அறியாமல் கலங்குவாளே என்றும், செல்வமாக வளர்ந்தவள் அங்கே அல்லல் உறுவாளே என்றும் அவள் படும் துன்பங்களை நினைந்தே வருந்திருள்.

*நற். 184.

மன்–அசை; அந்த நிலை கழிந்ததே என்னும் குறிப்பு உடையது. செரு – போர். மொய்ம்பின் – வலிமை உடைய. அவலம் – துயரம். என்றிர் – என்கின்றீர். யாங்ஙனம் – எப்படி. ஒல்லும் – முடியும். வேம் – வேகும். உண்கண் – மைதீட்டிய கண். மணி – கண்மணி. கற்றன்ன – கற்றதுபோன்ற. மணிஏர் – நீலமணி போன்ற அழகு உடைய. தெற்றி – திண்ணை.

“ வீட்டில் வளர்ந்தெழுந்த வயலைக் கொடியைக் கன்று ஈன்ற பசு தின்றதாக, அதைக் கண்டவுடன் கையிலிருந்த பந்தை நிலத்தில் எறிந்துவிட்டு, பாவையையும் விட்டுவிட்டு, தன் அழகிய வயிற்றில் அடித்துக்கொண்டு வருந்தினாள் என் இளமகள். மான் மாறுபட்டு நோக்குவது போன்ற மயங்கிய நோக்கத்தோடு அடிக்கடி வருந்துவாள். யானும் செவிலித் தாயும் அருந்துக என்று கொண்டு சென்றாலும், தேன் கலந்த இனிய பாலையும் அருந்தாமல் விம்மி அழுவாள். நேற்றும் அவ்வாறு இருந்தாளே! இன்று, காளை ஒருவனுடைய பொய்யே பற்றுக்கோடாகக் கொண்டு அரிய பாலைவழியில் சென்றாள் என்று சொல்கிறார்களே ! முருந்து போன்ற அழகு உடைய தன் வெண்மையான பற்களில் புன் முறுவல் தோன்ற, அந்தப் பாலைவழியில் சென்றாள் என்று சொல்கின்றார்களே !”

தாய் :

இல்எழு வயலை ஈற்றா தின்றெனப்
பந்துநிலத்து எறிந்து பாவை நீக்கி
அவ்வயிறு அலைத்தஎன் செய்வினைக் குறுமகள்
மான்அமர்ப்பு அன்ன மையல் நோக்கமொடு
யானும் தாயும் மடுப்பத் தேனொடு
தீம்பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி
நெருநலும் அனையள் மன்னே ; இன்றே
மைஅணல் காளை பொய்புகல் ஆக
அருஞ்சுரம் இறந்தனள் என்பதன்
*முருந்துஏர் வெண்பல் முகிழ்நகை திறந்தே.**

---

*நற். 179.

ஈற்றா - (கன்று) ஈன்ற பசு. தின்றென - தின்ன. அவ்வயிறு - அழகிய வயிறு. செய்வினை - செய்யும் கடமைகளில் வல்ல.

46. துன்பமும் இன்பமும்

தலைவன் தலைவியை மணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தத் தொடங்கியபோது தோழி அங்கே சென்றாள். திருமணத்திற்கு முன்பு தலைவி பலநாள் பிரிவாற்றாமல் வருந்தி மெலிந்த துன்பத்தை எல்லாம் நினைந்தாள். இப்போது தன் கணவனோடு ஒரு மனையிலிருந்து இன்பமாக வாழும் நிலைமையையும் எண்ணினாள். துன்பம் தந்த தலைவனுடைய மார்பே, இப்போது இன்பம் தந்து வாழ்விப்பது கண்டு, மாயம் அன்று என்று தெளிந்த மகிழ்ச்சியோடு தலைவியை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்.

" ஆகாயம் முன்னே தீயின் வெப்பத்தைத் தந்து பின்பு அதைத் தணிப்பதற்குக் காற்றையும் தருவதுபோல், தலைவனுடைய மார்பு உனக்கு முன்னே துன்பமும் பின்பு இன்பமுமாக ஆயிற்று! இது மாயம் அன்று, தோழி! உண்மையே."

தோழி :

தீயும் வளியும் விசும்புபயந் தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ
மாயம் அன்று தோழி
இலங்குமலை நாடன் மலர்ந்த மார்பே.*

அமர்ப்பு - மாறுபாடு. மையல் - மயக்கம். மடுப்ப - ஊட்ட. நெருநல் - நேற்று. அனையள் - அத்தன்மையானவள். அணல் - தாடி. முருந்து - மயிலிறகின் அடி.

*நற். 294. புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழான்.

வளி - காற்று. விசும்பு - ஆகாயம். பயந்தாங்கு - தந்ததுபோல. ஆகின்று - ஆயிற்று. மாதோ - அசை. இலங்கு - விளங்கும். மலர்ந்த - அகன்ற.

47. எது செல்வம் ?

தலைவன் பரத்தையுடன் சிலநாள் இருந்து, பிறகு திரும்பிவந்தான். தலைவி ஊடல்கொண்டிருப்பதை உணர்ந்து, தோழியிடம் சென்று ஊடல் தணிக்குமாறு வேண்டினன். அப்போது தோழி அவனுக்குத் தக்க முறையில் அறிவுரை கூறினள். களவொழுக்கத்தின் தொடக்கத்தில் தலைவன் தன் பெருமை தோன்றப் பலவாறு கூறியதையும், தன் செல்வச் சிறப்புத் தோன்றக் குதிரை தேர் முதலியவற்றில் விரைந்து ஊர்ந்து வந்ததையும் சுட்டிக்காட்டினள். அவற்றை எல்லாம் செல்வச் சிறப்பு என்று சான்றோர் மதிப்பதில்லை என்றும், நெஞ்சத்தின் அன்பே உண்மையாகப் போற்றத்தக்க செல்வம் என்றும் விளக்கினள். புறத்தே பெறும் மேம்பாடுகள் உண்மை அல்ல, அகத்தே அமையும் பண்பாடே அழியாச் செல்வம் என்று கூறி, தலைவன் இனியேனும் தலைவியைக் கைவிடாமல் அன்பு பூண்டு வாழுமாறு அறிவுறுத்தினள்.

" தலைவ ! நெடுமொழிகளை உரைப்பதும், விரைந்து செல்பவற்றை ஊர்தலும் செல்வம் அல்ல; அவை எல்லாம் செய்த வினையின் பயனாகப் பெறக்கூடியவை. சான்றோர் செல்வம் என்று போற்றுவது எதுஎன்றால், தன்னைச் சேர்ந்தவர்களின் துன்பத்திற்காக அஞ்சும் பண்புடன் நெகிழ்ந்துருகும் தன்மையே உண்மையான செல்வம் ஆகும்."

தோழி :

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று ; தன் செய்வினைப் பயனே ;
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்
*மென்கண் செல்வம் செல்வம்என் பதுவே.**

48. எம்போல் ஆவரோ ?

பரத்தைவீட்டிலிருந்து திரும்பிவந்த தலைவன், தலைவியின் ஊடலைத் தணிக்க வேண்டும் என்று தோழியிடம் சென்று அவளுடைய உதவியை நாடினான். தோழி தலைவனுக்கு அறிவு புகட்டுவதற்கு இதுவே தக்க வாய்ப்பு என்று கருதி, அவன்உள்ளத்தில் பதியுமாறு உண்மையை எடுத்து விளக்கினாள் ; திருமணம் செய்துகொண்டு கற்புடைய மனைவியராய் வாழும் மகளிர்க்கும், தம் அழகை விலை கூறி விற்று ஆடவர்உள்ளத்தைக் கவர்ந்து வாழும் பரத்தையர்க்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துரைத்தாள்.

" தலைவ ! சிறந்த அணிகலன்களை அணிந்த உன் பரத்தையரை எம் வீட்டுக்கே அழைத்துவந்து நீ மணந்து தழுவி வாழ்ந்தாலும் அவர்களின் புன்மையான மனத்தில் உண்மை விளங்குதல் அரிதாகும். அவர்களும், பெண்குழந்தைகளையும் ஆண்குழந்தைகளையும் பெற்று, நன்றி நிறைந்தவர்களாய்க் கற்பு உடையவர்களாய் எம்மைப் போல் ஆவது அதைவிட அரிதாகும்."

தோழி :

யாணர் ஊர ! நின் மாண் இழை மகளிரை
எம்மனைத் தந்துநீ தழீஇயினும் அவர்தம்

*நற். 210. மிளைகிழான் நல்வேட்டனார்.

நெடிய - மேம்பாடான சொற்கள். கடிய - விரைவாகச் செல்பவை. புன்கண் - துன்பம். மென்கண் - இரக்கமுள்ள தன்மை.

புன்மனத்து உண்மையோ அரிதே ; அவரும்
பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து
நன்றி சான்ற கற்போடு
எம்பாடு ஆதல் அதனினும் அரிதே.

49. யான் ஒழியவேண்டும்

தலைவி தன்மேல் சினம் மிகுந்து ஊடல் கொண்டிருப்பதைத் தலைவன் அறிந்தான். ஆதலின் நேரே அவளிடம் செல்லாமல் தோழியை நாடிச் சென்று பணிமொழி கூறி வேண்டினன். தோழி அவன்பொருட்டாகத் தலைவியிடம் சென்று பொறுத்திடுமாறு கூறினள். தலைவியோ ஊடல் தணியாமல் மறுத்துரைத்தாள். தன் முயற்சி பயன்படாதது கண்ட தோழி, தன்னையே நொந்து உரைத்தாள். தான் ஒருத்தி இடையில் இருப்பதால்தான் அவர்கள் இருவரும் இவ்வாறு மாறுபட்டு நடக்கிறார்கள் என்றும், தான் ஒழிந்தால் இருவரும் ஒன்றுபட்டு அன்பாக வாழ்வார்கள் என்றும் நொந்து கூறினள். பகையரசர்கள் இருவர் ஒரு காவல் மரத்தின் காரணமாக ஒருவரை ஒருவர் தாக்கிப் போர் செய்வதும், அந்த ஒரு மரத்தை வெட்டி வீழ்த்திய பிறகு போர் முடிந்து அமைதியுறுவதும் அவளுடைய நினைவுக்கு வந்தன. அதுபோல் அண்மையில் தன் நாட்டில் நிகழ்ந்த ஒரு போரைக் குறிப்பிட்டு, அந்தப் போரில் புன்னைமரம் வெட்

*நற். 330. ஆலங்குடி வங்கனார்.

யாணர் - புதுவருவாய், புதிய வளம் பெருகுதல். ஊர - மருத நிலத் தலைவனே. பைந்தொடி - பசும் பொன்னால் ஆகிய வளையல். பயந்து - பெற்று. பாடு - தகுதி, தன்மை.

டுண்டு வீழ்ந்த பிறகு போர் நின்றதுபோல், தான் ஒழிந்த பிறகுதான் இந்தக் குடும்பத்தில் இருவரும் மாறுபாடு நீங்கி வாழ்வார்கள் என்று கூறி வருந்தினாள்.

" தலைவனோ, ஒருத்தியோடு வாழும் கற்பு இல்லாமல், பல மகளிரை அடைந்து வாழ விரும்பி நம் வீட்டிற்கு வராமல் இருக்கின்றான். இவளோ, உரிமையோடு வாழும் நன்மையை விரும்பி விட்டுக்கொடுக்க மறுக்கின்றாள். அன்னியும் பெரியன் என்பவனும் சிறந்த இரு பெரிய வேந்தர்கள் போர் செய்யும் போர்க்களத்தில் வெட்டி ஒழித்த புன்னைமரத்தால் விளைந்த பகைத்துன்பம் போல, இந்த இருவருடைய மாறுபாடும் இடையிலுள்ள யான் ஒழிந்தபின் தீர்ந்துவிடும்."

தோழி :

.... ஊரன்
பலர்ப்பெறல் நசைஇ நம் இல்வா ரலனே;
மாயோள்,
நலத்தை நம்பி விடல்ஒல் லாளே;
அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல
என்னொடு கழியும்இவ் விருவரது இகலே.*

---

*நற். 180.

ஊரன் - மருதநிலத் தலைவன். பலர் - பல மகளிரை. நசைஇ- விரும்பி. வாரலன் - வரவில்லை. மாயோள் - மா(மை)நிறம் உள்ள தலைவி. நம்பி - விரும்பி. ஒல்லாள் - மாட்டாள். விழுமிய - சிறந்த. விழுமம் - துன்பம். இகல் - மாறுபாடு.

50. நீங்கி நின்றாள்

பரத்தையோடு சிலநாள் மகிழ்ந்திருந்து வீட்டிற்குத் திரும்பினான் தலைவன். தலைவியைப் பிரிந்து தான் செய்த குற்றம் நெஞ்சை உறுத்தியதனால், நேரே வீட்டினுள் புக முடியாமல் தெருமுனையில் தயங்கித் தயங்கி வெளியே நின்றான். தலைவி சினம் மிக்கு ஊடல் கொள்வாளே, என்ன செய்வது என்று தயங்கி நின்றான். அப்போது குழந்தையான தன்மகன் தெருவில் சிறுதேர் செலுத்தி நடை பழகுவதைக் கண்டான். கண்டதும் அவனை எடுத்துக் கொண்டே உள்ளே புகலாம் என்று மகிழ்ந்து வந்தான். மகனை எடுத்து மார்புற அணைத்துக்கொண்டான். குழந்தையின் வாய்நீர் பட்டுத் தலைவனுடைய மார்பில் பூசியிருந்த சந்தனம் சிதைந்தது. அந்தக் கோலத்தோடு தலைவியை நெருங்கினான். அதைக் கண்ட தலைவி சினம் தணியாமல் ஊடல்குறிப்புடன் அப்பால் சென்றாள். இவ்வாறு நிகழ்ந்த பின் தலைவன் செய்வது அறியாமல் திகைத்துக்கொண்டிருந்தான். அப்போது பாணன் அங்குவர, அவனிடம் இந்த நிகழ்ச்சியை எடுத்துக் கூறி நகைத்தான்.

" நகைப்போம்; வருக, பாணனே! கிண்கிணி காலில் கிடந்து ஒலிசெய்ய, தெருவிற்கு வந்து சிறுதேர் உருட்டி நடை பழகுகின்ற இனிய சொற்களை உடைய மகனைக் கண்டு அணைத்துக்கொண்டேன். அவனுடைய மலர்மணம் கமழும் சிவந்த வாயின் நீராலே சிதைந்த சந்தனத்தோடு, வேட்கை உள்ள நெஞ்சம் தூண்டிச் செலுத்தியதால் யான் அவளைத் தழுவும் விருப்போடு நெருங்கிச் சென்றேன். நெருங்கியதும், என் காதலி வேறுபட உணர்ந்து, அஞ்சிய பெண்மான்போல் ஒதுங்கி, 'நீயார்?' என்று சொல்லி அப்பால் சென்று நின்றாள்."

தலைவன் :

நகுகம் வாராய் பாண ! பகுவாய்
அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில்
தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைந்த சாந்தமொடு
காமர் நெஞ்சம் துரப்ப யாம்தன்
முயங்கல் விருப்பொடு குறுகினேம் ஆக
......எம்காதலி வேறுஉணர்ந்து
வெரூஉமான் பிணையின் ஒரீஇ
*யாரை யோஎன்று இகழ்ந்துநின் றதுவே.**

51. அன்று மகிழ்ந்தவள்

தலைவன் வீட்டிற்குத் திரும்பியபோது தலைவி ஊடல் கொண்டவளாய் அவனை வரவேற்கவில்லை. அவன் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்துக்கொண் டிருந்த போது, வீட்டை நோக்கிப் பாணன் வருவதைக் கண்டான். அவனைத் தலைவியிடம் அனுப்பி ஊடல் தணிக்கச் செய்ய வேண்டும் என்று உள்ளத்தே கருதி, ஏதோ கூறுபவன்போல் பேச்செடுத்து முன் ஒரு காலத்தில் தலைவி தன்னிடம் கொண் டிருந்த பேரன்பை எடுத்துக் கூறினான். தலைவி குழந்தை

*நற். 250. மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்.

பகு - பகுத்த, பிளந்த. அரி - பரல். பெய் - உள்ளே இட்ட. தேர் - சிறுதேர், நடைவண்டி. சாந்தம் - மார்பில் பூசிய சந்தனம். காமர் - விருப்பம் உள்ள. துரப்ப - செலுத்த. முயங்கல் - தழுவல். வெரூஉ - அஞ்சிய. பிணை - பெண்மான். ஒரீஇ-நீங்கி. யாரையோ- யாரோ. இகந்து - நீங்கி.

பெற்றுச் சோர்ந்து கிடந்த காலத்தில் தான் சென்று கண்டு பேசியபோது அவள் புன்முறுவலும் நாணமும் நிறைந்து விளங்கிய பழைய காட்சியை நினைவூட்டினான். அத்தகைய அன்பு நெஞ்சம் உடையவள் இன்று இவ்வாறு ஊடுகின்றாளே என்று பாணன் உணர்ந்து ஊடல் தணிக்கும் வாயிலாய்ச் செல்லுமாறு குறிப்பாக உணர்த்தினான்.

"வருக, பாணனே! நினைத்து நகையாடுவோம். தலைவி முன்பு சுற்றத்தார் சூழ்ந்தவளாய் நிறைந்த சூல் (கருப்பம்) உடையவளாய் நம் குடும்பம் செழிக்குமாறு குழந்தை பெற்று உதவினாள் அல்லளோ? நெய்யோடு கலந்து ஒளிவீசும் வெண்சிறு கடுகு பூசி விளங்கிய நம் வீடு சிறப்புறுமாறு அப்போது ஓய்ந்து படுத்துக் கிடந்தவளை யான் அணுகி, 'நீ மகனைப் பெற்றதனால் தாய் என்று பெயர் பெற்று, அழகிய வரிகளும் தேமல்களும் உடைய முதுபெண்டு ஆகி (இளம்பெண் என்ற நிலை போய் முதியவள் ஆகி) இவ்வாறு உறங்குகின்றாயோ?' என்று கூறியவாறே, பலவாறு மாட்சியுற்ற அவளுடைய வயிற்றில் குவளைமலரை ஒற்றினேன். ஒற்றியவாறே பலவாறு எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது அவள் கண் விழித்து என்னைப் பார்த்து மெல்ல முல்லைமுகைபோல் புதிய முறுவல் காட்டி, தன் அழகிய மலர் போன்ற கண்களைக் கையால் மூடிக்கொண்டு மகிழ்ந்தாள்."

தலைவன்

வாராய் பாண! நகுகம்; நேரிழை
கடும்புஉடைக் கடுஞ்சூல் நம்குடிக்கு உதவி
நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்குநகர் விளங்கக் கிடந்தோள் குறுகிப்
புதல்வன் ஈன்றெனப் பெயர்பெயர்த்து அவ்வரித்

திதலை அல்குல் முதுபெண்டு ஆகித்
துஞ்சுதி யோமெல் அஞ்சில் ஓதியெனப்
பன்மாண் அகட்டில் குவளை ஒற்றி
உள்ளினென் உறையும் எற்கண்டு மெல்ல
முகைநாள் முறுவல் தோற்றித்
தகைமலர் உண்கண் புதைத்துவந் ததுவே.*

52. உன் பேச்சு வேண்டா

தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்காகப் பாணனை அனுப்பினான். அவன் வருதலைக் கண்ட தோழி தக்கமுறையில் இடித்துரைத்து அறிவு கொளுத்த வேண்டும் என்று எண்ணினாள். தலைவன் பரத்தையை நாடுவதற்குப் பாணனும் துணையாக இருப்பவன் ஆகையால், அவனையும் கடிந்துரைக்க வேண்டும் என்று கருதினாள். சிறிது தொலைவில் தலைவன் தேரை நிறுத்திவிட்டு அங்கிருந்து பாணனை அனுப்புவதை உணர்ந்தாள்; பாணன் வரட்டும் என்று இருந்தாள்; வந்ததும் அவனை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்.

---

*நற். 370. உறையூர் கதுவாய்ச் சாத்தனார்.

நகுகம் - நகுவோம். நேரிழை - சிறந்த அணிகலன் அணிந்த தலைவி. கடும்பு - சுற்றம். கடுஞ்சூல் - நிறைந்த கர்ப்பம். ஐயவி - வெண்சிறுகடுகு; நோய் முதலியன அணுகாதபடி பூசுவதற்கு உரியது. திரள் காழ் - திரண்ட வித்துக்கள் (கடுகு விதைகள்). அல்குல் - இடையை அடுத்த பகுதி. அம்சில் - அழகிய சில பகுதியான. ஓதி - கூந்தல், கூந்தலை உடையவளே! அகடு - வயிறு. எற்கண்டு - என்னைப் பார்த்து. நாள் - காலை, இங்கே புதிதாய்த் தோன்றியது. தகை - தன்மை - அழகு.

"எண்ணெய் பூசியும் நறும்புகை படிந்தும் குழந்தையின் கண்ணுக்குத் தீட்டும் மை கலந்தும் தலைவியினுடைய ஆடை மாசுபட்டது. தேமல் படர்ந்த மெல்லிய மார்பில் இனிய பால் பெருகுதலால் அதனை ஊட்டுவதற்காக மகனைத் தழுவும் காரணத்தால் அவளுடைய தோளும் முடைநாற்றம் வீசும். ஆகவே தூய அணிகலன் அணிந்த பரத்தையரின் தெருவில் அழகுறத் தோன்றுகின்ற தலைவனுக்கு யாம் பொருத்தமுடையேம் அல்லேம். அதனால், பொன் போன்ற அழகிய நரம்புகளையும் இனிய குரலையும் உடைய யாழில் இசை எழுப்பிப் பாடுவதில் நீ வல்லாய் ஆயினும், இசை எழுப்பத் தொடங்கித் தொழாதே. உன் தலைவனை அழைத்துக்கொண்டு போ. சிறந்த எம் வீட்டில் நீ பாட முடியாதபடி ஆயிற்று. நெடுநேரமாக நின்று கொண்டிருக்கும் குதிரைகளும் அந்தத் தேரில் பூட்டப்பட்டிருப்பதை வெறுக்கின்றன. உன் பேச்சை யாம் விரும்பவில்லை. நீ ஒன்றும் பேசாதே."

தோழி :

நெய்யும் குய்யும் ஆடி மையொடு
மாசுபட் டன்றே கலிங்கமும் ; தோளும்
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்றப்
புதல்வன் புல்லிப் புனிறுநா றும்மே ;
வாலிழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோற்கு ஒத்தனெம் அல்லேம் ; அதனால்
பொன்புனை நரம்பின் இன்குரல் சீறியாழ்
எழாஅல் வல்லை ஆயினும் தொழாஅல் ;
கொண்டுசெல் பாண ! நின் தண்துறை ஊரனைப் ;
பாடுமனை பாடல் கூடாது நீடுநிலைப்

புரவியும் பூண்நிலை முனிகுவ ;
*விரகுஇல மொழியல்யாம் வேட்டதுஇல் வழியே.**

"பரத்தையர் குழந்தைபெறுதல் முதலியன இல்லாமல், ஆடை மாசுபடாமல் விளங்குகின்றனர் ; எம்மைப் போன்ற குடும்பப் பெண்கள் அவ்வாறு மாசில்லாமல் ஆடையைக் காக்க முடியாது. பரத்தையர் மேனியில் நறுமணம் பூசிக் கமழ்கின்றனர். எம்மைப் போன்ற மகளிர் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் முடைநாற்றமே வீசும்" என்று கூறுவதால், தாம் கடமையே பெரிது என்று குழந்தையைக் காத்து வாழ்வதும், பரத்தையர் கவர்ச்சியே பெரிது என்று உடையும் மேனியும் காத்து வாழ்வதும் விளங்கச் செய்தாள். தாம் உள்ளத்தே தூய்மை பெற்று வாழ்வதைக் குறிப்பால் உணர்த்தி, பரத்தையர்கள் அணிகலன்களில் மட்டும் சிறப்புப்பெற்று விளங்குவதாக உரைத்தாள். பாடத் தொடங்கித் தொழுத பாணனைப் பாடாதவாறு தடுத்து, "நீ பாடவல்லாய் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் தடுப்பதைவிட, அதோ தலைவனுடைய தேரில் பூட்டிய குதிரைகளே மிகுதியாகத் தடுக்கின்றன. அவை தேரில் பூட்டியபடி நெடுநேரம் நிற்க முடியாமல் வெறுத்துக் கனைப்பது கேள்" என்றாள்.

*நற். 380. கடலூர்ப் பல்கண்ணனார்.

நெய் - குழந்தை பெற்ற பிறகு பூசும் எண்ணெய். குய் - குழந்தை பெற்ற வீட்டில் போடும் புகை. பட்டன்று - பட்டது. கலிங்கம் - ஆடை. திதலை - தேமல். பிலிற்ற - சுரக்க. புனிறு - குழந்தை பெற்றபின் சிலநாள் உள்ள தன்மை, அப்போது வீசும் நாற்றம். தேரோற்கு - தேரை உடைய தலைவனுக்கு. சீறியாழ் - யாழில் ஒருவகை ; சில நரம்புகளை உடையது. எழாஅல் - இசை

53. விருந்து வருக

பரத்தை வீட்டிற்குச் சென்று தங்கியிருந்த தலைவனைத் தலைவி எதிர்கொள்ளாமல் மறுத்து ஊடல் கொண்டாள். ஊடலைத் தணிக்க வகை அறியாமல் வீட்டினுள் நுழையாமல் தலைவன் திகைத்தான். எதிர்பாராமல் புதியவர் ஒருவர் வீட்டிற்கு வந்தார். அவர் வரக்கண்டதும், அவரை அழைத்துக்கொண்டு தலைவன் வீட்டினுள் புகுந்தான். விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்க வேண்டும் என்பதையும், குடும்பத்தில் உள்ள குழப்பத்தை வெளியார்க்குப் புலப்படுத்தாமல் நடக்கவேண்டும் என்பதையும் கடமையாக உணர்ந்தவள் தலைவி. ஆதலின் விருந்தினர் வருவதைக் கண்டதும் ஊடலை மறந்து, முகமலர்ந்து இன்சொல் கூறி வரவேற்றாள். சமைத்து உணவிடும் கடமையில் முனைந்தாள். புன்முறுவல் கொண்ட முகத்தோடு ஊடலை அறவே மறந்து இவ்வாறு அன்புருவாக மாறியதைக் கண்ட தலைவன் இத்தகைய விருந்து மேன்மேலும் வந்து ஊடல் தணித்து மகிழ்விக்க வேண்டும் என்று விரும்பினான்.

" சிறிய மோதிரம் அணிந்த மெல்லிய விரல் சிவக்கும் படியாக வாழையிலையின் பருத்த அடிக்காம்பைத் திறம்பட அரிந்து, புகைநுழைந்து மாறுபட்ட கண்கள் உடையவளாய், அழகுபெறப் பிறைபோன்ற நெற்றியில் தோன்றிய சிறிய நுண்ணிய பல வியர்வைத் துளிகளை அழகிய முன்தானையால் துடைத்துக்கொண்டிருக்கிறாள். என்னிடம் ஊடல் கொண்

எழுப்புதல். தண்துறை ஊரன் - மருதநிலத் தலைவன். புரவி - குதிரை. பூண்நிலை - தேரில் பூட்டப்பட்டு நிற்றல். முனிகுவ - வெறுக்கின்றன. விரகு - தந்திரம், பயன். வேட்டது - விரும்பியது. இல்வழி - இல்லாத இடத்தில்.

டிருந்தும் இவ்வாறு சமையலறையில் கடமையில் மூழ்கியிருக்கின்றாள். இத்தகைய நிலையை ஏற்படுத்தி உதவிய விருந்து எமக்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கவேண்டும் என விரும்புகிறேன். இவ்வாறு வந்தால், ஊடலால் சினம் கொண்ட கண்களில் சிவப்பு இல்லாமல் மறைந்து, சிறிய கூரிய பற்கள் தோன்றப் புன்முறுவல் கொண்ட முகத்தைக் காணப் பெறுவேன்."

தலைவன் :

சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையின் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை ;
எமக்கே வருகதில் விருந்தே ; சிவப்புஆன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே.*

---

*நற். 120. மாங்குடிகிழார்.

தாழ் - மோதிரம். சேப்ப - சிவக்க. தடி - காம்பு. வல்லிதின்- திறம்பட. வகைஇ - வகைப்படுத்தி, பிரித்து. அமர்த்த - ஒன்றோடொன்று மாறுபட்ட. தகை - அழகு. வியர் - வியர்வை. துகில்தலை - முன்தானை. துடையினள் - துடைத்து. நப்புலந்து - நம்மை வெறுத்து. அட்டில் - சமையலறை. அம்மா அரிவை - அழகிய மாமைநிறம் உள்ள மாது. தில் - விருப்பத்தை உணர்த்தும் இடைச்சொல். ஆன்று - இல்லையாகி. எயிறு - பல். காண்கம் - காணுவோம்.

54. பிறர் கொடியவரே!

தலைவனிடம் மிக்க அன்பு கொண்டவள் பரத்தை. அவன் அவளை விட்டுத் தலைவியிடம் சென்றபிறகு, தலைவனை நினைந்து வருந்தினாள். தலைவியின் சார்பானவர்கள் ஒருநாள் பரத்தைவீட்டு வழியாகப் போய்க்கொண் டிருந்தனர். அப்போது பரத்தை பாணனை நோக்கித் தன் துயரைப் பின்வருமாறு கூறினாள்; தலைவியின் சார்பானவர்களின் செவியில் விழுமாறு கூறினாள்.

"அன்பாக மகிழ்வதற்கு அவர் வராவிட்டாலும் போகட்டும். கண்டு மகிழத்தக்க அன்பு உடையவரைக் காணும் நிலையில் வாழ்வது இனிதாகும். கண்ணிற்கு உற்ற துன்பத்தைத் தீர்க்க விரைந்து எழும் கை போல் உதவி செய்து நாம் உற்ற துயரத்தைக் களையாவிட்டாலும், அவர் இல்லாத ஊர் துன்பமானதாக உள்ளது. நெருப்புப் போல் மலரும் வேங்கைமரத்தின் அடியில் (தெய்வம் காவல் புரியும் புனத்துப் பரணின் அருகே) அயலான் விளைத்த கவலை வருத்த அதனால் ஒரு முலை அறுத்து நின்ற திருமாவுண்ணியைப் பற்றிக் கேள்வியுற்றவர்கள் வருந்தியதுபோல் இந்த ஊராரும் என்னைப்பற்றி வருந்துகின்றார்கள்; ஆயினும் யான் விரும்பிய காதலர் தவிர, மற்றவர்கள் எனக்குக் கொடியவர்களே."

பரத்தை :

துனிதீர் கூட்டமொடு துன்னார் ஆயினும்
இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல் ;
கண்உறு விழுமம் கைபோல் உதவி
நம்உறு துயரம் களையார் ஆயினும்
இன்னாது அன்றே அவர்இல் ஊரே ;
எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகுஆர் கழனியின் இதணத் தாங்கண்

ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணிக்
கேட்டோர் அனையர் ஆயினும்
வேட்டோர் அல்லது பிறர்இன் னுரே.*

55. சொன்னதும் நடுங்கினன்

தலைவன் சிலநாள் பரத்தை ஒருத்தியோடு மகிழ்ந்திருந்து, பிறகு தன் வீட்டிற்குச் சென்றுவிட்டான். தலைவியைச் சார்ந்தவர் சிலர் அந்தப் பரத்தை இருந்த தெருவழியாகச் சென்றனர். அவர்களின் செவியில் விழும்படியாக, பரத்தை தன் தோழியிடம் தலைவனைப் பற்றிப் பேசத் தொடங்கினுள். அவன் தன்னை நாடி வந்து தன்னோடு இருந்ததையும், அப்போது மனைவியின் பெயரைக் கேட்டாலும் அஞ்சி நடுங்கியதையும் அவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பின்வருமாறு எடுத்துரைத்தாள்.

" நினைக்கும்போதெல்லாம் எனக்குச் சிரிப்பாக இருக்கிறது, தோழி! அந்தத் தலைவன் என் கூந்தலைப் பற்றி இழுத்து என் வளையலை வெளவினன். இந்தப் பூசலைப் பற்றி, சினம் கொண்ட முகத்தோடு அவனை நோக்கி, " சினம் இல்லாமல் சென்று இதை உன் மனைவிக்கு உரைப்பேன் "

---

*நற். 216. மதுரை மருதனிளநாகனுர்.

துனி - ஊடலில் ஒருநிலை. துன்னுர் - வந்து சேரார். விழுமம் - துன்பம். எரி - தீ. மருள் - போன்ற. குருகு - பறவை. ஆர் - நிறைந்த. இதணம் - பரண். இதணத்து ஆங்கண் - பரண் அருகே. ஏதிலாளன் - அயலான். கவற்ற - வருத்த. வேட்டோர் - விரும்பியவர், காதலர்.

என்றேன் ; என்று சொன்னதும், கூத்தரின் நல்ல ஓசை செய்யும் முழவின் கண் (பக்கம்) அதிர்வது போல் நடுங்கி விட்டான் தலைவன். அவன் நடுங்கிய துன்ப நிலையை நினைக்கும்போதெல்லாம் சிரிப்பாக இருக்கிறது.''

பரத்தை :

உள்ளுதொறு நகுவேன் தோழி !...
.........ஊரன்
தேங்கமழ் ஐம்பால் பற்றி என்வயின்
வான்கோல் எல்வளை வெளவிய பூசல்
சினவிய முகத்துச் சினவாது சென்றுநின்
மனையோட்கு உரைப்பல் என்றலின்...
புலம்பிரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ஆர் கண்ணின் அதிரும்
*நன்ன ராளன் நடுங்குஅஞர் நிலையே.**

56. முன்னோர் மறந்தனரோ?

தலைவன் பொருள் காரணமாகப் பிரிந்து செல்லப் போவதை அறிந்தாள் தோழி. தலைவன் தன் மனைவியிடம்

*நற். 100. பரணர்.

உள்ளுதொறு - நினைக்குந்தோறும். ஊரன் - மருதநிலத் தலைவன். ஐம்பால் - கூந்தல். வான் - வெண்மை. கோல் - திரட்சி வேலைப்பாடு. எல் - ஒளி. பூசல் - குழப்பம். சினவிய - சினம் கொண்ட. சினவாது - சினம் கொள்ளாமல். உரைப்பல் - உரைப்பேன். புலம் - இடம். பிரி - விட்டு வந்த. வயிரியர் - கூத்தர். மண்-மத்தளத்தின் பக்கத்திற்கு இடும் கருநிறப் பொருள். ஆர் - பொருந்திய. கண் - பக்கம். நன்னராளன் - நல்ல பண்பு உடையவன். அஞர் - துன்பம்.

பேரன்பு கொண்டவன் என்பதும், அதனோடு கடமை யுணர்ச்சியும் மிக்கவன் என்பதும் தோழிக்கு நன்கு தெரியும். ஆகவே, தலைவியின் பிரிவாற்றாமையை எடுத்துரைத்தும் பயனில்லை ; கடமை சிறப்பு இல்லாதது என்று எடுத்துரைப் பதும் முடியாது. இந்நிலையில், தலைவனுடைய உள்ளம் கொள்ளுமாறு எவ்வாறு உரைத்துப் பயணத்தைத் தடுப்பது என எண்ணினாள். தனி வாழ்க்கையைக் கூறாமல் விட்டு, உலக அமைப்பிலேயே குறை உள்ளதை எடுத்துக் காட்டி னால், உண்மையை ஆராயும் தலைவனுடைய உள்ளத்தைக் கவர முடியும் என நம்பி அவ்வாறே கூறினாள். பொருள் இல்வாழ்க்கைக்கு வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டது ; ஆனால் அந்த இல்வாழ்க்கையையே கெடுக்கும்வகையில் பிரிவு என ஒன்று அமைந்து அதற்குப் பொருளே காரண மாக இருக்க வேண்டுமா? பயனைக் கொடுக்கும் கருவி என்று தேடிய பொருள், பயனைக் கெடுக்கும் கருவியாக முடிகின் றதே என்று தலைவனுடைய சிந்தனையைத் தூண்டினாள்.

" தலைவ! அறநெறியில் பொருளைத் தேடித் துணைவியோடு இன்பமாக வாழவேண்டும் என்று உலக வாழ்க்கையைப் படைத்த பழங்காலத்தில், சிறந்த நம்முடைய முன்னோர்கள் இதை மறந்துவிட்டார்களோ ? அழகிய நிறம் பொருந்திய நீல மணி போன்ற கூந்தலில் மெல்ல அணைந்து வாழும் பெறற்கரிய பெரிய பயனைக் கொள்ளாமல் பிரிந்து வாழ்வ தற்குக் காரணமாக நிற்கும்படி பொருளை அமைத்தார்களே. முன்னோர்கள் இதை மறந்துவிட்டார்களோ ?"

தோழி :

உலகம் படைத்த காலைத் தலைவ !
மறந்தனர் கொல்லோ சிறந்திசி னோரே ;...

அணிநிறம் கொண்ட மணிமருள் ஐம்பால்
தளர்நறுங் கதுப்பில் பையென முயங்கும்
அரும்பெறற் பெரும்பயம் கொள்ளாது
*பிரிந்துறை மரபின் பொருள்படைத் தோரே.**

57. வாடையும் வந்ததே!

தலைவன் பொருள் தேடுவதற்காக வெளிநாட்டுக்குச் செல்லத் துணிந்து, தோழியிடம் பலமுறை கூறினான். தலைவி மிக்க துயரம் உறுவாள் என்று உணர்ந்த தோழி எவ்வாறேனும் பயணத்தைத் தடுக்கவே எண்ணினாள். அவனிடம் வெளிப்படையாகக் காரணம் கூறித் தடுக்க முயல்வதால் பயன் இல்லை என்றும் உணர்ந்தாள். ஊரார் பலரும் ஈடுபட்ட முயற்சி ஆகையால், தலைவன் அதில் தளரா ஊக்கம்கொண்டு முனைந்துள்ளான் என்பதை அறிந்தாள். சென்று விரைவில் திரும்புங்கள் என்று விடைகொடுத்து அனுப்புகிறவள் போல் கூறினாள்; உடனே வாடைக்காலம் வந்தால் தலைவி துன்புறுவாளே என்று எடுத்துரைத்தாள். ஒன்றாக இருந்து வாழும் போதே பிரிவை எண்ணி நடுங்குகின்றாளே, பிரிந்தபின் எவ்வாறு வருந்துவாளோ எனவும் எடுத்துரைத்தாள்.

"செல்வேன் செல்வேன் என்று திரும்பத் திரும்பக் கூறுவதால், பலவாறு வெறுப்புக்கொண்டு 'செல்க' என்று கூறுவதற்கு யான் அஞ்சித் தயங்குகிறேன். செல்ல

*நற். 337. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

ஐம்பால் - ஐந்து பகுதியாக வகுக்கப்பட்ட. தளர் - நெகிழ்ந்து விழும். கதுப்பு - கூந்தல். பையென - மெல்ல. பயம் - பயன்.

வேண்டா என்று சொல்வதானல், பலர் கூறும் பழிச்சொல்—மார்பில் எறியும் வேல் போல் புண்படுத்தும் புன்சொல்—கருதி அஞ்சுகின்றேன். அதனல், செல்லுங்கள் ; சென்று கடமையை முடியுங்கள் ; சென்றபின் அங்கே நீட்டித்திருக்காதீர்கள். நள்ளிரவில் அணிகலன் அணிந்த மார்பு வடுக்கொள்ளுமாறு தழுவி அருகே இருக்கும்போதே நடுங்குகின்ருள். இத்தகையவள், தனியே வருந்தும்படியாக, இடமெல்லாம் பரந்து சேர்ந்து குளிர்ச்சியுறுமாறு அசையும் இளமழையின் பின்னே வாடைக்காற்றும் வந்து நின்றதே! பார்த்தீர்களா ?"

தோழி :

சேறும் சேறும் என்றலின் பலபுலந்து
சென்மின் என்றல் யான்அஞ் சுவலே ;
செல்லா தீம்எனச் செப்பின் பல்லோர்
நிறத்துஎறி புன்சொலின் திறத்துஅஞ் சுவலே ;
அதனல், சென்மின்; சென்றுவினை முடிமின்; சென்ருங்கு
அவண்நீ டாதல் ஓம்புமின் ; யாமத்து
இழைஅணி ஆகம் வடுக்கொள முயங்கி
உழையீர் ஆகவும் பனிப்போள் தமியே
குழைவான் கண்ணிடத்து ஈண்டித் தண்ணென
ஆடிய இளமழைப் பின்றை
வாடையும் கண்டிரோ வந்துநின் றதுவே.*

---

*நற். 229.

சேறும் - செல்லுதும், செல்வோம். புலந்து - வெறுத்து. சென்மின் - செல்லுங்கள். அஞ்சுவல் - அஞ்சுவேன். செல்லாதீம் - செல்லாதீர்கள். நிறத்து - மார்பில். புன்சொலின் திறத்து - புன்சொல்லுக்காக. அவண் - அங்கு. நீடுஆதல் - காலநீட்டிப்பு ஆவதை. ஓம்புமின் - விடுங்கள், செய்யாதீர்கள். ஆகம் - மார்பு.

58. பிரிய முடியுமோ ?

பொருள் தேடுவதற்காக வெளிநாட்டுக்குப் பிரிய முயலும் தலைவன் தன் முயற்சியை நேரே தலைவிக்கு அறிவிக்கவில்லை. சென்று அறிவிக்குமாறு தோழியிடம் கூறினான். தோழி அதற்கு உடன்படுவதுபோல் வேறு சில சொற்கள் கூறிப் பயணம் வேண்டா என்று குறிப்பாகத் தடுத்தாள். இந்தச் செய்தியைச் சென்று சொல்லுதல் பெரிது அன்று; ஆயின் தலைவி துன்பமுற்று வருந்துவாள் என்பதை அறிந்திருந்தும் அவளிடம் அன்பு காட்டிப் பிரிய முடியுமா என்று கேட்டாள்.

" நிலையில்லாத பொருளைத் தேடும் கடமையைக் கருதிக்கொண்டு, 'இதை உன் தோழிக்கு உணர்த்து' என்று பல முறை இரந்து கேட்பீரானால், யானும் அவளிடம் சொல்வேன்; அவளும் 'செல்லுங்கள்' என்று விடை கொடுத்து அனுப்பவும் முடியும்; விடை கொடுத்தால், அவளுடைய கண்களையும் நெற்றியையும் தடவி எதிரே நின்று நீர் விடை பெற்றுப் பிரிய முடியுமா? ஐய! வேலைப்பாடு அமைந்த நல்ல வீட்டின் உட்பக்கத்து இறப்பில் வாழும் அழகான ஆண்புறு தன் காதல் துணையைக் கூவி அழைக்கும் குரலைக் கேட்பாள். தனித்து வருந்தும் நிலையில் அதைக் கேட்கும் போதெல்லாம் அவள் பெரிதும் நடுக்கமுற்றுக் கலங்குவாள். அதை அறிந்தும் உம்மால் அவளை விட்டுப் பிரிய முடியுமா ?"

தோழி :

மன்னுப் பொருட்பிணி முன்னி இன்னதை
வளைஅணி முன்கைநின் இகுளைக்கு உணர்த்துஎனப்

உழையீர் - பக்கத்தில் உள்ளீர். பனிப்போள் - நடுங்குவாள். குழைவான் - குழைய, வருந்த. ஈண்டி - சேர்ந்து. பின்றை - பின்.

பன்மாண் இரத்திர் ஆயின் சென்மஎன
விடுநள் ஆதலும் உரியள் ; விடினே
கண்ணும் நுதலும் நீவி முன்நின்று
பிரிதல் வல்லிரோ ? ஐய! செல்வர்
வகைஅமர் நல்இல் அகவிறை உறையும்
வண்ணப் புறவின் செங்காற் சேவல்
வீழ்துணைப் பயிரும் கையறு முரல்குரல்
நும்இலள் புலம்பக் கேட்டொறும்
பொம்மல் ஓதி பெருவிதுப் புறவே.*

59. பிடியின் புலம்பல்

தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரியக் கருதி, அதைத் தோழியிடம் கூறினன். உடனே தோழி அந்த முயற்சியைத் தடுக்க எண்ணினள். அவனுடன் இருந்து தாம் கண்ட பழைய நிகழ்ச்சி ஒன்றை நினைவூட்டினள் ; விலங்குகளும் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்தால் துன்புறுகின்றன என்பதைக் குறிப்பிட்டாள் ; காதல் மிக்க தலைவி பிரிவுத் துயர் தாங்காமல் வருந்தி அழிவாள் என்று தலைவன் உணருமாறு செய்தாள்.

---

*நற். 71. வண்ணப்புறக் கந்தரத்தனார்.

மன்னா - நிலைக்காத. பிணி - ஆசைப்பட்ட கடமை. இகுளை - தோழி. பல்மாண் - பலமுறை. இரத்திர் - இரக்கின்றீர். சென்ம - செல்லும். இறை - இறப்பு. வீழ் - விரும்பும். பயிரும் - அழைக்கும். கையறு - சோர்வுற்ற. முரல் - ஒலிக்கும். நும்இலள் - நீர் இல்லாமல். புலம்ப - தனித்துவருந்த. பொம்மல் - பொலிவு. ஓதி - கூந்தல். விதுப்பு - நடுக்கம்.

"நினைக்கவும் நினைக்கின்றீரோ, ஐய! அன்று ஒருநாள் நாம் ஓமைமரத்தின் தாழ்ந்த கிளை தந்த சிறு நிழலில் இருந்த போது, நாம் இருந்த இடத்தில் வந்து தழையை ஒடித்துத் தன்மேலே கொண்ட யானை புள்ளிகளை உடைய தன் பெரிய துதிக்கையைச் சுருட்டி வேறொரு வழியாகச் செல்லத் தொடங்கியதே; அந்த அளவிற்குத் தன் துணை விலகியதைக் கண்டதும் அதையே பிரிவு என்று வேறுபட உணர்ந்து, மலைப்பிளப்புக்கள் எல்லாம் எதிரொலிக்குமாறு பெண்யானை புலம்பிய குரலை நினைத்துப் பாரும்."

தோழி :

நினைக்கவும் நினைதிரோ ஐய! அன்றுநாம்
பணைத்தாள் ஓமைப் படுசினை பயந்த
பொருந்தாப் புகர்நிழல் இருந்தன மாக
நடுக்கம் செய்யாது நண்ணுவழித் தோன்றி
ஒடித்துமிசைக் கொண்ட ஓங்குமருப்பு யானை
பொறிபடு தடக்கை சுருக்கிப் பிறிதோர்
ஆறுஇடை யிட்ட அளவைக்கு வேறுஉணர்ந்து
என்றூழ் விடரகம் சிலம்பப்
*புன்றலை மடப்பிடி புலம்பிய குரலே.**

---

*நற். 318. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

பணை - பருத்த. தாள் - அடிமரம். படு - தாழ்ந்த. புகர் - புள்ளி. மிசை - மேலே. மருப்பு - தந்தம். பொறி - புள்ளி. என்றூழ் - வெயில். விடர் - குகை. சிலம்ப - எதிரொலிக்க. புன்தலை - பொலிவற்ற தலை. மடப்பிடி - இளமையான பெண் யானை.

60. கண்கள் பிணிக்கும்

தலைவன் பொருள் தேட எண்ணிப் பிரிய முயல்வதை அறிந்தாள் தோழி. அவன் கேட்டு உணருமாறு சில சொற்கள் கூறிப் பயணத்தை நிறுத்த முயன்றாள். பிரிந்து சென்ற பின்னும் மறக்கமுடியாதே, தலைவியின் கண்கள் செல்லும் வழியிலும் எதிர்ப்பட்டுத் தடுக்குமே, அவற்றையும் பொருட்படுத்தாமல் பாலைவழியில் செல்லும் கல்மனம் உண்டோ, அத்தகைய கல்மனம் உடையவர் வேறு என்னதான் செய்யார் என்று இவ்வாறு பல கூறிப் பயணத்தை நிறுத்த முயன்றாள்.

" கிண்கிணி அணிந்த மகன் — பால் அருந்தும் பவள வாய் உடைய தன் மகன் — மாலை அணிந்த இனிய மார்பில் ஏறி விளையாடி இறங்குவதால் மகிழ்பவள் தலைவி ; அதனால் அழகிய பற்களில் படர்ந்த சிறந்த புன்முறுவல் கொண்டவள் ; குற்றம் தீர்ந்த கொள்கை உடையவள் ; நம் உயிர் போல் விருப்பம் மிக்கவள் : அத்தகைய காதலியின் அழகிய முகத்தில் உலாவும் கண்களை நினைந்து, நாள்தோறும் பெரிய மரத்தைச் சுற்றியுள்ள வள்ளிக்கொடிபோல் அந்தக் கண்கள் சுற்றிப் பிணிக்கும் என்று அவர் கருதவில்லையே. அதைக் கருதாமல், சிறிய பல குன்றங்களைக் கடந்து செல்லத் துணிந்தார். இத்தகையவர் வேறு என்ன எண்ணியுள்ளாரோ? அறிவார் யார்?"

தோழி :

குரும்பை மணிப்பூண் பெருஞ்செங் கிண்கிணிப்
பால்ஆர் துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன்
மாலைக் கட்டின் மார்புஊர்பு இழிய
அவ்வெயிறு ஒழுகிய வெவ்வாய் மாண்நகைச்
செயிர்தீர் கொள்கைநம் உயிர்வெங் காதலி

திருமுகத்து அலமரும் கண்நினைந்து அல்கலும்
பெருமர வள்ளியின் பிணிக்கும் என்னோர்
சிறுபல் குன்றம் இறப்போர்
*அறிவார் யார்அவர் முன்னி யவ்வே.**

61. நின்ற சொல்லர்

தலைவன் பேரன்பு கொண்டு தலைவியைப் பிரியாமல் வாழ்ந்துவந்த காலத்தில், பொருள் தேடும் நோக்கத்தோடு சிலர் ஊரைவிட்டு வெளிநாடு செல்லப் புறப்படும் முயற்சியைக் கேள்வியுற்றான். தானும் சென்று தன் பங்கான கடமையைச் செய்து பொருள் கொண்டுவந்து வறுமையால் வாடும் சுற்றத்தாரைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணினான். தன் எண்ணத்தைத் துணைவியிடம் சொல்லத் தயங்கினான். அவளுடைய தோழியிடம் மெல்லத் தெரிவித்தான். தோழி தலைவிக்கு அறிவித்தாள். இதைக் கேட்ட தலைவியால் ஒன்றும் நம்ப முடியவில்லை. தலைவன் பிரிய முடியாத பேரன்போடு தன்னுடன் இனிது வாழ்வதை நினைத்தாள். 'உன்னை ஒருகாலும் பிரியேன்' என்று முன்பு ஒரு நாள் சொன்ன சொல்லை நினைத்தாள். சொன்ன சொல்

*நற். 269. எயினந்தை மகன் இளங்கீரனார்.

குரும்பை மணிப்பூண் - அரையில் அணியும் கிண்கிணி. ஆர் - அருந்தும். துவர் - பவளம். ஊர்பு - ஊர்ந்து. இழிய - இறங்க. அவ்வெயிறு - அழகிய பல். வெவ்வாய் - விருப்பம் பொருந்திய. செயிர் - குற்றம். வெம் காதலி - விருப்பம் உள்ள காதலி. அல்கலும் - நாள்தோறும். வள்ளியின் - வள்ளிக் கொடிபோல். முன்னிய - கருதியவை.

தவறாத அவருடைய உண்மையொழுக்கத்தை நினைத்தாள். அவருடைய காதலுறவு எவ்வளவு உயர்ந்தது, மாசற்றது என நினைத்துப் பார்த்தாள். எக்காரணத்தாலும் அவர் தன்னை விட்டுப் பிரியமாட்டார் என நம்பிக்கை கொண்டாள். தோழியிடம் பின்வருமாறு மறுமொழி கூறினாள்.

"அவர் சொன்ன சொல் தவறாதவர்; அப்போதைக்கு மட்டும் அல்லாமல் நெடுங்காலம் நிலைபெறும் இனிமைப் பண்பு உடையவர். எப்போதும் என் தோளைப் பிரிந்து செல்லுதல் அறியாதவர். அத்தகைய உயர்ந்த பண்பாளரின் உறவு, தாமரையின் குளிர்ந்த தாது ஊதி மலையுச்சியில் உள்ள சந்தன மரத்தில் கட்டிய இனிய தேன்போல் மிக்க உயர்வு உடையது. இது திண்ணம். தவிர, நீர் இல்லாமல் நடைபெறாத உலகம்போல், அவர் இல்லாமல் உயிர் வாழ இயலாதவள் யான். இதையும் அவர் அறிவார். ஆகையால் அன்புடன் விரும்புவாரே அல்லாமல், என்னைப் பிரிய எண்ண மாட்டார். பிரிவால் என் நெற்றி பசலை உறுவதற்கு அஞ்சி அத் துன்பத்திற்கு இடந்தரமாட்டார். நீ கூறியவாறு செய்தலை அறியாதவர் அவர்."

தலைவி :

நின்ற சொல்லர் ; நீடுதோன்று இனியர் ;
என்றும் என்தோள் பிரிபுஅறி யலரே ;
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை ;
நீர்இன்று அமையா உலகம் போலத்
தம்இன்று அமையா நம்நயந் தருளி

நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
*சிறுமை உறுபவோ செய்பறி யலரே.**

சிலருடைய பண்பு தொடக்கத்தில் இனிமையாய்த் தோன்றி, பிறகு பழகப் பழக வெறுப்புக்கு இடமாகும். உண்மைக் காதலரின் இனிய பண்பு, உண்மை நட்புப் போலவே, நீடித்துத் தோன்றவல்லதாகும். ஆதலின், 'நீடு தோன்று இனியர்' என்றாள்.

மலர்களில் உயர்ந்தது தாமரை. மரங்களில் உயர்ந்தது மலை. தாமரை, நீர்வளம் மிக்க பொய்கையில் வளர்வது. சந்தனம், வளமான மலையின் உச்சியில் வளர்வது. பிறப்பிடம், சூழ்நிலை, சேருமிடம், விளங்கும் தன்மை இவற்றால் சிறப்புப் பெற்றதோடு மட்டும் அல்லாமல், இனிமையும் நிறைந்தது இவ்வாறு தொடுக்கப்பட்ட தேன். ஆதலின் உயர்ந்த காதலரின் சிறந்த பண்புக்கு எல்லாவகையாலும் பொருத்தமான உவமையாகும் இது.

62. நன்று செய்தாய் !

தலைவன் பொருள்தேடும் நோக்கத்துடன் வெளி நாட்டுக்குப் பிரிந்து செல்ல எண்ணியதைத் தோழிக்குத் தெரிவித்தான். தோழி அதனைத் தலைவிக்குத் தெரிவித்தாள்.

---

*நற். 1. கபிலர்.

நீடு – நெடிதாக. சாந்தின் – சந்தனமரத்தில். புரைய – உயர்வு உடையவை. புரையோர் – உயர்ந்தோர். கேண்மை – உறவு. இன்று – இல்லாமல். நயந்து – விரும்பி. சிறுமை – துன்பம்.

கேட்ட தலைவி, தோழியை நொந்து, தலைவனுடைய பண்பையும் நொந்து வருந்தினாள். அவர் வேற்று நாட்டிற்குச் செல்வதாகக் கூறினால் அதைக் கேட்டதும் தடுத்துக் கூறாமல் நல்லது என உடன்பட்டு வந்தாளே என்று தோழியை நொந்தாள். களவொழுக்கத்தில் பிரியேன் என்று தலைவன் கூறிய உறுதிமொழியை நினைந்தாள். பிரிவாற்றாத தன் மென்மையை அறிந்திருந்தும் பிரிவுக்குத்துணிந்த அவனுடைய நெஞ்சத்து வன்மையை நினைந்து வருந்தினாள். என்ன இருந்தாலும் ஆடவரின் நெஞ்சம் அன்பான இல்வாழ்க்கையில் நிலையாகப் பதியாமல், பொருள் தேடும் முயற்சியிலேயே அலைகின்றதே என்று பொதுப்பட எண்ணியும் வருந்தினாள்.

"வேற்று நாட்டுக்கு அரிய வழிகளில் செல்லப் போகிறேன் என்று தலைவர் சொல்ல, அதை நன்று என்று விரும்பிக் கேட்டுவந்தாய் ! தோழி ! நல்ல வேலை செய்தாய்! ஆண்கள் கடமையைச் செய்வதில் முனைந்த மனம் உடையவராய், பொருள் தேடுவதற்காகப் பிரிவார்கள் ; அவ்வாறு அவர்களின் மனத்தைக் கவர்ந்து பிரியச் செய்தலே அந்தப் பொருளின் பண்பும் ஆகும். நீ தடுத்திருத்தல் கூடாதா ?"

தலைவி :

> ......**வேற்றுநாட்டு ஆரிடைச்**
> **சேறும் நாம்எனச் சொல்லச் சேயிழை**
> **நன்றுஎனப் புரிந்தோய் : நன்றுசெய் தனையே !**
> **செயல்படு மனத்தர் செய்பொருட்கு**
> **அகல்வர் ஆடவர் அதுஅதன் பண்பே.***

*நற். 24.

ஆரிடை - அரிய இடங்களின் வழி. சேறு - செல்லுதும். சேயிழை - செந்நிற அணிகலன்களை அணிந்த தோழி! புரிந்தோய்- விரும்பினாய்.

63. ஏன் பிரிவேன் ?

தலைவன் பொருள்தேடப் பிரிந்து செல்வான்போலும் என்று குறிப்பால் அறிந்து தலைவி வருந்தினாள். அவள் வருந்துவதை அறிந்த தலைவன், தன் வாழ்க்கையில் ஒரு குறையும் இல்லையாகையால் பிரியவேண்டிய காரணமே இல்லையே என்று சொல்லி அவளைத் தேற்றினான். அவளால் தான் பெற்று மகிழும் இன்பமும் தலைவியிடம் தான்கொண்ட காதலும் தோன்ற விளக்கினான்.

" உன் நல்ல மேனியும் மணம் கமழும் கரிய கூந்தலும் பொன்னும் நீலமணியும் போன்றவை. உன் அழகிய கண்களும் அழகிய தோள்களும் மலர்களும் மூங்கில்களும் போன்றவை. இவற்றின் அழகைக் காணும்போதெல்லாம் மனம் மகிழ்ந்து யானும் அறத்தின் பயனைப் பெற்றவர்களைப் போல் உள்ளேன். அதற்குமேல், புதல்வனும் விளையாடக் கற்றுக்கொண்டான். என் கடமையும் வெளியிடத்தில் இல்லாமல் உள்ளூரிலேயே உள்ளது. எண்ணிப்பார்த்தால், மடந்தை! யான் என்ன காரணத்தால் பிரியப் போகிறேன்? காதலோ கடலைவிடப் பெரிதாக உள்ளது. ஆகவே பிரிவுக்கு இடமே இல்லை ; வருந்த வேண்டா."

தலைவன் :

பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறுஇருங் கதுப்பும் :
போதும் பணையும் போலும் யாழநின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும் ;
இவைகாண் தோறும் அகம்மலிந்து யானும்
அறநிலை பெற்றோர் அனையேன் ; அதன்தலைப்

பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன் ;
வினையும் வேறுபுலத்து இலனே ; நினையின்
யாதனின் பிரிகோ ! மடந்தை !
*காதல் தானும் கடலினும் பெரிதே.**

64. நெஞ்சம் கரைந்தது

பொருள் தேடவேண்டிப் பிரியக் கருதியிருந்த தலைவன் அதைப் பல நாளாகத் தலைவியிடம் சொல்லாமலே மறைத்து வந்தான். ஆயின் தலைவி எவ்வாறோ பிறர்வாயிலாகத் தெரிந்துகொண்டாள். வழக்கம் போல் தலைவன் ஒருநாள் வந்தபோது கண்ணீர் விட்டு வருந்திக்கொண் டிருந்தாள். அதைக் கண்ட தலைவன் காரணம் யாது என வினவினான். அவள் அதற்கு மறுமொழி ஒன்றும் கூறவில்லை. அவனுடைய பயணத்தைப் பற்றியும் கேட்கவில்லை; தடுக்கவும் இல்லை. ஒன்றும் கூற முடியாமல் தலைவனிடம் நெருங்கி வந்து அவன்மேல் சாய்ந்து கலங்கி அழுதாள். அந்நிலையில் அவன் அவளைத் தழுவித் தேற்றினான் ; பயணத்தையும் கைவிட்டான். அதைப்·பிறகு ஒருநாள் தானே நினைத்துப் பார்த்துக்கொண்டான் தலைவன்.

*நற். 166.

நன்னர் - நன்மை. இரு - கரிய. கதுப்பு - கூந்தல். போது - மலர். பணை - மூங்கில். மாதர் - அழகுள்ள. உண்கண் - மை உண்டகண். அகம்மலிந்து - மனம் மகிழ்ந்து. அதன்தலை - அதன்மேலும். தொடி-வளையல். பொய்தல் - விளையாட்டு. வினை - தொழில். புலம் - நிலம். யாதனின் - யாது காரணமாக. பிரிகோ - பிரிகு, பிரிவேன்.

"நான் பயணத்திற்கு விரைவுபடுத்திய ஆரவாரத்தை எவ்வாறோ கேட்டு அறிந்து மலர் போன்ற அழகிய கண்கள் நீர் சொரியக் கலங்கிக்கொண்டிருந்தாள் தலைவி. யான் அவளைத் தேற்றும் முறையில் பல சொன்னேன். என் சொற்களைக் கேட்டு நாணியவாறே என்னை நோக்கி வந்தாள். என் பிரிவை அவள் விரும்பாமையால், மெல்ல மெல்ல வந்து, என்னைக் கேட்கவும் முடியாமல், தடுக்கவும் முடியாமல், மணம் கமழும் செறிந்த முடி விளங்க, யந்திரம் அழிந்த பாவைபோல் கலங்கி, மிகவும் நினைந்துருகி, என் மார்பை அடைந்தாள். அதைக் கண்டு, ஈர மண்ணால் செய்த பச்சை மண்கலம் பெருமழை பெய்த நீரை ஏற்றுக் கரைந்து நீரோடு கலந்துவிடுதல்போல், பொருள் நோக்கம் மிகுந்த என் நெஞ்சம் அவளுடன் ஒன்றுபட்டு மகிழ்ந்தது."

தலைவன் :

செலவிரைவு உற்ற அரவம் போற்றி
மலர்ஏர் உண்கண் பனிவர ஆயிழை
யாம்தன் கரையவும் நாணினள் வருவோள்
வேண்டா மையின் மென்மெல வந்து
வினவலும் தகைத்தலும் செல்லாள் ஆகி
வெறிகமழ் துறுமுடி தயங்க நல்வினைப்
பொறிஅழி பாவையின் கலங்கி நெடிதுநினைந்து
ஆகம் அடைந்தோளே ; அதுகண்டு
ஈர்மண் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற்குஏற் றாங்குஎம்
*பொருள்மலி நெஞ்சம் புணர்ந்துஉவந் தன்றே.**

---

*நற். 308. எயினந்தைமகன் இளங்கீரனார்.

அரவம் - ஒலி. உண் - மை உண்ட, மை தீட்டிய. பனி - நீர், கண்ணீர். ஆயிழை - அழகிய அணிகலன் அணிந்த தலைவி.

65. எமதும் உண்டு ஒரு திங்கள்

முன் ஒருமுறை பொருள் தேடும் காரணமாக வெளிநாட்டுக்குப் பிரிந்துசென்றவன் தலைவன். மறுமுறை அவ்வாறு பொருள் தேடும் வேட்கை வந்தபோது முன் பட்ட பிரிவுத் துன்பத்தை நினைந்து வருந்தினான். முன் பிரிந்து சென்றபோது மலையைக் கடந்து அப்பால் சென்றுகொண்டிருந்த நிலையில் மலையை ஊர்ந்து எழும் திங்களைப் பார்த்து மிக வருந்தினான். அது அவனுக்குத் தன் காதலியின் முகத்தை நினைவூட்டியது. இத்தகைய மதிமுகம் உடைய காதலி அந்த மலைக்கு அப்பால் தனித்துத் துயருறுவாளே என்று அன்று எண்ணிக் கலங்கினான். அன்று அவ்வாறு கலங்கிய துன்பம் இப்போது நினைவுக்கு வரவே, பயணத்தைக் கைவிட்டு நெஞ்சை நோக்கிப் பின்வருமாறு கூறினான்.

" குன்று ஊர்ந்து எழுந்த திங்களைப் பார்த்து, அந்நிலையிலேயே அங்கே வருந்தி நின்றேன். பிரிந்த காதலியை நினைந்து யான் வருந்தினேன் அல்லேனோ? கூரிய பற்களையும் திலகம் பொருந்திய மணம் கமழும் அழகிய நெற்றியையும் உடைய நிறைமதியான திங்கள் ஒன்று எமக்கு உரிமையானதும் உள்ளது; கற்கள் விளங்கிய பெரிய மலைக்கு அப்பால் உள்ள ஊரில் அந்த மதியம் உள்ளது என்று வருந்தி நினைந்தேன் அல்லேனோ?"

கரைய - கூற. வேண்டாமையின் - விரும்பாமையால். தகைத்தல் - தடுத்தல். செல்லாள்ஆகி - முடியாதவளாகி. வெறி - மணம். வினை - வேலைப்பாடு. பொறி - யந்திரம். அடைதந்தோள் - அடைந்தோள். செய்கை- செய்தல். பெயற்கு - பெயலை, பெய்த நீரை. ஏற்றுங்கு - ஏற்றாற்போல். உவந்தன்று - உவந்தது.

தலைவன் :

குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்து
உள்ளினேன் அல்லனோ யானே? முள்எயிற்றுத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
எமதும் உண்டுஓர் மதிநாள் திங்கள்......
கல்பிறங்கு மாமலை உம்பரஃது எனவே.*

66. தேய்ந்த பழங்கயிறு

பொருள் தேடுவதற்காக ஊரைவிட்டுப் பிரிந்து வந்த தலைவன் இடைவழியில் பலவாறு எண்ணி எண்ணி வருந்தினான். தன்னைப் பிரிந்து வீட்டில் தனித்திருந்து வருந்தும் தலைவியை நினைந்தான். அவளுடைய துன்பத்தைத் தீர்ப்பதே முதல் கடமை, ஆதலின் ஊருக்கே திரும்பிச் செல்லலாமா என்று எண்ணினான். உடனே தான் மேற்கொண்ட கடமையை முடித்தலே ஆண்மை, அதை முடிக்கத் தவறினால் ஒரு புறம் துன்பமும் ஒரு புறம் இழிநிலையும் நேருமே என்று அறிந்து வருந்தினான். தலைவியிடம் செல்லும் அன்பு நெஞ்சம் ஒரு பக்கமும், கடமையில் முனைந்த அறிவின் துணிவு மற்றொரு பக்கமுமாக அலைக்க வருந்திச் சோர்ந்தான். இவ்வாறு சோர்வுற்றுச் சோர்வுற்று உடம்பில் உள்ள வன்மை மிகக் குறைந்துபோவதாக உணர்ந்து பின்வருமாறு எண்ணி நொந்தான்.

---

*நற். 62. இளங்கீரனார்.

உள்ளினேன் - நினைந்தேன். எயிற்று - பற்களை உடைய (எயிறு - பல்). தைஇய - அணிந்த. பிறங்கு - விளங்கும். உம்பரஃது - அப்பால் உள்ளது.

“என் உள்ளத்தைத் தன் அன்பால் பிணித்துக் கொண்ட துணைவியின் சார்பாக நெஞ்சம் நின்று, ‘அவளுடைய துன்பத்தைத் தீர்ப்பதற்காகச் செல்வோம்’ என்கின்றது. செய்யும் கடமையை முடிக்காமல் துன்பத்தை விளைத்தல் அறியாமையோடு இழிவையும் தரும் என்று உறுதிநிலை இயக்க இயங்கி, ‘சிறிதும் அவசரப்படாதே’ என்று அறிவு தடுக்கின்றது. இவற்றிற்கு இடையில், ஆண் யானைகள் இரண்டு ஒன்றோடொன்று மாறாகப் பற்றி இழுக்கும் தேய்ந்த புரிகளை உடைய பழங்கயிறு இற்றுப் போவது போல், துன்பத்தால் வருந்திச் சோர்ந்த என் உடம்பு அழிய வேண்டியதுதானோ?”

தலைவன் :

உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும் ;
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இளிவுதலைத் தரும்என
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும் ; ஆயிடை
ஒளிறுஏந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
*வீவது கொல்என் வருந்திய உடம்பே.**

---

*நற். 284. தேய்புரிப் பழங்கயிற்றினார்.

வயின் – இடத்தில். செல்லல் – துன்பம். எவ்வம் – துன்பம். எய்யாமை – அறியாமை. விரையல் – விரையாதே, அவசரப் படாதே. ஆயிடை – அவற்றிடையே. ஒளிறு – விளங்கும். மருப்பின் – கொம்புகளை உடைய. வீவதுகொல் – அழிவதோ.

67. நெஞ்சு வருந்தி அலையுமே !

நெஞ்சு தனியே சென்று வருவதாகவும், தூதுஉரைப்பதாகவும், காதலர் பொருட்டு அலைவதாகவும் இன்னும் இவ்வாறு பலவகையாக இயங்குவதாகவும் உரைப்பது பாட்டுலகின் கற்பனை மரபு.

தலைவன் பிரிந்து சென்றபின், அவனை நினைந்து வருந்தும் தலைவி தோழியை நோக்கித் தன் துயரத்தை எடுத்துரைத்தாள். அப்போது தான் வருந்துவதை மிகுதியாகக் கூறாமல், தன் பொருட்டுத் தன் நெஞ்சம் வருந்தி அலைவதாகக் கூறினாள்.

" ஒளி பொருந்திய என் வளையல்கள் நெகிழுமாறு என்னை மெலிவித்த காதலர்க்கு யான் படும் துன்பத்தை அறிவுறுத்துவதற்காகச் சென்ற நெஞ்சம், அங்கே அவர் செய்யும் தொழிலுக்குத் துணையாக இருந்துஅவரையும்அழைத்துக் கொண்டு ஒருங்கே வரலாம் என்ற ஆசையால் உடனிருந்து வருந்துகின்றதோ ? அல்லது, காதலர் அருள் செய்யாமையால் வருந்தி இங்கே திரும்பி வந்து, அதற்குள் பழைய அழகு எல்லாம் இழந்துவிட்ட என் பசலைநிறத்தைப் பார்த்து, என்னை அறிய முடியாமல், இவள் யாரோ அயலாள் என்று திரும்பிப் போய்விட்டதோ ? துன்பம் எய்திப் போய்விட்டதோ ?"

தலைவி :

எல்வளை ஞெகிழ்த்தோர்க்கு அல்லல் உறீஇயர்
சென்ற நெஞ்சம் செய்வினைக்கு உசாவா
ஒருங்குவரல் நசையொடு வருந்துங் கொல்லோ ?
அருளான் ஆதலின் அழிந்துஇவண் வந்து

தொன்னலம் இழந்தஎன் பொன்நிறம் நோக்கி
ஏதி லாட்டி இவள்எனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே.*

68. பூ விற்பவள் கொடியவள்

தலைவன் பிரிந்து சென்றபோது இளவேனிற்காலத்தில் நாட்டிற்குத் திரும்பி வந்துவிடுவதாகக் கூறிச்சென்றான். இளவேனில் வந்துவிட்டது. குயில் கூவுதல் கேட்டது. ஆற்றில் மழைக்காலத்தில் கலங்கி ஓடிய நீர் இப்போது வெள்ளம் இல்லாமையால் வடிந்து தெளிந்து ஓடியது. குருக்கத்தியும் பித்திகையும் மலர்ந்தன. இவ்வாறு இளவேனில் வந்த பிறகும் தலைவன் திரும்பிவரவில்லை. பூ விற்பவள் பித்திகையும் குருக்கத்தியும் விற்றுத் தெருவழியே சென்றாள். அவள் பூ விற்கும் குரலைக் கேட்டதும் தலைவி இளவேனில் தொடங்கியதை நினைந்து மிக வருந்தினாள். தோழியிடம் பின்வருமாறு கூறினாள்.

"ஆழ்ந்துபட்ட பெரிய புண்ணின் வாய் ஆறா திருக்கின்ற மார்பில் அதன்மேல் வேலையும் எறிந்து வருத்துவது போல், பிரிவால் வருந்தித் துன்புறும் என்னைக் குயிலின்

---

*நற். 56. பெருவழுதி.

எல் - ஒளி. வளை - வளையல். ஞெகிழ்த்தோர் - நெகிழச் செய்தவர். உறீஇயர் - உறுத்த - அறிவுறுத்த. வினை - தொழில். உசாவா(க) - ஆராய்ச்சித் துணையாக. நசை - விருப்பம். இவண் - இங்கே. தொல்நலம் - பழைய அழகு. பொன் நிறம் - பசலை நிறம். ஏதிலாட்டி - அயலாள். போயின்று - போயிற்று. தலை மணந்து - சேர்ந்து.

குரல் வருத்துகின்றது. தெளிந்த நீர் பொருந்திய ஆற்றின் காட்சி இளவேனில்காலம் வந்ததை நினைவூட்டுவதால் அதை விட மிகக் கொடியதாக உள்ளது. பூ விற்கும் இவளோ அதைவிடக் கொடியவள்; பசிய குருக்கத்தியோடு பித்திகை விரவிய மலர்களை வாங்குவீரோ என்று, வண்டுகள் சுற்றும் வட்டியோடு திரியும் இந்த இளமகள் மிகக் கொடியவள்."

தலைவி :

அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
எவ்வ நெஞ்சத்து எஃகுஎறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலும் குயிலினும்
தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே ;
அதனினும் கொடியள் தானே மதனின்
துய்த்தலை இதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோஎன
வண்டுசூழ் வட்டியள் திரிதரும்
*தண்டலை உழவர் தனிமட மகளே.**

தலைவன் கூறிப் பிரிந்த இளவேனிற் காலத்தை நினைவூட்டுவன எல்லாம், தலைவியைத் துன்புறுத்துவனவாக இருந்தன. குயிலும் ஆறும் ஒலியாலும் காட்சியாலும் இளவேனிலை நினைவூட்டி அவளை வருத்தின. அந்நிலையில் இளவேனிலுக்குச் சிறப்பாக மலர்ந்து மணம் கமழும் மலர்களை - காதலரோடு

*நற். 97. மாறன்வழுதி.

விழு - பெரிய. வழும்பு - நிணம். புலரா - ஆறாத, உலராத. எவ்வம் - துன்பம். நெஞ்சத்து - மார்பில். எஃகு - வேல். எறிந் தாங்கு - எறிந்தாற்போல். தேறு - தெளிந்த. மதனின் - செருக்கு உடைய, அழகு உடைய. துய்த்தலை - பஞ்சு போன்ற மெல்லிய மேற்பகுதி. வட்டி - ஒருவகைப் பெட்டி. தண்டலை - சோலை.

வாழும் மகளிர் சூடி மகிழும் மலர்களை வட்டியில் வைத்துக் கொண்டு விற்றுவரும் பெண்ணின் குரல் அவளுடைய துன்பத்தை மிகுதிப்படுத்தியதால், அவள் மிகக் கொடியவள் என்றாள்.

69. மேகம் அங்கே தவழ்கின்றது

தலைவன் பிரிவால் வருந்திய தலைவியைத் தோழி ஆற்று வித்துவந்தாள். கார்காலத்தில் தலைவன் திரும்பி வந்துவிடுவான் என்ற நம்பிக்கையால் தலைவியும் ஒருவாறு ஆற்றியிருந்தாள். கார்காலம் தொடங்கிவிட்டது. உடனே, மழை முகிலைக் கண்டு தலைவி வருந்தாதிருக்க வேண்டும் என்ற கவலையோடு தோழி, அந்தக் காட்சியையே துயரப்படாமல் இருப்பதற்கு உதவும் சான்றாகக் காட்டி ஆறுதல் கூறினாள். மேகம் கால் இறங்கி மழைபெய்யத் தொடங்கும் போது தலைவன் காண்பான் என்றும், அந்தக் காட்சி கூந்தல்போல் தோன்றும் ஆகையால் துணைவியை நினைந்து திரும்புமாறு தூண்டும் என்றும் கூறினாள். மேகத்தின் மின்னல் கைவளையலின் ஒளியைத் தலைவனுக்கு நினைவூட்டும் என்றும் கூறி, மேகங்கள் அவன் சென்றுள்ள திசையில் தவழ்ந்துபோவதைக் காட்டினாள்.

" 'தோள்கள், வளைகள் நெகிழுமாறு மெலிந்துவிட்டன. நெற்றி, பீர்க்கம் பூப் போல் பசலை நிறம் உற்றது. கண்களும் கண்ணீர் தங்கப் பெற்றன. அந்தோ! என் உயிர் அழிவது திண்ணம் என்று நன்கு தெளிந்துவிட்டேன்' என்று சொல்லி நீ துயரில் அழுந்தாதே. தோழி! உன்

செழித்த கூந்தல் போல் இறங்கிப் பெய்யும் காலுடன், பொன்வளையல் போல் மின்னி, தொகுதியான இனிய ஒலி செய்யும் முரசுபோல் முழங்கி, அரசருடைய மதிலை ஊர்ந்து செல்லும் பல கேடகப்படை போல் அவருடைய நல்ல மலைநாட்டில் மேகம் தவழ்ந்து போகின்றது. ஆகையால் அவர் விரைவில் வருவார். நீ வருந்ாதே."

தோழி :

'தோளே தொடிநெகிழ்ந் தனவே; நுதலே
பீர்இவர் மலரின் பசப்புஊர்ந் தன்றே;
கண்ணும் தண்பனி வைகின அன்னோ!
தெளிந்தனம் மன்ற தேயர்என் உயிர்'என
ஆழல் வாழி தோழி! நீநின்
தாழ்ந்தொலி கதுப்பின் வீழ்ந்த காலொடு......
பொலந்தொடி போல மின்னிக் கணங்கொள்
இன்னிசை முரசின் இரங்கி மன்னர்
எயில்ஊர் பல்தோல் போலச்
செல்மழை தவழும்அவர் நன்மலை நாட்டே.

70. அவர் கேட்கவில்லையோ?

தலைவன் பொருள் தேடுவதற்காக வெளிநாட்டுக்குப் பிரிந்தான். கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றான். அவன் குறிப்பிட்ட காலம் வந்துவிட்டது.

*நற். 197. நக்கீரர்.

இவர் - படர்ந்த. ஊர்ந்தன்று - ஊர்ந்தது. பனி - நீர். அன்னோ - அந்தோ. மன்ற - திண்ணமாக. ஆழல் - வருந்தாதே. ஒலி - தழைத்த, செழித்த. கதுப்பின் - கூந்தல்போல். இரங்கி - ஒலித்து. தோல் - கேடகம், கேடகம் ஏந்திய படை.

அவன் வரவில்லை. கார்கால வரவை அறிவுறுத்தி மேகங்கள் மின்னியும் இடித்தும் மழை பெய்யத் தொடங்கின. இவற்றைக் கண்ட தலைவி, அவன்வருகையை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தவளாய் வருந்தினாள். தலைவன் சென்றுள்ள நாட்டில் இந்தக் கார்காலம் இன்னும் வரவில்லையோ, மேகங்கள் அங்கே முழங்குவதில்லையோ, முழக்கம் அவர் செவியில் விழவில்லையோ என எண்ணி எண்ணி வருந்தினாள்.

" புகழும் இன்பமும் பிறர்க்கு ஈயும் தன்மையும் ஆகிய மூன்றும் பொருள் உடையவர்க்கே உண்டு ; பொருள் தேடாமல் முயற்சியில்லாமல் சோர்ந்திருப்பவர்க்கு இவை பொருந்துவதில்லை என்று கூறிப் பொருள் தேடும் முயற்சியின் காரணமாகப் பிரிந்தார். அவருடைய கொள்கையே வேறுபட்டதாக உள்ளது. அரும்புகள் மலர்ந்த பல மலர்களை நீலமணி போன்ற கரிய கூந்தலில் அணிவதற்காகக் கார்காலத்தில் திரும்பிவருவேன் என்று குறையில்லாத உறுதிமொழியை என் மனம் கொள்ளுமாறு கூறிச் சென்றார். மேகம் சூழும் மலைகள் பலவற்றைக் கடந்து தேடும் பொருளுக்காகப் பிரிந்த காதலர் இந்த ஒலியைக் கேட்பதில்லையோ? தோழி ! கையில் விளங்கிய வளையல்கள் நெகிழச் செய்த என் கலங்குதலான துன்பத்தைக் கண்டு என்னை எள்ளிச் சிரிப்பதுபோல் மின்னி, எள்ளி ஆரவாரம் செய்வதுபோல் முழங்குகின்ற இந்தக் கார்கால மழையின் முழக்கத்தை அவர் அந்த நாட்டில் கேட்கவில்லையோ ?"

தலைவி :

இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்மென
வினை வயின் பிரிந்த வேறுபடு கொள்கை

அரும்பு அவிழ் அலரிச் சுரும்புஉண் பல்போது
அணிய வருதும்நின் மணிஇருங் கதுப்புஎன
எஞ்சா வஞ்சினம் நெஞ்சுஉணக் கூறி
மைசூழ் வெற்பின் மலைபல இறந்து
செய்பொருட்கு அகன்ற செயிர்தீர் காதலர்
கேளார் கொல்லோ தோழி தோள
இலங்குவளை நெகிழ்த்த கலங்குஅஞர் எவ்வம்
நகுவது போல மின்னி
*ஆர்ப்பது போலும்இக் கார்ப்பெயல் குரலே.**

71. மிகப் பேரன்பினர்

தலைவன் திரும்பிவருவதாகக் குறித்துப் பிரிந்து சென்ற கார்காலம் தொடங்கிவிட்டது. தலைவன் இன்னும் திரும்ப வில்லை. தலைவி மிக வருந்தித் துயருற்றாள். அவளைத் தேற்ற முயன்ற தோழி, தலைவனுடைய பேரன்பின் திறத்தை எடுத்துரைத்தாள். அவர் எவ்வளவு தொலைவில் உள்ள நாட்டுக்குச் சென்றாலும் மறக்கமாட்டார் என்றும், அங்கே பெரும் புகழ் பெற்று விளங்கினாலும் தங்கியிருக்க மாட்டார் என்றும் கூறினாள்.

---

*நற். 214. கருவூர்க் கோசனார்.

அசை - வாளா இருத்தல். அரும்புணர்வு - அரிதில் பொருந்தல். இன்மெனா - இல்லை என்று. வினைவயின் - கடமைக்காக. அலரி - மலர். சுரும்பு உண் - வண்டுகள் தேன் உண்ணும். கதுப்பு - கூந்தல். எஞ்சா - எஞ்சாத - குறையாத. வஞ்சினம் - சூள் - உறுதிமொழி. வெற்பு - மலை, மலைப்பகுதி. இறந்து - கடந்து. செயிர் - குற்றம். தோள - தோளில் (கையில்) உள்ளனவாகிய. அஞர் - துன்பம்.

"கார்காலம் வந்துவிட்டது. காதலர் மிகத் தொலைவில் உள்ள வேற்று நாட்டில் இருக்கிறார் என்றாலும் மிகப் பெரிய அன்பு வாய்ந்தவர், தோழி! அதனால், அந்நாட்டில் நல்ல புகழை அழியாதவகையில் பெற்றாலும் அங்கே நின்று தங்கிவிடமாட்டார். இதோ, கார்கால வரவைத் தெரிவிக்கும் மேகத்தின் முழக்கத்தைக் கேட்கின்றேனே."

தோழி :

கார்எதிர்ந் தன்றால் காலை ; காதலர்
தவச்சேய் நாட்டர் ஆயினும் மிகப்பேர்
அன்பினர் வாழி தோழி ; நன்புகழ்
உலப்பின்று பெறினும் தவிரலர் ;
கேட்டிசின் அல்லனோ விசும்பின் தகவே ?*

72. அருளின்றி அழிவதோ ?

தலைவன் கார்காலத்தில் வந்துவிடுவதாகக் கூறிப் பிரிந்து சென்றான். கார்காலத்தில் மழை தொடங்கிவிட்டது. தலைவனோ வரவில்லை. சொன்ன சொல் தவறாதவர், எக் காரணத்தாலும் தவறாதவர் தன் கணவர் என்பது தலைவிக்கு நன்கு தெரியும். கூறிச் சென்ற கார்காலம் வந்தும் அவர் வாராமையால், அதற்குக் காரணம் யாதோ, அவர்நிலை

---

*நற். 115.

எதிர்ந்தன்று - வந்தது. காலை - காலம், பருவம். தவ - மிக. சேய் - தொலைவான. உலப்பின்று - அழியாமல். தவிரலர் - நிற்க மாட்டார். கேட்டிசின் - கேட்டேன். தகவு - தன்மை.

என்னவோ என்று தோழியிடம் பலவாறு கவலையுற்று வருந்தினள். அவளுடைய துயரம் யார்க்கேனும் சொல்லித் தணிக்கக்கூடியதாக இல்லை; தனியே இருந்து வருந்தி வருந்தி அழியத்தக்கதாக இருந்தது.

"தோழி! காதலர், நிலம் அசைந்து புரண்டு மாறுவதாக இருந்தாலும் சொன்ன சொல் பிறழ்தல் என்பது இல்லாதவர். மேகம், கடலில் நீர்முகந்து, நெருங்க இருண்டு, மிக்க மழை பொழிந்து, கடுமையான இடி இடித்து, கார்காலத்தை ஏற்படுத்திவிட்டு என்னிடம் துன்புறுத்த வந்துள்ளது. இந் நிலையில், புன்செய் நிலத்து ஆயர்கள் இரவில் காவலுக்குக் கொளுத்திய பெரிய மரத்தின் வேரடிக்கட்டை போல, யானே தனித்திருந்து துயரத்தால் அழியும் நிலைமை உற்றேன்; அவருடைய அருள் இல்லாமல் வருந்துகின்றேன்; திக்கற்ற நிலையில் உள்ளேன்."

தலைவி :

அம்ம வாழி தோழி! காதலர்
நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய
சொல்புடை பெயர்தலோ இலரே; வானம்
நளிகடல் முகந்து செறிதக இருளிக்
கனைபெயல் பொழிந்து கடுங்குரல் பயிற்றிக்
கார்செய்து என்னுழை யதுவே; ஆயிடைக்
கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர வேரடிப் போல
அருளிலேன் அம்ம; அளியேன் யானே.*

---

*நற். 289. மருங்கூர்ப்பட்டினத்துச் சேந்தன் குமரனார்.

புடைபெயர்தல் - மாறுதல். நளி - செறிந்த, நெருங்கிய. செறிதக - நெருங்க. கனை - மிக்க. பயிற்றி - பலமுறை இடித்து. உழை - பக்கம், இடம். எல்லி - இரவு. மாட்டிய - பற்றவைத்த.

73. மறக்க நேருமோ?

பொருள் தேடப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருதலை எதிர்பார்த்து எதிர்பார்த்துத் தலைவி ஏமாற்ற மடைந்து வருந்தினாள். குறித்த காலமும் கடந்து, அதற்கு மேலும் சில திங்கள் ஆயின. தலைவன் வரவில்லை. தலைவியின் துயரம் பெருகியது. அவளைத் தேற்ற முயன்ற தோழி பலவாறு சொல்லி நம்பிக்கை ஊட்டினாள். தலைவன் எக் காரணத்தாலும் கைவிடமாட்டான் என்று திரும்பத் திரும்ப எடுத்துரைத்து, வருந்தாதிருக்குமாறு வற்புறுத்தினாள். அவள் சொல்வன எல்லாம் கேட்டும் தலைவி அமைதி பெற வில்லை. தன் உடல் மெலிந்து கெடுவதையும், அறிவு மயங்கிக் கெடுவதையும் தலைவி தனக்குள் எண்ணி உணர்ந்தாள். அவள் மனம் அவற்றைக் குறித்துக் கவலைப்பட வில்லை. சாகத் துணிந்த மனநிலை அவளுக்கு இருந்தது. ஆயின் ஒரு கவலை மட்டும் அவளை வாட்டியது. அதாவது : தலைவன் வாராமை காரணமாக உடல் அழிந்தால், மறு பிறவியிலேனும் தலைவனைக் காண முடியுமோ என்றும், உடல் அழிந்ததன் காரணமாக நினைவு மாறி மறந்துவிட்டால் என்ன செய்வது என்றும் கவலையுற்றாள். தன் கவலை யையே, தேற்ற முயன்ற தோழிக்கு மறுமொழியாக எடுத் துரைத்தாள்.

" என் தோள்களும் மெலிந்து அழிகின்றன. அவர் குறித்த நாள் கழியவே, நீண்ட பாலைவழியை நோக்கி நோக்கி ஒளியற்றுக் கண்களும் காணும் தன்மை இழந்தன. என்னைக் கைவிட்டு அறிவும் மயங்கிப் பித்துப்போல் வேறு பட்டது. நோயும் திரும்பிவருகின்றது. மாலைப்பொழுதும் வந்துவிட்டது. யான் என்ன ஆவேனோ? இங்கே யான் சாவதற்கு அஞ்சவில்லை, வேறொன்றிற்கு அஞ்சுகின்றேன்;

அவ்வாறு இறந்தபோது பிறப்பு வேறொன்று வருவதானால், என் காதலனை மறக்கநேருமோ என்றுதான் அஞ்சுகின்றேன்."

தலைவி:

தோளும் அழியும்; நாளும் சென்றென
நீளிடை அத்தம் நோக்கி வாள்அற்றுக்
கண்ணும் காட்சி தௌவின; என்நீத்து
அறிவும் மயங்கிப் பிறிதுஆ கின்றே;
நோயும் பெரும்; மாலையும் வந்தன்று;
யாங்குஆ குவென்கொல் யானே? ஈங்கோ
சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவின்
பிறப்புப்பிறிது ஆகுவ தாயின்
மறக்குவேன் கொல்என் காதலன் எனவே.*

74. வரினும் பயன் இல்லை

தலைவன் பிரிந்து வெளிநாட்டுக்குச் சென்றபின் குறித்த நாளில் வராமையால் தலைவி மிகவும் வருந்தித் துயருற்றாள். அவளுடைய ஆற்ற முடியாத துயரத்தைக் கண்ட தோழி தலைவனிடத்திற்குத் தூது அனுப்ப எண்ணினாள். அம் முயற்சி வேண்டா எனத் தலைவி தடுத்தாள்.

*நற். 396. அம்மூவனார்.

சென்றென - சென்றுவிட, கழிந்திட. வாள் - ஒளி. தௌவின - அடங்கின. ஆகின்று - ஆயிற்று. பெரும் - திரும்பும். வந்தன்று - வந்தது. அஞ்சுவல் - அஞ்சுவேன்.

இனி அவர் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன என்று துயரத்தின் எல்லையில் நின்று சாகத் துணிந்தவள்போல் நொந்து கூறினாள்.

"அவர் எங்கே எத்தன்மை உடையவராக இருந்தாலும் இனி அவருடைய நினைவை விடுக. நீ வருந்தாதே, தோழி. நாம் இவ்வாறு வருந்துமாறு நம்மைத் துறந்த அவருடைய நட்பால் இனி என்ன பயன்? (மரல்நாரையே உடையாகக் கொண்டு மலையில் வாழும்) குறவர் தெரியாமல் அறுத்துவிட்ட சந்தனமரம் வற்றி நன்றாக உலர்ந்து மெல்ல வறிதாகிச் சோர்ந்து அழிந்தாற்போல், என் அறிவும் உள்ளமும் அவரிடம் போய்விட, என் உடம்பு ஒன்றும் இல்லாததாயிற்று. தோழி! இனி அவர் வந்தாலும் என் நோய் தீர்க்கும் மருந்து அல்லர். ஆதலின் அவர் வராமல் அங்கேயே இருப்பாராக. இங்கே காதலும் நினைவும் வருத்த வருந்திய நம்முடைய துன்பம் மிக்க நிலையை நம்மவர் காணாதிருப்பாராக."

தலைவி :

என்னர் ஆயினும் இனிநினைவு ஒழிக;
அன்ன ஆக இனையல்; தோழி! யாம்
இன்னம் ஆகநத் துறந்தோர் நட்புஎவன்?
மரல்நார் உடுக்கை மலைஉறை குறவர்
அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்
வறன்உற்று ஆர முருக்கிப் பையென
மரம்வறி தாகச் சோர்ந்துஉக் காங்குஎன்
அறிவும் உள்ளமும் அவர்வயின் சென்றென
வறிதால் இகுளை! என் யாக்கை; இனிஅவர்

வரினும் நோய்மருந்து அல்லர் ; வாராது
அவணர் ஆகுக காதலர் ; இவண் நம்
காமம் படர்அட வருந்திய
நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே.*

75. மறக்க முடியாதது

கடமையை முடித்து ஊர்க்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான் தலைவன். தன் வருகையை அறியாமல் தலைவி வருந்திக் கிடப்பாள் என்றும், அறிந்தால் பெரு மகிழ்ச்சியோடு அலங்கரித்துக்கொண்டு தன்னை வரவேற்பாள் என்றும் எண்ணினான். தன்னைப் பிரிந்து வருந்தும் நாட்களில் அணிகள் அணிந்துகொள்ளாமலும் மலர்கள் சூடிக் கொள்ளாமலும் கிடக்கும் துன்ப நிலையும், தன்னைக் கண்டவுடன் மகிழ்ந்து அழகுபடுத்திக் கொள்ளும் தன்மையும் அவனுடைய நினைவுக்கு வந்தன. முன் ஒரு முறை வெளிநாட்டிலிருந்து திரும்பிச் சென்ற போது தான் கண்ட காட்சியை நினைந்தான். அதைத் தேர்ப்பாகனுக்கு எடுத்துரைத்தான்.

" மறக்க முடியாத காட்சி அது, பாகனே ! வறட்சியால் வருந்திய உலகம் தொழில்களை மேற்கொண்டு செழிப்

---

*நற். 64. உலோச்சனார்.

என்னர் - எத்தன்மையானவர். இன்னம் - இத்தன்மையேம். இனையல்-வருந்தாதே. மரல்-கற்றாழை. சாந்தம்-சந்தனம். வறிது-பயனற்றது. இகுளை - தோழி. யாக்கை - உடம்பு. அவணர் - அவ்விடத்தார். இவண் - இங்கு. படர் - நினைப்புத் துன்பம். மலி - மிகு. காணன்மார் - காணாதிருப்பாராக. எமர் - நம்மவர்.

புறமாறு பழமையான பருவ மழை பொழிந்ததனால் பரந்த புதுநீர் நிறைந்த பள்ளங்களில் தவளைக் கூட்டங்கள் ஒலித்தன. அந்த ஒலியால், என் தேரில் கட்டிய மணிகளின் ஒலி அவளுடைய செவிக்கு எட்டாது என்று, 'முன்னே செல்லுங்கள், சென்று அறிவியுங்கள்' என்று ஏவலாளரை ஏவினேன். அவர்கள் விரைந்து வீட்டிற்குச் சென்று அறிவித்தனர். அறிவிக்கவே, அதுவரையில் ஒழுங்கு செய்யாதிருந்த கூந்தலின் மாசு போக மெல்ல நீராடிச் சில மலர்களைக் கொண்டு பலவாகிய கூந்தலில் முடித்துக் கொண்டிருந்தாள். அந்நிலையில் யான் வீட்டிற்குள் புகுந்தேன். உடனே தன் உடல் வருந்த, மலர் அவிழும் முடியோடு வந்து என்னை அணைத்துக்கொண்டாள். அவ்வாறு மகிழ்ந்து வரவேற்ற அந்த நிலை மறக்க முடியாதது."

தலைவன் :

மறத்தற்கு அரிதால் பாக! பல்நாள்
வறத்தொடு வருந்திய உலகுதொழில் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க, நாவுடை
மணிஒலி கேளாள் வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக்கு அறியுநர் ஆக, மெல்லெனா
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துரூஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே.*

*நற். 42. கீரத்தனார்.

வறம் - வறட்சி, பஞ்சம். கொளீஇய - கொள்ள. அவல - பள்ளங்களில் உள்ள. கறங்க - ஒலிக்க. வாணுதல் - வாள்நுதல்-

76. குழலும் கேட்கின்றதே !

கார்காலத்தில் திரும்பிவருவதாகக் கூறிச் சென்ற தலைவன், விரைவில் கடமையை முடித்துத் திரும்பிக் காட்டு வழியில் வந்துகொண்டிருந்தான். கார்காலமும் தொடங்கி விட்டது. மின்னலும் இடியும் மழையும் கண்ட அவனுடைய நெஞ்சம், ஊரில் இருந்தவாறே அவற்றைக் காணும் தலைவி என்ன எண்ணுவாளோ என்று வருந்தியது. அவனுடைய நெஞ்சம் வருந்தியது. பிரியும்போது கூறிச் சென்ற கார்காலம் வந்தபிறகும் இன்னும் அவர் வரவில்லையே என்று தலைவி வருந்தி அழுவாள் என்று எண்ணிக் கலங்கினான். அந்நிலையில் அவன்செவியில் கோவலர் ஊதும் குழலோசை கேட்டது. அதையும் தலைவி கேட்டால் மிக வருந்தித் துன்புறுவாளே என்று நைந்தான். இவ்வளவும் தேர்ப்பாகன் உணருமாறு கூறினால் அவன் தேரை விரைந்து செலுத்த, ஊருக்கு விரைவில் சென்று சேரலாம் என்று கருதி அவனை நோக்கிப் பின்வருமாறு கூறினான்.

"நீலநிறமான மலையின் பிளப்புக்கள் நன்கு தெரியுமாறு மின்னி, துணைவி இருக்கும் திசையை நோக்கி அகன்ற பெரிய வானத்தின் இடம் எல்லாம் மறையுமாறு பரவி, இதுவரையில் பெய்யாமல் இருந்த மேகங்கள் இப்போது பெய்யத் தொடங்கிவிட்டன. நிழல் விளங்கும் ஒளி அமைந்த வளையல் நெகிழுமாறு ஏங்கி அழத் தொடங்கி விட்டிருப்பாள் தலைவி. அதனோடுகூட, இத்தகைய இராக் காலத்தில் கோவலரும் குழல் ஊதத் தொடங்கி விட்டனரே."

ஒளியான நெற்றியையுடைய தலைவி. மண்ணா - கழுவாத-ஒழுங்கு செய்யாத. கழீஇ - நீராட்டி. குரல் - முடிவகை. வருத்தாஅ - வருத்தி. கவைஇய - அணைத்த. மா - மாமை நிறம் உள்ள. அரிவை - மாது. அயர் - கொண்டாடும்.

தலைவன் :

மாமலை விடரகம் விளங்க மின்னி
மாயோள் இருந்த தேஎம் நோக்கி
வியலிரு விசும்பகம் புதையப் பாஅய்ப்
பெயல்தொடங் கினவே பெய்யா வானம் ;
நிழல்திகழ் சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி
அழல்தொடங் கினளே ஆயிழை ; அதன்எதிர்
குழல்தொடங் கினரே கோவலர்
*தழங்குகுரல் உருமின் கங்கு லானே.**

77. பெருந்தகு நிலை

மேற்கொண்ட கடமையை முடித்த தலைவன் ஊர்க்கு விரைந்து செல்ல முயன்றான். ஊரில் தனியே வருந்திக் கொண்டிருக்கும் தலைவியிடம் விரைந்து சென்று அவள் துயரைத் தீர்க்கவேண்டும் என்று முனைந்தான். தேர் ஊரை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. வழியில் காட்டுக்கோழி தன் துணையோடு வாழும் அன்பான வாழ்க்கை தலைவனுடைய கண்ணில் பட்டது. பகுத்தறிவற்ற சிறு பறவையும் இவ்வாறு அன்பான வாழ்க்கை நடத்தித் தன் துணையை மகிழ்விக்கும்போது, யான் அவளைத் துயரத்திற்கு ஆளாக்குதல் தகுமோ என்று எண்ணி உருகினான். தேர்ப்பாகனை நோக்கி விரைந்து செலுத்துமாறு ஏவினான்.

*நற். 371. ஔவையார்.

மா - கரிய. விடரகம் - குகையின் இடம். மாயோள் - மா(மை) நிறம் உள்ள தலைவி. தேஎம் - திசை. பாஅய் - பரவி. ஞெகிழ - நெகிழுமாறு. தழங்கு - ஒலிக்கும். உருமின் - இடியோசை பொருந்திய.

"விரைந்து வந்ததால் வருந்திய ஏவலாளர் மெல்ல வரட்டும். அவர்கள் தம் அரையில் கட்டிய கச்சையின் கட்டை அவிழ்த்து இளைப்பாறி விரும்பியவாறு நடந்து மெல்ல மெல்ல வரட்டும். நாம் முன்னே செல்வோம். இதுவரையில் தீண்டாமல் வைத்திருந்த கூரிய தாற்றுக் கோலால் குதிரையைத் தீண்டி நாம் விரைந்து செல்லுமாறு தேரைச் செலுத்துக. அதோ, பார். விரும்பத்தக்க அழகு உடைய அந்தக் காட்டுக்கோழி, மழைநீர் ஓடிய அகன்ற நெடிய காட்டில் உலராத ஈரமணலை நன்றாகக் கிளறி, காலையில் கிடைத்த இரையாகிய புழுவைக் கவர்ந்து கொண்டு தன் பெடையைப் பார்க்கின்ற பெருந்தகு நிலையைப் பார்."

தலைவன் :

விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்புஅழித்து அசைஇ
வேண்டுஅமர் நடையர் மென்மெல வருக ;
தீண்டா வைமுள் தீண்டிநாம் செலற்கு
ஏமதி வலவ தேரே ; உதுக்காண்......
காமரு தகைய கான வாரணம்
பெயல்நீர் போகிய வியல்நெடும் புறவின்
புலரா ஈர்மணல் மலிரக் கெண்டி
நாள்இரை கவர மாட்டித்தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே.*

*நற். 21. மருதனிளநாகனார்.

பரி - செல்லுதல். வீங்கு செலல் - நீண்ட பயணம். யாப்பு - கட்டு. அசைஇ - தங்கி. வை - கூரிய. ஏ - செலுத்து. மதி - முன்னிலை அசை. வலவ - பாகனே! புறவு - காட்டு நிலம்.